# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2034 ஆடி 1 வியாழக்கிழமை (17-07-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:231




தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முதலாவது தாக்குதல் தளபதி லெப்.சீலனின் 20ஆவது ஆண்டு நினைவுதினத்தை ஒட்டி அவரது திருவுருவப் படத்துக்கு தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் ஈகச்சுடர் எற்றி அஞ்சலி செலுத்துவதை முதலிரு படங்களிலும் அவருடன் அஞ்சலி செலுத்திய மூத்த தளபதிகளை அடுத்துள்ள படத்திலும் காணலாம்.

# இடைக்கால நிர்வாகம்தான் சமாதானத்தின் திறவுகோல்!

## உலக வங்கிப் பணிப்பாளர் பீற்றர் ஹரால்ட் கூறுகின்றார்

கொழும்பு,ஜூலை17

**அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே தடைப்பட்டிருக்கும் சமாதானப் பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பிக்கப்பட வடக்கு - கிழக்கு இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புத்தான் திறவுகோலாக அமையும் என்று உலக வங்கியின் இலங்கைக்கான நிறைவேற்றுப் பணிப்பாளர் பீற்றர் ஹரால்ட் கூறுகிறார். இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புத் தொடர்பாக அரசு முன்வைக்கும் ஆலோசனைகளை சர்வதேச சமூகம் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றது எனவும் அவர் தெரிவிக்கின்றார்.**

கொழும்பிலுள்ள உலக வர்த்தக நிலையத்தில் நேற்றுக்காலை நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இவற்றைத் தெரிவித்தார்.

2003ஆம் ஆண்டு முதல் 2006ஆம் ஆண்டு வரையிலான நான்கு ஆண்டு காலப்பகுதியில் உலகவங்கி இலங்கைக்கு வழங்கும் பொருளாதார உதவிகள் குறித்து இம்மாநாட்டில் பீற்றர் ஹரால்ட் விளக்கமளித்தார்.

சமாதானம் இல்லாத நாட்டில் எந்த ஓர் அபிவிருத்தியும் வெற்றியளிப்பதில்லை என்பதாலேயே பிரதமர்

(14ஆம் பக்கம் பார்க்க)

## திருகோணமலை அரசடிச் சந்தியில்

# புளொட் அலுவலகம் மீது நேற்றிரவு கிரனேட் வீச்சு!

## 2 பொலீஸார் உட்பட நால்வர் காயம்

திருகோணமலை,ஜூலை17

திருகோணமலை மாவட்டம் அரசடிச் சந்தியில் உள்ள 'புளொட்' அலுவலகம் மீது நேற்றிரவு இனந்தெரியாதோரால் கிரனேட் வீச்சு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நேற்றிரவு 9 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் அந்த அலுவலகத்தில் காவலில் இருந்த 2 பொலீஸ் கான்ஸ்டபிள்களும் புளொட் உறுப்பினர்கள் இருவரும் காயமடைந்தனர். காயமடைந்த நால்வரும் உடனடியாக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லப்பட்டனர்.

(14ஆம் பக்கம் பார்க்க)

# என்.கே.பத்மநாதனின் இறுதிச் சடங்கு இன்று

யாழ்ப்பாணம்,ஜூலை17

புகழ்பூத்த நாதஸ்வர விற்பன்னர் அளவெட்டியூர் என்.கே.பத்மநாதனின் இறுதிச் சடங்குகள் இன்று யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளன.

அன்னாரின் பூதவுடல் நேற்றுக் காலை கொழும்பிலிருந்து இங்கு எடுத்துவரப்பட்டது.

வண்ணார்பண்ணை கில்னர் ஒழுங்கையில் உள்ள அன்னாரின் இல்லத்தில் இன்று காலை 9.00 மணியளவில் இறுதிக்கிரியைகள் இடம்பெறும். அதன்பின் அங்கிருந்து இறுதி யாத்திரை ஆரம்பமாகும். கோம்பையன் மணல் இந்து மயானத்தில் அன்னாரின் உடல் தகனஞ்செய்யப்படும்.

கில்னர் லேன் இல்லத்தில் வைக்கப் பட்டிருக்கும் அன்னாரின் புகழுடலுக்கு நேற்றும் பெரும் எண்ணிக்கையானோர் அஞ்சலி செலுத்தினர். நாடாளுமன்ற உறுப்பினர்கள், பாடசாலை மாணவர்கள் மற்றும் கலைஞர்கள், இந்துமத பிரமுகர்கள் ஆகியோர் அஞ்சலி செலுத்தினர். (ஐ)

## புலிகளின் கப்பல் தாக்கியழிக்கப்பட்ட சம்பவம்:

# கண்காணிப்புக்குழு தலைவரிடம் கேணல் சூசை கடும் ஆட்சேபம்

கிளிநொச்சி,ஜூலை17

அண்மையில் சர்வதேச கடற்பரப்பில் வைத்து விடுதலைப் புலிகளின் எண்ணெய்க் கப்பல் தாக்கி மூழ்கடிக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக கடற்புலிகளின் தளபதி கேணல் சூசை கடும் கண்டனத்தையும் ஆட்சேபத்தையும் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவரிடம் நேரில் தெரிவித்தார்.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ரெலிவ்சன் நேற்று முல்லைத்தீவில் கடற்புலிகளின் தளபதி கேணல் சூசையைச் சந்தித்து பேச்சு நடத்தினார்.

நேற்றைய இச்சந்திப்பில் கடலில் இடம்பெறும் யுத்தநிறுத்த மீறல்கள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஸ்ரீலங்கா கடற்படையினர் கடலில் மேற்கொண்டுவரும் யுத்தநிறுத்த மீறல்கள் தொடர்பாக தளபதி சூசை கண்காணிப்புக்குழுத் தலைவருக்கு விரிவாக எடுத்துக்கூறினார்.

அண்மையில் முல்லைத்தீவுக் கடற்பரப்பில் விடுதலைப் புலிகளின் எண்ணெய்க்கப்பல் தாக்கி அழிக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக அவர் தனது கடுமையான கண்டனத்தையும் விசனத்தையும் அப்போது தெரிவித்தார்.

சமாதான சூழலை எப்படியாவது குழப்பவேண்டும் என்ற நோக்கில் கடற்படையினர் மேற்கொள்ளும் விஷமத்தனமான சீண்டல் நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்துவதற்கு கண்காணிப்புக் குழுவினர் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் தளபதி சூசை கண்காணிப்புக் குழுத்தலைவரைக் கேட்டுக்கொண்டார்.

இந்தச் சந்திப்பின் முடிவில் கடற்புலிகளின் படகுகள் சிலவற்றையும் கண்காணிப்புக் குழுத்தலைவர் பார்வையிட்டார். (ஐ-4)

## இணுவில் விபத்தில் ஒருவர் பலி!

இணுவில் பகுதியில் நேற்றிரவு இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் - ஹைஏஸ் வான் விபத்தில் ஒருவர் உயிரிழந்தார்.

நேற்றிரவு 9மணியளவில் கே.கே.எஸ்.-வீதியில் இணுவில் மக்லியோட் வைத்தியசாலைக்கு முன்பாக இடம்பெற்ற இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளில் வந்தவரான புதிய நீதிமன்ற வதி, மல்லாகத்தைச் சேர்ந்த இகேசவன் (வயது39) என்பவரே உயிரிழந்தவராவார்.

(14ஆம் பக்கம் பார்க்க)

## காரைதீவில் வான் கடத்தல்

கொழும்பு,ஜூலை17

அக்கரைப்பற்றிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்றுகொண்டிருந்த வான் ஒன்று நேற்றுக் காரைதீவுப் பகுதியில் வைத்து ஆயுதம் தாங்கிய குழு ஒன்றினால் கடத்திச் செல்லப்பட்டுள்ளது.

காரைதீவு கமநல சேவை நிலையத்துக்கு அருகில் வைத்து வானை வழிமறித்த ஆயுததாரிகள் சிலர், அந்த வானில் பயணம் செய்தவர்களை வீதியில் இறக்கிவிட்டு வானைக்

(14ஆம் பக்கம் பார்க்க)

# முதல் தளபதி சீலனுக்கு தலைவர் பிரபா அஞ்சலி

கிளிநொச்சி,ஜூலை17

தமிழீழ விடுதலைப் புலிகளின் முதலாவது தாக்குதல் தளபதி லெப்டினன்ட் சீலனின் திருவுருவப் படத்துக்கு தலைவர் வே.பிரபாகரன் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தியுள்ளார்.

லெப்டினன்ட் சீலனின் 20ஆவது ஆண்டு நினைவு தினத்தை ஒட்டி வன்னியில் விசேடமாக வடிவமைக்கப்பட்ட பந்தல் ஒன்றில் நேற்றுமுன்தினம் இரவு இந்த நிகழ்வு இடம்பெற்றது.

சீலனின் திருவுருவப் படத்துக்கு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்திய தலைவர் பிரபாகரன், ஈகச்சுடரினையும் ஏற்றினார்.

இந்த நிகழ்வில் மூத்த தளபதிகள், போராளிகள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

சீலனின் 20ஆண்டு நிறைவு தினத்தை ஒட்டி நடத்தப்பட்ட விளையாட்டுப் போட்டிகளில் வெற்றியீட்டிய போராளிகளுக்கு தலைவர் பிரபாகரன் பரிசில் வழங்கிக் கௌரவித்தார். (ஐ-4)

# பயணியின் ரொக்கப்பணத்தை படைச்சிப்பாய் அபகரித்தாராம்!

## மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு

யாழ்ப்பாணம்,ஜூலை17

கிளிநொச்சியில் இருந்து யாழ்ப்பாணம் வரும் வழியில் முகமாலை இராணுவச் சோதனைச்சாவடியில் வைத்து தனது ஒரு தொகைப் பணமும், கிராம அலுவலரினால் உறுதிப்படுத்தப்பட்ட அடையாள அட்டையொன்றும் இராணுவச் சிப்பாய் ஒருவரால் திருடப்பட்டன என்று இளைஞர் ஒருவர் மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

தண்ணீரூற்று, முள்ளியவளையைச் சேர்ந்த துரைராஜா கமலநாதன் (வயது-21) என்பவரே தனது பணமும் அடையாள அட்டையும் இராணுவத்தினரால் திருடப்பட்டன என்று மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளார்.

அவர் தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளதாவது:-

நான் யாழ்ப்பாணத்தில் உள்ள எனது உறவினர் ஒருவரின் வீட்டுக்

(14ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்




யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவப் பிரிவை நிறுவனமயப்படுத்துவதனைக் கண்டித்து சித்த மருத்துவ மாணவர்கள் மேற்கொண்டுவரும் போராட்டம் விஸ்தரிக்கப்பட்டு வருகிறது. கைதடியில் உள்ள சித்த மருத்துவத் துறையின் வாயிலை மூடி பகிஷ்கரிப்புப் போராட்டம் தொடர்கிறது. அங்கு எடுக்கப்பட்ட படங்கள் இவை.

# சொந்தத் திரைப்படம் தயாரிக்க துறைசார் கலைஞர்களே முன்வருக!

## 'நிதர்சனம்' பொறுப்பாளர் அழைப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை17

எமது மக்களின் சொந்தக் கதைகளைத் திரைப்படங்களாகத் தயாரிக்கும முயற்சிகளுக்குத் துறைசார்ந்த கலைஞர்கள் அனைவரது ஒத்துழைப்பையும் வேண்டுகிறோம்.

- இவ்வாறு தெரிவித்தார் விடுதலைப் புலிகளின் 'நிதர்சனம்' நிறுவனத்தின் பொறுப்பாளர் சேரலாதன்.

விடுதலைப் புலிகளின் கலை, பண்பாட்டுக் கழகத்தின் 'நிதர்சனம்' திரைப்பட உருவாக்கற் பிரிவு தயாரித்து வழங்கும் ந.கேசவராஜனின் 'அம்மா நலமா' என்ற முழு நீளத் திரைப்படத்தின் படப்பிடிப்புத் தொடக்க விழா நேற்று மாலை கொக்குவிலில் அமைந்துள்ள கலை, பண்பாட்டுக் கழக அலுவலகத்தில் இடம்பெற்றது. நிகழ்வின் இறுதியில் செய்தியாளர்களுடன் பேசியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

முன்னதாக, 'நிதர்சனம்' திரைப்பட உருவாக்கற் பிரிவுப் பொறுப்பாளர் சங்கர் தலைமையில் நிகழ்வுகள் இடம்பெற்றன. பொதுச் சுடரினை கலை, பண்பாட்டுக்கழகத்தைச் சேர்ந்த வளநாடன் ஏற்றிவைத்தார். தமிழீழ தேசியக் கொடியினை 'நிதர்சனம்' படப்பிடிப்புப் பொறுப்பாளர் தவா ஏற்றினார்.

கலை, பண்பாட்டுக் கழகத்தைச் சேர்ந்த மகிழன் மின் ஆழியை இயக்க, இசையமைப்பாளர் இசைப்பிரியன் ஒளிப்பதிவுக் கருவியை இயக்கி படப்பிடிப்பை ஆரம்பித்து வைத்தனர். 'ஸகிறிப் நெற்' நிறுவன திட்ட இணைப்பாளர் எ.ஞானதாஸ், திரைப்பட 'கட் அவுட்'டைத் திரைநீக்கம் செய்துவைத்தார்.

'நிதர்சனம்' பொறுப்பாளர் சேரலாதன் மேலும் கூறியதாவது:-

'அம்மா நலமா' என்ற முழு நீளத் திரைப்படத்தை ந.கேசவராஜன் இயக்குகிறார். இதன் படப்பிடிப்புகள் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு போன்ற இடங்களில் நடைபெறவுள்ளன.

இப்படத்துக்கு இசைப்பிரியன் இசையமைக்கிறார். பாடல்களை புதுவை இரத்தினதுரை மற்றும் வீரா ஆகியோர் எழுதியுள்ளனர். மூத்த கலைஞர்களான திரு.திருமதி தைரியநாதன், ஏரம்பு, திருமதி யஸ்மின் மற்றும் செல்வராணி போன்ற முன்னணிக் கலைஞர்களும் இத்திரைப்படத்தில் நடிக்கின்றனர்.

வெளிநாட்டுக்குச் சென்றுவிட்ட பிள்ளைகளால் தனிமையில் விடப்பட்ட தாய், போராட்ட சூழலில் தனிமைக்குத் தள்ளப்பட்ட தாய் போன்ற நிலைமைகளை உளவியல் சார்ந்த ரீதியில் அணுக இத்திரைப்படம் முயற்சிக்கும். 'நிதர்சனம்' திரைப்பட உருவாக்கல் பிரிவின் பொறுப்பாளர் சங்கர் இத்திரைப்படத் தயாரிப்பு மற்றும் நிர்வாகப் பணிகளை மேற்கொள்கிறார்.

ஒளிப்பதிவை டயஸ்ும் இணை ஒளிப்பதிவை தவநீதனும் மேற்கொள்கின்றனர். உதவி ஒளிப்பதிவாளர்களாக குணவேந்தன், செல்வன் மற்றும் புரட்சிநிலவன் ஆகியோர் மேற்கொள்ள, புகைப்படப்பிடிப்புகளை புரட்சிவேந்தன் மேற்கொள்கிறார்.

இத்திரைப்படத்தில் பணியாற்றுவதற்கென சகல துறைசார்ந்த கலைஞர்களையும் வரவேற்கிறோம். தாய் மண்ணில் பாசமுள்ள கலைஞர்கள இதற்கு ஆக்கமும் ஊக்கமும் தரவேண்டும். மண்ணை நேசிப்பது பெற்ற தாயை நேசிப்பது போன்றதாகும்.

இந்தத் திரைப்படத்தில் எந்தத் துறையிலாவது பணியாற்ற விரும்புவோரும் நடிக்க விரும்புபவர்களும் எம்முடன் தொடர்புகொள்ளலாம்.

இதுபோன்று, வேறு திரைப்படத் தயாரிப்பு முயற்சிகளில் ஈடுபடுவோரும் எம்முடன் தொடர்புகொள்ளலாம். அவர்களுக்குத் தேவையான சாதன உதவிகளையும் மற்றும் ஆதரவையும் வழங்க நாம் காத்திருக்கின்றோம்; அவர்களை வரவேற்கின்றோம்

- இப்படி சேரலாதன் தெரிவித்தார்.

(எ-9)

# காணாமற்போனோரின் விசாரணைக்கு அழைப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை17

வடபகுதியில் கைதுசெய்யப்பட்டு காணாமற்போனோர் தொடர்பாக ஜனாதிபதி ஆணைக்குழுவின் பணிப்புரைக்கு அமைய விசாரணைகளை மேற்கொண்டுவரும் குற்றப் புலனாய்வுப் பொலீஸார் காணாமற்போனவர்களின் உறவினர்கள் ஆறுபேரை யாழ். பொலீஸ் நிலையத்துக்கு அழைத்துள்ளனர். அழைக்கப்பட்டுள்ளவர்கள் இன்று வியாழக்கிழமை முதல் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை வரையான நாள்களுள் ஒன்றுக்குச் சமுகமளிக்க முடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

காணாமற்போனவரினதும் அழைக்கப்பட்டவர்களினதும் பெயர் விவரம் முறையே வருமாறு:-

★ தேவபாலன் செந்தன் தர்மபாலன், கச்சேரி வீதி, சாவகச்சேரி - அழைப்பு : பெற்றோர் அல்லது உறவினர்.

★ செல்லையா பாலசிங்கம், கைதடி, நுணாவில் - அழைப்பு : சண்முகம் அல்லது உறவினர்.

★ பாலன் சிவராசா, மட்டுவில் கிழக்கு - அழைப்பு : பி.சரஸ்வதி அல்லது உறவினர்.

★ அமலேஸ்வரன் அமலரூபன் புங்குடுதீவு 7ஆம் வட்டாரம் - அழைப்பு : பெற்றோர் அல்லது உறவினர்.

★ சரவணமுத்து ஸ்ரீதரன், குருசபடி வீதி, மிருசுவில் - அழைப்பு: பெற்றோர் அல்லது உறவினர்

★ சுப்பிரமணியம் சுபநேசன், மட்டுவில் தெற்கு - அழைப்பு : பெற்றோர் அல்லது உறவினர்.

(எ-9)

# இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு: முஸ்லிம் மக்களின் யோசனைகள் தயார்

## காங்கிரஸ் செயலாளர் அலி தகவல்

கொழும்பு,ஜூலை17

வடக்கு - கிழக்கு இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு தொடர்பாக முஸ்லிம் மக்களின் தரப்பில் முனவைக்கப்படவேண்டிய யோசனைகள் தயாராகிவிட்டன. நாளை நடைபெறவுள்ள முஸ்லிம் காங்கிரஸின் அரசியல் உயர்பீட கூட்டத்தில் அவை பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்படும்.

- இவ்வாறு நேற்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் ஹசன் அலி தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

இடைக்கால நிர்வாகம் தொடர்பாக அறிக்கை தயாரிப்பதற்கு அரசியல் உயர்பீடம் அமைச்சர் ரவூப் ஹக்கீம் தலைமையில் குழுவொன்றைத் தெரிவுசெய்திருந்தது. அந்தக் குழு கடந்த மூன்று வாரங்களாக இதுபற்றிக் கூடி ஆராய்ந்து அறிக்கையைத் தயாரித்துள்ளது.

வடக்கு-கிழக்கு முஸ்லிம் நாடாளுமன்ற ஒன்றியத்தின் அபிப்பிராயங்களையும் கேட்டுக் கலந்துரையாடிய பின்னரே அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் நூர்தீன் மசூர், தேசிய ஐக்கிய முன்னணியின் பிரதித் தலைவர் எம்.எஸ்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் ஆகியோர் அறிக்கைக்கு வரவேற்புத் தெரிவித்துள்ளனர்.

அறிக்கைக்கு முஸ்லிம் காங்கிரஸின் அரசியல் உயர்பீடத்தின் அங்கீகாரம் கிடைத்ததும், அரசாங்கத்தினூடாக அது புலிகளிடம் சமர்ப்பிக்கப்படும்.

- இவ்வாறு அவர் தெரிவித்தார்.

(எ)

## ஓமந்தை ம.வி. நேற்றுமுதல் சொந்த இடத்தில்

ஓமந்தை,ஜூலை17

ஓமந்தை மத்திய மகாவித்தியாலயம் கடந்த ஆறு வருடங்களின் பின்னர் நேற்றுமுதல் மீண்டும் சொந்த இடத்தில் இயங்கத் தொடங்கியுள்ளது.

கடந்த 1997ஆம் ஆண்டு நடைபெற்ற ஜெயசிக்குறு படை நடவடிக்கையின்போது இடம்பெயர்ந்து இப்பாடசாலை கடந்த 6 வருடங்களாக குஞ்சுக்குளம் பகுதியில் இயங்கிவந்தது.

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான சிவசக்தி ஆனந்தன் நேற்று வைபவ ரீதியாக பாடசாலை மண்டபத்தைத் திறந்து வைத்தார்.

(எ-4)

## விவசாயக் குழுக் கூட்டம்

கொக்குவில்,ஜூலை17

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட பிரதேச விவசாயக் குழுக் கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கும், கடற்றொழிலாளர் சங்கக் கூட்டம் காலை 11.30 மணிக்கும் உதவி அரசாங்க அதிபர் ஜே. எக்ஸ்.செல்வநாயகம் தலைமையில் பணிமனையின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இதில் சம்பந்தப்பட்ட திணைக்கள அதிகாரிகள், சங்கப் பிரதிநிதிகள் கலந்துகொள்வர்.

(எ-76)

## என்.கே.பி. மறைவுக்கு அனுதாபச் செய்திகள்

# உலகெங்கும் எல்லோராலும் மதிக்கப்பட்ட ஒரு கலைஞன்

பிரபல நாதஸ்வர விற்பன்னர் என்.கே.பத்மநாதனின் மறைவுக்கு அஞ்சலி தெரிவித்து இரங்கல் செய்திகள் விடுக்கப்பட்டு வருகின்றன.

அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் சி.வி.கே.சிவஞானம் விடுத்த செய்தி வருமாறு:-

தமிழீழத்தின் தலைசிறந்த நாதஸ்வரக் கலைஞர் கலாசூரி என்.கே.பத்மநாதன் அவர்களின் அமரத்துவம் இந்த மண்ணுக்கு ஈடுசெய்யமுடியாத இழப்பாகும்.

சுமார் ஐம்பது வருட காலமாக சைத்தமிழ் மரபினை இம்மியளவும் வழுவாது பின்பற்றி கலைச்சேவை செய்த ஒரு பெருந்தகையின் இனிய இசை இனிக் கேட்கமுடியாதவாறு ஓய்ந்துவிட்டது. பலநூறு கலைஞர்களை உருவாக்கி அவர்களுக்கு வழிகாட்டியாகவும், முன்னோடியாகவும், குருவாகவும் விளங்கிய நாதஸ்வர மேதை அமரர் பத்மநாதன் ஆவார். இக்கட்டான எல்லாக் காலத்திலும் இந்த மண்ணிலேயே வாழ்ந்தவர். முழுக்கலை உலகிலுமே சகலராலும் ஏகமனதாகக் கௌரவித்து மதிக்கப்பட்ட ஒரேயொருவர் இவர். தமிழர் வாழும் பிறநாடுகள் எல்லாவற்றிலும் கச்சேரி செய்த பெருமைக்குரியவர். இந்தியக் கலைஞர்களுக்கு எந்தவிதத்திலும் குறைவின்றி அவர்களை விஞ்சிநின்ற பெருமையும் உடையவர்.

நல்லூர் முருகனை நாள்தோறும் பூசித்து இசை அர்ச்சனை செய்த அன்னாரின் ஆத்மா, நல்லைக் கந்தனின் பாதாரவிந்தத்தில் ஆறுதலும் அமைதியும் பெற பிரார்த்திப்பதுடன், அன்னாரது பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறது - என்றுள்ளது.

(ஐ)

# ஈழத்து இசை உலகிற்கு பெருமை சேர்த்தவர்

அகில இலங்கைக் கம்பன் கழகம் விடுத்த அனுதாபச் செய்தியில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

தனது 72ஆவது வயதில் இயற்கை அடைந்துள்ள, உலகப்புகழ்பெற்ற நாதஸ்வர மேதை திருமிகு என்.கே.பத்மநாதன் அவர்களுக்குக் கம்பன் கழகம் தனது அஞ்சலியைத் தெரிவித்துக்கொள்கிறது.

நான்கு தசாப்தங்களுக்கும் மேலாக அமரர், நல்லூர்க் கந்தசுவாமி தேவஸ்தானத்தின் ஆஸ்தான வித்துவானாக இருந்து ஈழத்து மரபிசைத்துறையின் வளர்ச்சிக்குப் பெருந்தொண்டாற்றியுள்ளார். அவர் நாதஸ்வரத் துறையில் உலகளாவிய ரீதியில் பெற்ற பெரும்புகழ், ஈழத்து இசையுலகத்திற்குப் பெருமை சேர்த்து வந்திருக்கிறது.

அமரர் பத்மநாதன் அவர்கள் கம்பன் கழகத்தின் தோற்ற காலந்திலிருந்தே, கழகத்தின் இசையரங்குகளைப் பெருமை செய்தவர். ஸ்ரீதியாகராஜ சுவாமிகளின் உற்சவங்களின் போதும், வருடாந்தக் கம்பன் விழாக்களின் திருநாள் மங்கலங்களின்போதும் அமரரின் இசை எம்மையெல்லாம் மெய்சிலிர்க்க வைத்துள்ளது. அமரர் என்.கே.பத்மநாதன் அவர்களுக்கு 'கலாசூரி' விருது வழங்கப்பட்ட பொழுது, விழா எடுத்துப் பாராட்டிய எமது கழகம் 'கம்பகலாநிதி' பேராசிரியர் இராதாகிருஷ்ணன் அவர்களூடு கௌரவமும் செய்து மகிழ்ந்தது.

ஈழ இசையுலகையெல்லாம் சோகத்திலாழ்த்தி இயற்கை அடைந்துள்ள என்.கே.பதமநாதன் அவர்களது ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம். - என்றுள்ளது.

(ஐ)

# சர்வதேச கலை உலகுக்கும் ஈடுசெய்ய முடியாத இழப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை17

ஈழத்துக்கு மட்டுமன்றி சர்வதேச கலையுலகுக்கும் என்.கே.பத்மநாதனின் இழப்பு பேரிழப்பாகும்.

அகில இசை வேளாளர் சங்கத் தலைவர் எஸ்.ஆர்.ஞானசுந்தரம் விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

ஈழத்தமிழ் மக்களுக்காக மட்டும் தனது தெய்வீகக் கலைப் பணியை மேற்கொள்ளாமல் மேற்கு நாடுகளுக்கும் சென்று எமது கலையை வளர்ப்பதில் தனது பங்களிப்பை வழங்கியவர் என்.கே.பத்மநாதன். அவரின் இழப்பு எமக்கு மட்டுமல்ல, சர்வதேச கலை உலகுக்கும் ஈடுசெய்யமுடியாத இழப்பாகும்.

தனது தெய்வீக கலைப் பணிக்கு அப்பால் எமது சமூகத்தின் வளர்ச்சியிலும் மறுமலர்ச்சியிலும் இவர் தம்மை அர்ப்பணித்து வாழ்ந்தார். சமூகப் பணிக்கு அவர் காட்டிச்சென்ற வழியில் நாம் முன்னேறி சமூகத்தில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவதே அவருக்கு நாம் அளிக்கும் அஞ்சலியாகும் - என்றுள்ளது.

(எ)

# இசைக் கலைஞர்களின் இமயம்!

யாழ்ப்பாணம்,ஜூலை17

இசைக்கலைஞர்களுக்கு எல்லாம் இமயமாய், வழிகாட்டியாய் விளங்கியவர் என்.கே.பத்மநாதன்.

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா விடுத்த செய்திக்குறிப்பில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

ஈழத்து நாதஸ்வர இசைமேதை அளவெட்டி என்.கே.பத்மநாதன் இசையுலகை விட்டுப் பிரிந்துவிட்டார் என்ற செய்தி பேரதிர்ச்சியையும், மாளாத துக்கத்தையும் தந்துவிட்டன.

அரைநூற்றாண்டு காலம் சர்வதேசத்தில் - குறிப்பாகத் தமிழர் இதயங்களில் - தனக்கெனத் தனியிடத்தை நாதஸ்வர இசையினால் இவர் பிடித்திருந்தார். மிகுந்த சைவசீலமும் ஆன்மீகப் பற்றும் நிறைந்த இவர், நெற்றியில் நீறும், சந்தனமும் வாயினில் தாம்பூல நறுமணமும், மேனியில் வெண்ணிற ஆடையும் அவர் கோலத்தைத் தனித்துவமாகவே அடையாளப்படுத்தி நிற்கின்றன.

நான்கு தசாப்தங்களுக்கு மேலாக நல்லூர்க் கந்தன் திருக்கோயிலில் இசைவேள்வி நிகழ்த்தி ஆன்ம ஈடேற்றம் பெற்றவர் இவர். ஆண்டவன் சந்நிதிகளில் இறைவனை வாழ்த்திட வந்தோரெல்லாம் இசையால் மயங்கி இறைவனையடைந்தோம் எனும் உணர்வு பெற்றிடப் பக்தர்களை வயப்படுத்திய ஞானி. இசைக் கலைஞர்களுக்கோர் இமயமாய் நாதஸ்வரத்தை இலக்கணந்தவறாது இசைத்து உயர்ந்தவர். நாதஸ்வர இசைமரபு அருகி வரும் இக்காலத்தில் என்.கே.பத்மநாதனின் இழப்பு ஈடுசெய்யமுடியாத பேரிழப்பாகும்.

நாதஸ்வர இசை அருகிவிடாமல் உலகில் உயர்ச்சியடையவும், வளர்ச்சி பெற்றிடவும் நாதஸ்வர மேதை பத்மநாதன் நினைவில் நாதஸ்வர இசைக் கல்லூரி நிறுவி நாதஸ்வரம், தவில் முதலான இசைச் செல்வத்தைப் பேணிக்காக்கவும், வறுமையில் வாடும் கலைஞர்களை வாழ்விக்கவும், பொருத்தமான நிதி ஆதாரங்களை நிறுவ வேண்டியதும் எம் கடனாகும். அதுவே நாம் நாதஸ்வரமேதை பத்மநாதனுக்குச் செய்யும் அஞ்சலியின் பயனாகும் - என்று அதில் உள்ளது.

# அணுகுண்டு தயாரிக்கத் தேவையான புளூட்டோனியம் எம்மிடம் உண்டு

## வடகொரியா அறிவிப்பு

வாஷிங்ரன்,ஜூலை17

அணுகுண்டுகளைத் தயாரிப்பதற்குத் தேவையான - போதியளவு - புளூட்டோனியம் தம்மிடம் இருப்பதாக வடகொரியா தெரிவித்துள்ளது. இந்த விடயம் குறித்து அமெரிக்கா தீவிரமாகக் கவனம் செலுத்தி வருகின்றது.

எனினும், வடகொரியாவின் மேற்படி கூற்று எவ்வளவு தூரம் உண்மையானது என்று தாம் உறுதிசெய்யவில்லை என்று வெள்ளை மாளிகைப் பேச்சாளர் தெரிவித்தார்.

வடகொரியாவின் அணுத்திட்டத்தை நிறுத்துவதற்கு சீனா, ஜப்பான் மற்றும் தென்கொரியாவுடன் இணைந்து தாமும் தொடர்ந்து பணியாற்றி வருவதாகவும் வெள்ளை மாளிகை வட்டாரங்கள் தெரிவித்தன.

நியூயோர்க்கில் இடம்பெற்ற இராஜதந்திரிகள் கூட்டம் ஒன்றில், ஆயுதத் தரத்திலான புளூட்டோனியத்தை தாம் மீண்டும் உற்பத்தி செய்துள்ளதாக வடகொரியா தெரிவித்துள்ளது.

இந்த விடயம் குறித்து சீன வெளிவிவகார அமைச்சர் லி ஷோஜிங் நேற்று அமெரிக்க வெளிவிவகாரச் செயலர் கொலின் பவலுடன் தொலைபேசியில் உரையாடியுள்ளதாக சீனப் பத்திரிகைகள் தெரிவித்தன.

"இந்தப் பேச்சுக்களின் போது இரு தரப்புக்களும் தமக்கிடையிலான தொடர்புகளையும் ஏனைய ஒத்துழைப்புக்களையும் எதிர்காலத்திலும் தொடர்வதற்கும் இணங்கி உள்ளன என்று அந்தச் செய்திகள் மேலும் தெரிவித்தன.

இதற்கிடையே-

வடகொரியாவின் அணுத்திட்டம் தொடர்பான விடயத்தினால் எவ்வளவு முடியுமோ அவ்வளவு விரைவாக இந்த ஆண்டிலேயே அமெரிக்கா அந்த நாட்டுடன் போருக்குப் போகக் கூடும் என்று அமெரிக்காவின் மூத்த அரசியல்வாதி ஒருவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கிளின்ரன் அதிபராக இருந்த காலத்தில் பாதுகாப்பு செயலாளராகக் கடமையாற்றியவர் வில்லியம் பெரரி. இவரே மேற்கண்ட எச்சரிக்கையை விடுத்துள்ளார். (ம)

# படகு கடத்தும் முயற்சியில் கியூபாவில் மூவர் உயிரிழப்பு!

ஹவானா,ஜூலை17

கியூபாவில் இருந்து அமெரிக்காவுக்கு சட்டவிரோதமாகச் செல்வதற்கென படகு ஒன்றைக் கடத்துவதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சியின்போது ஏற்பட்ட சண்டையில் மூன்று பேர் உயிரிழந்தனர்; இருவர் காயமடைந்தனர்.

இந்த முயற்சியில் தோல்வி அடைந்த கடத்தல்காரர்கள் மற்றொரு படகைக் கடத்தி அதிலிருந்தவர்களைப் பிணைக் கைதிகளாகப் பிடித்துக் கொண்டுசென்றுள்ளதாக கியூபா அரசு அறிவித்துள்ளது.



உயிரிழந்தவர்களின் உறவினர் ஒருவர் சோகத்தில்

கியூபாவில் இருந்து அமெரிக்கா சென்று தஞ்சம் கோருவதற்காக முதலில் மீன்பிடிப் படகு ஒன்றைக் கைப்பற்ற மூன்று ஆண்கள், ஒரு பெண், இருகுழந்தைகள் அடங்கிய குடியேற்றக்காரர் குழு முயன்றுள்ளது. மேற்கு மாகாணமான பினர்டில் றியோவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

45கலிபர் றிவோல்வர் மற்றும் கத்திகள் என்பவற்றைப் பயன்படுத்தி அவர்கள் இந்தத் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர். திங்களன்று நடந்த இந்தக் கடத்தல் முயற்சியின்போது ஏற்பட்ட சண்டையில் குடியேற்றக்காரர்களால் மூவர் கொல்லப்பட்டனர்; இருவர் காயமடைந்தனர்.

அதன் பின்னரே இரண்டாவது சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதில் குறைந்தது 27 பயணிகள் இருந்த கப்பல் ஒன்று குடியேற்றக்காரர்களால் கடத்திச் செல்லப்பட்டுள்ளதாக கியூப உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. இது செவ்வாய்க்கிழமை இடம்பெற்றுள்ளது.

குடியேற்றக்காரர்களால் கொல்லப்பட்ட மூவரில் 10 வயதுச் சிறுவன் ஒருவனும் அடக்கம் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ம)

## டைகிரிஸ் நதிக்கரை கிராமங்களில் சதாம் தஞ்சம்?

லண்டன்,ஜூலை17

பகதாத்துக்கு வடக்கே டைகிரிஸ் நதி அருகே உள்ள கிராமங்களில் ஈராக் முன்னாள் ஜனாதிபதி சதாம ஹுசைன் பதுங்கியுள்ளார் என்று ஈராக் இராணுவ முன்னாள் உளவுத்துறை அதிகாரி ஜெனரல் வஃபிக் அல சமராயை மேற்கோள்காட்டி பிரிட்டிஷ் நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.


அதில் கூறப்பட்டுள்ளதாவது:-

அமெரிக்கப் படையினரால் தேடப்பட்டு வரும் அதிமுக்கிய நபர்களான சதாமும், இரசாயன ஆயுதப் பிரிவின் முன்னாள் தலைவர் கெமிக்கல் அலியும் பக்தாத்துக்கும் சமர்ரா நகருக்கும் இடையே 60 கி.மீ. சுற்றளவுக்குள் உள்ள கிராமப் பண்ணை வீட்டில் பதுங்கியுள்ளனர்.

ஏனெனில், இந்தக் கிராமங்கள் அதிக சனநெருக்கடி மிகுந்த பகுதி. தேடுதல் நடத்துவது மிகவும் கடினம். மேலும் இது சதாமின் தீவிர ஆதரவாளர்களின் பகுதியாகும் என்று சமராய் தெரிவித்துள்ளார் - இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈரான் மற்றும் வளைகுடாப் போரின் போது ஈராக்கின் இராணுவ உளவுத்துறை அதிகாரியாக இருந்தவர் வஃபீக் அல் சமராய்.

அமெரிக்கப் படையினருக்கு உதவிபுரிவதால் தனது வீட்டின் மீது கடந்த 10 தினங்களுக்குமுன் ரொக்கட் குண்டுவீச்சு நடந்ததாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



வீதி ரோந்தில் ஈடுபடும் அமெரிக்கச் சிப்பாய்

# அமெரிக்க வாகன தொடரணி மீது பக்தாத்தில் குண்டுத் தாக்குதல்!

பக்தாத்,ஜூலை17

ஈராக் தலைநகர் பக்தாத்துக்கு சற்று மேற்கே உள்ள இடத்தில் சென்றுகொண்டிருந்த அமெரிக்க இராணுவ வாகனத் தொடரணிமீது நேற்று குண்டுத் தாக்குதல் இடம்பெற்றது. இதில் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார். மேலும் இருவர் காயமடைந்தனர்.

20இராணுவ வாகனங்கள் கொண்ட தொடரணி வீதியோரத்தில் கைவிடப்பட்டுக்கிடந்த அழிவுற்ற கார் ஒன்றைக் கடந்து சென்ற போது இந்தக் குண்டுவெடிப்பு இடம்பெற்றதாக தொடரணியில் சென்ற படையினர் தெரிவித்தனர்.

அந்த அழிந்த நிலையில் காணப்பட்ட காருக்குள்ளேயே குண்டு மறைத்து வைக்கப்பட்டிருக்கலாம் என்றும் படையினர் நம்புகின்றனர்.

ஈராக் போர் ஆரம்பித்த பின்னர் இதுவரை 147 அமெரிக்கப் படையினர் உயிரிழந்துள்ளனர். இது 1991 ஆம் ஆண்டு வளைகுடாப் போரின் போது அமெரிக்கப் படையினருக்கு ஏற்பட்ட இழப்புகளுக்குச் சமனாகும். இவர்களில் 30இற்கும் மேற்பட்டவர்கள், ஈராக்கில் போர் முடிந்ததாகக் கடந்த மே முதலாம் திகதி அதிபர் புஷ் அறிவித்த பின்னர் உயிரிழந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)



கொலம்பிய அதிபர் அல்வரோ உருபி, நாட்டின் வடகிழக்குப் பகுதியில் உள்ள அறகுவா என்ற நகரத்தில் இராணுவத் தளம் ஒன்றுக்கு விஜயம் செய்தார். அங்கு அவர் மூன்றுநாள் தங்கியிருப்பார்.

## சதாம் ஆட்சி வீழ்ந்தபின் வெறித்தனம்

# பாலியல் கொடுமைகளினால் ஈராக் பெண்கள் சீரழிகின்றனர்!

ஈராக்கில் சதாம் ஹுசைனின் ஆட்சி கவிழ்க்கப்பட்டதன் பின்னர் பெண்கள் மீதான பாலியல் வன்முறைகள் அதிகரித்துவிட்டன என்றும், இதனால், பெண்கள் பொதுவாழ்வில் ஈடுபட முடியாத வகையில் வீடுகளுக்குள் தஞ்சமடைந்துள்ளனர் என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன.

பெண்கள் பாலியல் வன்முறைகளுக்கு பலியாகக் கூடியநிலையானது அமெரிக்கப் படையினரும், பக்தாத்தின் நிர்வாகமும் பொதுமக்களுக்கு பாதுகாப்பு வழங்காத நிலையினாலேயே ஏற்பட்டது என்று அமெரிக்க மனிதவுரிமை நிறுவனம் ஒன்று தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

பகல் வேளைகளில் பெண்கள் வதிகளில் வைத்துக் கடத்தப்படுகின்றனர். பாலியல் வன்முறைச் சம்பவங்கள் பக்தாத்தில் அதிகரித்துவிட்டன. பெண்கள் தமது பாடசாலைகளுக்கும் தொழில்களுக்கும் செல்வதற்கு அஞ்சுகின்றனர். இக்குற்றச் செயல்கள் பற்றி போதிய விசாரணைகள் நடத்தப்படுவதுமில்லை.

ஈராக்கிய பொலீஸார் இவற்றை முன்னுரிமை அடிப்படையில் பார்க்கவில்லை. இன்று ஏற்பட்டுள்ள பாதுகாப்பு வெற்றிடமே இதற்கு முக்கிய காரணம் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே,

அமெரிக்கப் படையினர் தேவைக் கதிகமாக ஈராக்கில் தங்கி நிற்கப் போவதில்லை என்றும், அதற்கு முன் ஈராக்கில் அரசாங்கம் ஒன்றை அமைக்க வேண்டும் என்றும் ஈராக்கில் நிர்வாகப் பொறுப்பேற்றிருக்கும் அமெரிக்க அதிகாரி போல் பிறிமர் கூறியுள்ளார்.



அரசியல் யாப்பு நிறைவேற்றப்பட்டதும் முழு இறைமையுள்ள ஈராக்கிய அரசாங்கமொன்றை அமைப்பதற்கான ஜனநாயக முறைத் தேர்தல் நடத்தப்படும். அத்துடன், கூட்டுப்படைகளின் பொறுப்புக்கள் முடிந்துவிடும். எவ்வளவு காலம் கூட்டுப்படைகள் இங்கு இருக்கப்போகின்றன என்பது ஈராக்கியர்களின் கையில் உள்ள தீர்மானமாகும் என அவர் மேலும் தெரிவித்தார்.

ஈராக்கிலுள்ள பிரிட்டிஷ் உயரதிகாரி ஜோன் சவேர்ஸ் கூறுகையில், தேர்தல் அடுத்த ஆண்டு முற்பகுதியில் நடைபெறக்கூடும் என்றும், அதன் பின்னர் அமையக்கூடிய அரசாங்கம் விரும்பும் வரையில் பிரிட்டனின் படைகள் அங்கு இருக்கும் என்றும் தெரிவித்தார். போரினால் களைப்படைந்த அமெரிக்கப் படையினரைத் திருப்பியழைக்குமாறு அமெரிக்க மக்களும் காங்கிரஸ் கட்சியினரும் அழுத்தம் கொடுத்து வருகின்றனர். ஈராக்கிலுள்ள படையினரும் செப்ரெம்பர் மாதத்துடன் நாடு திரும்பும் எதிர்பார்ப்புக்களைக் கொண்டுள்ளனர்.

ஆனால், வளைகுடாவிலேயே காலவரையொன்று குறிப்பிடப்படாமல் தங்கியிருக்கவேண்டும் என்று அமெரிக்கப் படையினருக்கு அறிவுறுத்தப்பட்டிருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை,

புதிதாக உருவாக்கப்பட்டுள்ள இடைக்கால நிர்வாகக் குழு சதாம ஹுசைனின் ஆட்சிக்காலத்தில் நடைபெற்ற யுத்தக் குற்றங்களை விசாரிக்கும் விசாரணை மன்றம் ஒன்றை நிறுவுவதற்குத் தீர்மானித்துள்ளது.

இந்த விசாரணை மன்றம் சதாம் காலத்து மனிதப் புதைகுழிகள் பற்றிய விவரங்களையெல்லாம் ஆராயும் என்று இடைக்கால நிர்வாகக் குழு தெரிவித்துள்ளது.

ஈராக்கில் உள்ள மொத்தம் ஏழு மனிதப் புதைகுழிகளில் 18ஆயிரத்திற்கும் அதிகமான சடலங்கள் இருப்பதாக அறிக்கை ஒன்றில் அது தெரிவித்துள்ளது.

விசாரணை மன்றம் அமைப்பதற்கான குழுவொன்று குர்திஷ் நீதிபதி தாரா நோர் அல் டின் என்பவர் தலைமையில் அமைக்கப்பட்டுள்ளது. இவர் சதாமின் ஆட்சிக்காலத்தில் எட்டு மாதங்கள் சிறையில் அடைக்கப்பட்டிருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

1983இல் 8ஆயிரம் குர்திஷ் மக்கள் படுகொலை செய்யப்பட்டமை 1991 வளைகுடாப் போரின் பின்னர் 3லட்சம் ஷியா முஸ்லிம்கள் படுகொலை செய்யப்பட்டமை உட்பட சதாம் ஹுசைன் காலத்துக் குற்றச் செயல்களை இந்த விசாரணை மன்றம் விசாரிக்கும். (ம)

# தலிபான்களின் தாக்குதலில் ஐந்து பொலீஸார் மரணம்!

ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் நடத்திய அதிரடித் தாக்குதலில் ஐந்து பொலீஸார் கடந்த ஞாயிற்றுக்கிழமை உயிரிழந்தனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கந்தகார் நகருக்கு வடமேற்காக உள்ள கேரக் மாவட்டத்தின் பொலீஸ் நிலையம் மீது தலிபான்கள் திடீர்த் தாக்குதலை நடத்தினர்.

வெடிகுண்டுகள், துப்பாக்கிகள் சகிதம் இரவு நேரம் பொலீஸ் நிலையத்தினுள் புகுந்த தலிபான்கள், அங்கு சரமாரியான தாக்குதலை நடத்தினர்.

இத்தாக்குதலில் பொலீஸ் நிலைய பொறுப்பதிகாரி உட்பட ஐவர் உயிரிழந்தனர். மேலும் இருவர் காயமடைந்தனர். அண்மைக்காலமாக ஆப்கானிஸ்தானில் இது போன்ற தாக்குதல்கள் அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் நடத்திய அதிரடித் தாக்குதலில் ஐந்து பொலீஸார் கடந்த ஞாயிற்றுக்கிழமை உயிரிழந்தனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## புரூண்டியின் தலைநகரில் சண்டை!

புருனே,ஜூலை17

ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான புருண்டியின் தலைநகரில் அரச படையினருக்கும் தீவிரவாதிகளுக்கும் இடையே கடும் சண்டை ஆரம்பித்துள்ளது.

தேசிய விடுதலைப் படை என்ற தீவிரவாத இயக்கத்துக்கும் அரச படைக்கும் இடையே கடந்த வாரம் ஆரம்பித்த சண்டையே தற்போது தலைநகருக்குப் பரவியுள்ளது.

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

SSA-250m அவுசா அம்பிளி வயர்கள் H.M.T-30 லைன் ராண்ஸ் போமர்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு: ம.மயூரன், மஞ்சவனப்பதி வீதி, கொக்குவில் மேற்கு. (20339)

குருநகரில் இயங்கிவரும் வீடியோ சென்ரருக்குரிய வீடியோ கசற், T.V., டெக், C.Dக்கள் மற்றும் அதற்குரிய சகல சாதனங்களும் விற்பனைக்குண்டு. தொடர்ந்தும் கடை நடத்துவதற்கு ஒழுங்கு ... ப்து தரபபடும். தொடர்பு: இல.167, பழைய பூங்கா வீதி, சுண்டுக்குளி. T.P. ...-6125280. (20316)

சோலருடன் மோட்டோரோலா தொலைபேசி, வீடுகளுக்குத் தொடர்பு கொடுக்கக்கூடிய கைத் தொலைபேசி என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: K.பீதாம்பரம், இலந்தைக்காடு, வல்வெட்டித்துறை. T.P.070 212597. (C-28973)

பாவித்த மிகவும் நல்ல நிலையிலுள்ள Sony 20 - 60 வகையினைச சேர்ந்த இரு T.V.களும் இரு டெக்குகளும் விற்பனைக்குண்டு. தொடர்பு: இல.167, பழைய பூங்கா வீதி, சுண்டுக்குளி. T.P.077-6125280. (20315)

பயன்படுத்திய தட்டச்சு (தமிழ்) இயந்திரம், ரியூப்லைற் பிறேம்கள், பழைய புதிய கசெற் றேடியோக்கள், தொலைபேசிப் பெட்டி என்பன உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: ஆரவீந்திரன், ஆசிரியர், சட்டநாதர் வீதி, திருநெல்வேலி கிழக்கு (சமுர்த்தி வங்கி முன்). (28987)

சொந்தப் பாவனையிலுள்ள ரவுண் AC TOYOTA வான் 51- சகல ஆவணங்களுடனும் விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை. தொடர்பு தொலைபேசி இல.: 0777 - 734339. (20274)

## வீடு விற்பனைக்கு

சாவகச்சேரி பழைய இலங்கை வங்கிக்கு அருகில் வெளிநாட்டு முறையில் கட்டப்பட்ட வீடு மூன்று பரப்புக் காணியுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு:- மா.கைலாயநாதன், C/o பஞ்சலிங்கம் (ஆசிரியர்), ஐயா கடையடி, மீசாலை. T.P. 0777 047007. (20322)

## தவறிவிட்டது

முகமாலைக்கும் கொடிகாமத்துக்கும் இடையில் செபமாலை ஏசியாவின் அடையாள அட்டை இல. (693422922V) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைக்கவும் யாழ் அரியாலை அரஸ்கோ கட்டடத்தில், யாழ்ப்பாணம். (20327)

198/3, பொன்னப்பா ஒழுங்கை, வண்ணார்பண்ணையைச் சேர்ந்த மயில்வாகனம் கனகரத்தினம் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல.480453077V), விசேட அடையாள அட்டை, நேவி அடையாள அட்டை என்பன யாழ்ப்பாண நகரில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரியில் ஒப்படைத்துதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (20336)

## கோழிக்குஞ்சு விநியோகம்

நல்ல, தரமான Prima, Broiler குஞ்சுகள் (ரூபா45) வியாழக்கிழமை பிற்பகல் விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவுசெய்யவும். தொடர்பு: குணபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (20291)

## மணமகன் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1962 இல் பிறந்த, கார்த்திகை 2ஆம்பாதம், அரச எழுதுவினைஞராகக் கடமையாற்றும், அழகிய மணமகளுக்கு அரச/தனியார்துறை அல்லது சொந்தமாக வியாபாரஞ் செய்யும் நற்பண்புமிக்க மணமகன் தேவை. தொடர்பு: விளம்பர இல. 1958 C/o உதயன், யாழ்ப்பாணம். (20338)

---

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
### மருத்துவபீடத்திற்கு உடல்களை தானம் செய்யுமாறு கோரிக்கை

யாழ்.பல்கலைக்கழக உடற்கூற்றியல் துறையில் மாணவர்களின் கற்றலுக்குத் தேவையான இறந்த மனித உடல்களை மருத்துவபீடத்திற்கு தயவுசெய்து தானம் செய்யவும்.

(C/28985)(21-12-15) —பதிவாளர்.

---

ஓம் சாந்தி

### ஈடுசெய்யமுடியாத இழப்பு

நாதஸ்வரச் சக்கரவர்த்தி கலாசூரி

### என்.கே.பத்மநாதன்

*அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.*

இசையையே இறைபணியாக்கிப் பரம்பொருளையும் உலகையும் வசப்படுத்திய அன்னாரின் ஈடுசெய்ய முடியாத இழப்பினால் துயருறுகின்ற குடும்பத்தினரும் இசையுலகமும் ஆறுதலடையவும் அன்னாரின் ஆத்மா பரம்பொருளின் திருவடி நிழலினையடையவும் பிரார்த்திக்கின்றோம்.

பிரம்மஸ்ரீ கா.இரத்தினகைலாஸநாதக் குருக்கள்
கார்யகலாமந்திரம்
ஸ்ரீ.முன்னேஸ்வரம் தேவஸ்தானம் - சிலாபம்
ஸ்ரீ.கமலாம்பிகா சமேத ஸ்ரீ கைலாசஸநாத சுவாமி தேவஸ்தானம் - நல்லூர்.
நியந்த்ரீ/பேராசிரியர் கா.கைலாஸநாதக் குருக்கள்
ஞாபகார்த்த சபை.
சிவன்கோவில், நல்லூர். (20342) (21-32-12-15)

---



நாதஸ்வரக் கலாநிதி
நாடறிந்த இசைமேதை
N.K.பத்மநாதன் அவர்களின்

### மறைவுக்கு அஞ்சலி

எமது தமிழீழ மண்ணின் புகழ்பூத்த நாதஸ்வரக் கலாநிதியின் மறைவை எம்மால் தாங்கமுடியவில்லை. கடந்த 35 ஆண்டுகளாக எமது தேவஸ்தானத்தில் மஹோற்சவ காலத்தில் நாத இசையைப் பொழிந்தவர். பல தடவைகளில் எமது தேவஸ்தானத்தால் பொற்பதக்கம் சூட்டிப் பொன்னாடை போர்த்துப் பாராட்டப்பட்டவர். இன்று தேவ உலகம் அவருடைய கான இசையைக் கேட்க அழைத்துவிட்டதுபோலும். அவருடைய இறுதிமூச்சு நல்லூர்க் கந்தனின் பாதார விந்தத்தை அடைந்துவிட்டது என்ன செய்வோம்! கலைத்தாய் கண்ணீர் வடிக்கிறாள். நாமெல்லாம் உருகி உருகிப் புலம்புகிறோம், அம்பாள் அன்னாரின் குடும்பத்துக்கும் எமக்கும் ஆறுதல் அளிக்கட்டும்.

கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி
சமாதான நீதிபதி,
தலைவர் . ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் தெல்லிப்பழை.
(20335)

---

### கண்ணீர்அஞ்சலி



கலாசூரி, நாதஸ்வர கான கலாநிதி
**என்.கே.பத்மநாதன்**

அவர்கள் காலமான செய்தி கேட்டு வேதனையும் அதிர்ச்சியும் ஆற்றொணாத் துயரமும் அடைகின்றோம். அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ்.மத்திய சந்தை, யாழ்ப்பாணம்.
(20334)(21-26-13-18)
பரிபாலனசபை,
ஸ்ரீஞானவைரவர் ஆலயம்.

---

உ
சாவகச்சேரி
### அருள்மிகு ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம்



### வருடாந்த மஹோற்சவம்

*அம்பிகை அடியார்களே!*

கொடியேற்றம்: **19.07.2003 சனி பகல் 10.30 மணி**
தொடர்ந்து 10 நாள்கள் உற்சவம் நடைபெறும்.
ரதோற்சவம்: **27.07.2003 ஞாயிறு பகல் 10.30மணி.**
தீர்த்தோற்சவம்: **28.07.2003 திங்கள் மு.ப. 9.30மணி.**

*குறிப்பு:*
மாதரசிகள் பங்குகொள்ளும் திருவிளக்குபூஜை 01.08.2003 (வெள்ளி) பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறும்.

*அனைவரும் வருக! அன்னை அருள் பெறுக!!*

இங்ஙனம்
தர்மகர்த்தா
(20202) (21-26-13-18)

---


## 20%-25% தள்ளுபடி

COSMO
டீசல் ஜெனரேட்டர்ஸ்




- 5 வர்க்கங்கள்
- 1.8KW முதல் 10KW வரை
- சப்தமற்ற வர்க்கங்கள்
- மின்சாரத்தினால் அல்லது கைகளினால் இயக்கக்கூடியவை
- எண்ணெய் குறையும் நிலையில் தானாகவே இயக்கத்தை நிறுத்திக்கொள்பவை

மேலும் விபரங்களுக்கு
செண்ட் அந்தனீஸ் கொன்சலிடேட்டட் லிமிட்டெட்
516, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு -10.
தொலைபேசி: 337288, 337283-5, 324261-5

Access Graphics


---

கான மழை ஓய்ந்ததோ?
உத்தராயணத்தில் உலகை நீத்த

### உத்தமன் N.K.பத்மநாதன்

தட்சிணாயனம் வருகிறதென்று பயந்து உத்தராயண புண்ணிய காலத்தில் உலகை நீத்த உத்தமனே! உனது "ஜு ஜாவந்தி" ராகத்தை இனி எங்கு எப்போது கேட்பேன்?

- சிவஸ்ரீ தா.மகாதேவக்குருக்கள்
காயத்ரீபீடம்.
இணுவில். (20341)(21-32-13-18)

---

### கண்ணீர் அஞ்சலி



எமது குடும்ப நண்பரும் நாதஸ்வர மேதையுமாகிய
அளவையூர் தந்த அருங்கலைஞன்
கான கலாநிதி கலாசூரி **என்.கே.பத்மநாதன்**
அவர்களது திடீர் மறைவு கேட்டு அதிர்ச்சியும் வேதனையும் அடைகின்றோம். அவரை இழந்து தவிக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.
அவரது ஆத்மா சாந்தி பெறப் பிரார்த்திக்கின்றோம்.

- சதாசிவம் திருச்செல்வராஜன்
குடும்பத்தினர்.
முன்னாள் செயலாளர்,
வண்.வடகிழக்கு கோண்டலடி விநாயகர் ஆலயம்.

"சதாஸ்" மோட்டோர்ஸ்,
யாழ்ப்பாணம்.

---




## உலகப் புகழ் பெற்ற L.G
## தொலைக்காட்சிப் பெட்டிகள்
## Abans நிறுவனத்தின்
## உத்தரவாதத்துடன்
## இலவச விநியோக சேவையில் பெற்றிட



LG

JAFFNA ELECTRICALS
Authorised Dealer For
Abans
141, POWER HOUSE ROAD, JAFFNA.
TEL: 021-222-5766
(C-28952)


---

உ
சாமியே சரணம் ஐயப்பா!

## நாதஸ்வர மேதை கலாசூரி என்.கே.பத்மநாதன்



இரு கைகளின் விரல்களைக் கொண்டு நாதஸ்வரத்தில் இசையை இசைய வைத்து இசை நாதம் பொழிந்து மக்களை மகிழ வைத்த இசைக்குயில் கலைமன்னன் பத்மநாதனின மறைவு அவரது குடும்பத்தினருக்கும், கலை உலகுக்கும் மட்டுமல்ல இசை ரசிகர்களுக்கும் பேரிழப்பாகும்.

*அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய சபரிமலை ஸ்ரீஐயப்பனைப் பிரார்த்திக்கின்றேன்.*

இசைரசிகன்
கனகசபை சுந்தரலிங்கம்,
(காரை மணிகண்டன்)

(20343) (21-26-13-18)

உதயன்

# இடைக்கால நிர்வாகம் பற்றி உலக வங்கி அதிகாரி

உலக வங்கியின் இலங்கைக்கான பணிப்பாளர் பீட்டர் சி.ஹரால்ட் கடைந்தெடுத்த உண்மை ஒன்றை ஒளிவு மறைவின்றி ஊடகவியலாளர்களுக்கு நேற்று எடுத்துக்கூறியிருக்கிறார்.

"சமாதானப் பேச்சுக்கள் துரதிர்ஷ்டவசமாக தடைப்பட்டுள்ளன. அவை மீண்டும் ஆரம்பமாவதற்கு இடைக்கால நிர்வாக சபைதான் திறவுகோலாக அமையும்" என்று பீற்றர் சி.ஹரால்ட் தெரிவித்திருக்கிறார்.

அதுமட்டுமல்ல, "இடைக்கால நிர்வாகம் தொடர்பாக அரசாங்கம் முன்வைக்க இருக்கும் ஆலோசனைகளை சர்வதேச சமூகம் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது" என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

வடக்கு - கிழக்கிற்கு இடைக்கால நிர்வாகத்தை வழங்கப்போவதாக டோக்கியோவில் நடைபெற்ற உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் இலங்கை அரசின் சார்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அறிவித்ததையும் உலக வங்கியின் இலங்கைப் பணிப்பாளர் பீற்றர் சி.ஹரால்ட் நினைவுபடுத்தியிருக்கிறார்.

இடைக்கால நிர்வாகத்தை வழங்கப்போவதாக சர்வதேச அரங்கில் இலங்கை அரசு ஒப்புக்கொண்டுள்ள போதிலும் அதை இன்னும் வழங்காமல் இழுத்தடித்துக் கொண்டு இருக்கிறது.

இடைக்கால நிர்வாகத்தை அமைப்பதற்கு முன்னர், அந்த இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பின் அரசியல் அந்தஸ்து, அதிகாரங்கள், செயற்பாடுகள் குறித்த முழு விவரங்களும் அடங்கிய வரைவு ஒன்றைத் தாருங்கள். அதைக் கவனமாகப் பரிசீலித்துப் பார்த்து குறைபாடுகள் காணப்பட்டால் அவற்றை நிவர்த்தி செய்வதற்குத் திருத்தங்கள் அடங்கிய எமது ஆலோசனைகளைத் தருவோம்.

அவை பற்றிக் கலந்துபேசி இணக்கம் கண்டு, இறுதியாக இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பை உருவாக்கலாம் என்று விடுதலைப் புலிகள் அரசாங்கத்துக்குத் தெரிவித்தார்கள்.

அதற்கு அரசாங்கம் இணங்கியது. வரைவை இந்த வார இறுதியில் அனுப்புகிறோம்; அடுத்த வார ஆரம்பத்தில் அனுப்புகிறோம் என்று அரசு கூறியதே தவிர, எத்தனையோ வார இறுதிகளும் ஆரம்பங்களும் கடந்தும் இன்னும் அதை அனுப்பவில்லை.

பேச்சுக்களுக்கு அனுசரணையாளரான நோர்வே அரசின் விசேட தூதுவர் (முன்னாள் இலங்கைத் தூதுவர் ஜோன் வெஸ்பேர்க்) வரைவை அரசிடம் இருந்து பெற்று, அதைக் கிளிநொச்சிக்கு எடுத்துச் சென்று விடுதலைப் புலிகளிடம் ஒப்படைத்து அவர்களுடன் பேசுவதற்காக நோர்வேயிலிருந்து கொழும்பிற்கு விசேடமாகப் பறந்து வந்தார்.

அவரிடம் வரைவு இதுவரை கையளிக்கப்படவில்லை. அவர், வரைவு தமது கைக்கு வருவதில் தாமதம் ஏற்படுவதை அறிந்ததும் மாலைதீவுக்கு வேறு வேலையாகச் சென்று திரும்பிவிட்டார். இப்போது வரைவுக்காகக் காத்துக்கொண்டிருக்கிறார்.

வரைவை எப்படித் தயாரித்து வழங்குவது என்பதில் அரசாங்கத் தலைவர்களிடம் இன்னும் இணக்கம் ஏற்படவில்லை.

அரச பேச்சுக்குழுத் தலைவரான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸும் பேச்சுக்குழு உறுப்பினர்களில் ஒருவரான அமைச்சர் மிலிந்த மொறகொடவும் சமாதான முன்னெடுப்புகளில் பிரதமர் ரணிலுக்கு வலக்கையும் இடக்கையும் போன்று மிகவும் நெருங்கியவர்கள்.

புலிகள் கேட்கிறபடி முழுவிவரங்களும் அடங்கிய பூரணமான வரைவைக் கொடுப்பதா அல்லது கருத்துச் சிதறல்களுடன் கூடிய மேலோட்டமான வரைவைக் கொடுத்தால் போதுமா என்பதில் இந்த இரண்டு அமைச்சர்களுமே முரண்டுபிடிக்கிறார்கள் என்ற இரகசியம் கசிந்துள்ளது என்று கூறப்படுகிறது.

அதனால்தான் வரைவைத் தயாரித்து புலிகளின் பரிசீலனைக்குச் சமர்ப்பிப்பதில் காலதாமதம் ஏற்படுகிறது.

அரைகுறை வரைவுகளை, உறுதிமொழிகளை நம்பி பேச்சு மேசைக்குத் திரும்புவதில்லை என்ற உறுதியுடன் புலிகள் இருக்கிறார்கள் என்பது சர்வதேச சமூகத்துக்கு விளங்கிவிட்டது. அந்த விளக்கத்தைத்தான் உலக வங்கியின் இலங்கைப் பணிப்பாளர் பிரதிபலித்திருக்கிறார்.

அதாவது, இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்துவது, இப்போது இலங்கை அரசின் கைகளில்தான் தங்கியிருக்கிறது என்பதை அவர் தெரிவித்திருக்கிறார். அதை அரசு புரிந்துகொண்டு செயற்படவேண்டும்.

# பரீட்சைச் செயற்பாட்டுக்குழு அமைக்க அமைச்சு தீர்மானம்

கொழும்பு,ஜூலை17

தகுதிவாய்ந்த சகல ஆசிரியர்களுக்கும் பரீட்சை நடைமுறைகளில் பங்கேற்க வழிசெய்யும் முகமாக பரீட்சைச் செயற்பாட்டுக் குழு ஒன்றை அமைக்க கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதற்கமைய ஐந்தாம் வகுப்பு புலமைப்பரிசில் பரீட்சை, ஜி.சீ.ஈ. சாதாரண தரப்பரீட்சை மற்றும் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை ஆகியவற்றிற்கான புதிய செயற்பாட்டு முறையை மேற்கொள்ளுவதற்காகவே குழுவொன்றை அமைக்க உள்ளதாக கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு கூறியுள்ளார்.

மேலும், இதுவரையில் பாடசாலை அதிபர்களினதும், வலயக் கல்விப் பணிப்பாளர்களதும் சிபார்சுகளின் அடிப்படையிலேயே பரீட்சைகளை நடத்துவதற்கான ஆசிரியர் குழுக்கள் தெரிவுசெய்யப்பட்டு வந்தன. இம்முறைமூலம் அநேகமாக அதிபர்களினதும் வலயக் கல்விப் பணிப்பாளர்களினதும் தனிப்பட்ட செல்வாக்குகளும் மற்றும் அரசியல் செல்வாக்குகளும் பயன்படுத்தப்பட்டமை தெரியவந்துள்ளது.

எனவே, இதனை முற்றாகத் தடுக்கும் வகையில் புதிய நடைமுறை பின்பற்றப்படவுள்ளது. இதற்கமைய நடைபெறவுள்ள ஜி.சீ.ஈ. சாதாரண தரப்பரீட்சையை மேற்கொள்ளத் தேவையான சகல தரத்திற்குமான உத்தியோகத்தர்களும் தத்தமது தகுதிக்கு அமைவான விண்ணப்பங்களை கல்விப் பணிப்பாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும் என கல்வி அமைச்சு அறிவித்தல் விடுத்துள்ளது.

(ஒ)

# நாட்டு நடப்பு

## எங்குற்றாய் எழிலிசை வேந்தே!

செவியெலாம் 'தோடி' பாய்ந்து
சிந்தையைக் குளிர வைத்தான்
புவியெலாம் 'பைரவி' பாய்ந்தோட
பூதலம் வியக்க வைத்தான்
ஆவியும் உருகும் வண்ணம்
'அடானா'வை ஆக்கிக் காட்டி
மேவிடும் 'காம்போதி' கொண்டு
மெய்மறந்திடவே செய்வான்
கவின்பெறு 'கல்யாணி'யாலே
கவர்ந்தனர் உலகை அன்றோ
இவன் இந்தக் குழலுக்குள்ளே
எத்தனை வித்தை வைத்தான்
அவனிக்கே அளவெட்டி ஊரை
அறிமுகம் செய்த செம்மல்
இவனுடன் இணைந்து ஒன்றாய்
இன்புற்றேன் எனது மண்ணில்
தவத்தினில் விளைந்த முத்தே
தங்கமே போய்வா - இங்கே.

- விகடகவி.

# யாழ்.ஆஸ்பத்திரிக் களஞ்சியத்தில் அவசியப் பொருள்கள் பற்றாக்குறை

## பொறுப்புத் தாதியர்கள் விசனம்

யாழ்ப்பாணம்,ஜூலை17

யாழ்.போதனா வைத்தியசாலைப் பொதுக்களஞ்சிய அறையில் அத்தியாவசியப் பொருள்களுக்குப் பற்றாக்குறை நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதனால் வார்ட்டுகளில் அவசரத் தேவைகளை நிறைவேற்றுவதில் பெரும் இடர்பாடுகளை எதிர்கொள்ள நேரிடுவதாக பொறுப்புத் தாதியர்கள் தெரிவிக்கின்றனர்.

நோயாளர்களின் பாவனைக்கான படுக்கை விரிப்புகள், சத்திரசிகிச்சையின்போது பயன்படுத்தப்படும் துவாய்கள், நோயாளர் கட்டில்களில் விரிக்கப்படும் றப்பர் விரிப்புகள் உட்பட பல அவசியமான பொருள்கள் இல்லையென பல தடவைகள் ஆஸ்பத்திரி நிர்வாகத்துக்கு முறையிடப்பட்டதாகவும் -

ஆயினும், தொடரும் தட்டுப்பாட்டை நீக்குவதற்கு போதிய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லையெனவும் பொறுப்புத் தாதியர்கள் தெரிவிக்கின்றனர். வார்ட்டுகளுக்குப் பொறுப்பான தாதியர்களால் கோரப்படும் அத்தியாவசிப் பொருள்களில் பெரும்பாலானவை பொதுக்களஞ்சிய அறையிலிருந்து வழங்கப்படுவதில்லை எனவும் -

அத்தியாவசியமற்ற பொருள்களே களஞ்சிய அறையில் பெருமளவில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளதாகவும் - விடுதிப் பொறுப்புத் தாதியர்கள் தரப்பில் கூறப்படுகிறது.

ஏ-9 தரைப்பாதை திறக்கப்பட்ட பின்னர் கொழும்புக்கும் யாழ்ப்பாணத்துக்குமிடையில் வைத்தியசாலை வாகனங்கள் போக்குவரத்தில் ஈடுபட்டுள்ளன. இந்நிலையில், யாழ். ஆஸ்பத்திரிக்கென பொதுக்களஞ்சிய அறையில் களஞ்சியப்படுத்தப்படும் பொருள்கள், உள்ளூரிலேயே கொள்வனவு செய்யப்படுகின்றன. இதனால் அவற்றிற்கு அதிக விலை கொடுக்க நேரிடுவதாகவும், அப்பொருள்கள் தரம் குறைந்தனவாக உள்ளதாகவும் கூறப்படுகிறது. (ஒ-9-15)

# தென்மராட்சிக்கு மின் விநியோகிக்க அரியாலையில் மிதிவெடிகள் நீக்கம்

யாழ்ப்பாணம்,ஜூலை17

தென்மராட்சிப் பகுதிக்கான மின்சார விநியோகப் பணிகளை மேற்கொள்ளத் தடையாக உள்ள மிதிவெடிகளை அகற்றும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தென்மராட்சிப் பகுதிக்கு மின்சாரம் விநியோகிப்பதற்கு நடவடிக்கைகளை மின்சாரசபை மேற்கொண்டுள்ளது. இப்பணியை முழுமையாகப் பூர்த்திசெய்ய அரியாலைப் பகுதியில் உள்ள மிதிவெடிகள் தடையாக இருந்தன.

இதனையடுத்து மிதிவெடிகளை அகற்றும் 'ஹலோ டிரஸ்ட்' நிறுவனத்தினர் மின்சாரம் வழங்கக்கூடிய வழிகளில் உள்ள மிதிவெடிகளை அகற்றும் நடவடிக்கையினை மேற்கொண்டுவருகின்றனர்.

அரியாலைப் பகுதியில் உள்ள மின் கம்பங்களைச் சுற்றி 15 சதுரஅடி பரப்பளவுக்குள் மிதிவெடிகள் அகற்றப்படுகின்றன.

இப்பணிகள் மிகவிரைவாக நடைபெற்று வருவதனால் மின்கம்பங்களைச் சுற்றியுள்ள மிதிவெடிகள் அகற்றப்பட்டதும் தென்மராட்சிக்கான மின்சார விநியோகப் பணிகள் துரிதமாகப் பூர்த்தியாகுமென எதிர்பார்க்கப்படுகிறது. (ஒ-6)

## கோப்பாய் ஆஸ்பத்திரியில்

# காசநோய்த் தொற்றுக் குறித்து உள்நோயாளர்கள் அஞ்சும்நிலை

வலி.வடக்கு,ஜூலை17

கோப்பாய் அரசினர் வைத்தியசாலையில் உள்நோயாளர்கள் தங்கி சிகிச்சைபெறும் வார்ட்டுகளில் காசநோயாளர்களும் தங்கவைக்கப்பட்டுள்ளதாகவும் -

இதனால் தாமும் காசநோய்த் தொற்றுக்கு உள்ளாகக் கூடும் என்று பிறநோய்களுக்குச் சிகிச்சைபெறுவோர் அஞ்சுவதாகவும் - தெரிவிக்கப்படுகிறது.

முன்னர் மயிலிட்டியில் இயங்கிவந்த காசநோய் மருத்துவமனை யுத்தச் சூழ்நிலையால் ஏற்பட்ட இடப்பெயர்வுகளையடுத்துத் தற்போது கோப்பாய் அரசினர் வைத்தியசாலையில் இயங்கி வருகின்றது.

இங்கு பெண் நோயாளர்கள் தங்கியுள்ள வார்ட்டில் காசநோயால் பீடிக்கப்பட்ட பெண்களை பாய்களில் படுக்கவைத்துள்ளனர்.

ஏற்கனவே நோயால் பீடிக்கப்பட்டு உடல் பலவீனமடைந்துள்ள நிலையில் தமக்கருகில் படுக்கவைக்கப்பட்டுள்ள காசநோயாளிகளிடமிருந்து தமக்கும் காசநோய் தொற்றிவிடக் கூடுமென வேறுநோய்களுக்குச் சிகிச்சை பெறுவோர் அஞ்சுவதாகக் கூறப்படுகிறது.

காசநோய் வைத்தியசாலையைக் கோப்பாய் அரசினர் ஆஸ்பத்திரியிலிருந்து வேறிடத்துக்கு மாற்றும்படி அப்பகுதி மக்கள் நீண்டகாலமாகவே கோரி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஒ-86)

## நாளை

ஆடி 02
வெள்ளிக்கிழமை
(18.07.2003)
திதி : பஞ்சமி
முன்னிரவு 11.24 வரை.
நட்சத்திரம் : பூரட்டாதி
பின்னிரவு 2.49வரை.
சுபநேரம் : 6.00 - 7.30
ராகுகாலம் : 10.30- 12.00
(பழைய நேரப்படி)

## உதய வாக்கு

மூடன் தன் முட்டாள்தனத்தில் உறுதியாக இருந்தால் விவேகியாகி விடுவான்.

## தேசிய அடையாள அட்டைக்கான

# நடமாடும் சேவை நாளை யாழ். பிரதேச செயலகத்தில்

யாழ்ப்பாணம்,ஜூலை17

தேசிய அடையாள அட்டை வழங்குவது தொடர்பான நடமாடும் சேவை நாளை வெள்ளிக்கிழமை காலை 9மணி தொடக்கம் யாழ். பிரதேச செயலகத்தில் இடம்பெறுமென யாழ். பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் அறிவித்துள்ளார்.

இந்த நடமாடும் சேவை தொடர்பான மேலதிகத் தகவல்களை தத்தமது பிரிவு கிராம சேவையாளர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளுமாறும் -

இச்சேவையைப் பயன்படுத்தி உச்சக்கட்ட பயன்பாட்டைப் பெற்றுக்கொள்ளுமாறும் - பொதுமக்களை பிரதேச செயலர் கேட்டுள்ளார். (ஒ)

## மாவட்ட மட்டப் போட்டியில்

# சிறந்த பிரதேச சபையாக வலி.வடக்கு தெரிவானது

யாழ்ப்பாணம்,ஜூலை17

வடக்கு - கிழக்கு மாகாண உள்ளூராட்சித் திணைக்களத்தினால் யாழ். மாவட்டத்தின் சிறந்த பிரதேச சபையாக வலி. வடக்கு பிரதேச சபை தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

2002/2003 ஆம் ஆண்டில் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் சிறந்த முகாமைத்துவ செயற்பாடுடைய பிரதேச சபையைத் தெரிவு செய்வதற்கான போட்டி மாவட்ட ரீதியாக அண்மையில் நடத்தப்பட்டது. இப்போட்டியிலேயே வலி.வடக்கு பிரதேச சபை முதலாம் இடத்தைப் பெற்றுள்ளது.

மாகாண உள்ளூராட்சித் திணைக்களத்தில் இருந்து வருகை தந்த அதிகாரிகள் சகல பிரதேச சபைக்களுக்கும் நேரில் சென்று முகாமைத்துவ செயற்பாடுகளை அவதானித்த பின்னரே தெரிவினை மேற்கொண்டனர்.

இது தொடர்பான கடிதம் பிரதேச சபைக்கு உள்ளூராட்சித் திணைக்களத்தினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதுடன் உள்ளூராட்சி ஆணையாளர் செல்வி து.விஜயலட்சுமியினால் பாராட்டுக் கடிதமும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

கடந்தகால யுத்தச் சூழ்நிலையினால் வலி.வடக்குப் பிரதேசம் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(ஒ-10-135-150)

## 100ஆவது பிறந்தநாள் வாழ்த்து

17-07-2003



### திரு.வே.அருணாசலம் தில்லையம்பலம்

வயது நூறடைந்து
வாழ்வின் பயனடைந்து
பிறப்புக்குப் பெருமை தரும்
பெரியவரே வாழி!
ஆண்டாண்டு தோறும்
அகவை கண்டிடினும்
ஆயிரத்தில் ஒன்றல்லவா
அகவை நூறு காண்பது?
மாதாவாய்ப் பிதாவாய்
குருவுமாய் தெய்வமுமாய்த் திகழும்
தங்கமே உங்களை வாழ்த்துகின்றோம்
- சொர்க்கத்
தங்கமே உங்களை வாழ்த்துகின்றோம்.

ஆனந்தபவான்
ஊரிக்காடு,
வல்வெட்டித்துறை.

வாழ்த்துபவர்கள்:
பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

(20295)(21-15-18)



## மனோதத்துவ வைத்தியம்
## (GENERAL PSYCHO THERAPY)

யாழ்ப்பாணத்தில் 15.07.2003 - 22.07.2003 வரை

இளைஞர்களே!
சக்தி குறைவு - ஞாபக மறதி - பயம் -
நடுக்கம் - நித்திரைக் குறைவு இவற்றால்
தாழ்வு மனப்பான்மையா?
கவலை வேண்டாம்.
உடனே என்னுடன் தொடர்புகொள்ளுங்கள்!
ஆண்மைச் சக்தி குறைவுதான் உங்கள்
கவலையா? மனோதத்துவ வைத்தியத்தாலும்
மூலிகை மருந்துகளாலும் வெற்றி பெறலாம்.

தொடர்புகொள்ளவும்:

பிரபல மனோதத்துவ நிபுணர்
Dr.P.ஆறுமுகம் S.M.P.
A.S.N. சுற்றுலா விடுதி,
392/A, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
Govt. Regd. No. 9492
HOT LINE: 0777 569205
T.P.: 3181, 5399
(முன்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளவும்).

(ஜி-28906) (21-15-18)



## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 04 - 11 - 1959



உதிர்வு 09 - 07 - 2001

### திருமதி அமிர்தலிங்கம் இராசமலர்

திதி: 17.07.2003

பண்புக்கோர் இருப்பிடமாய்
பார்வையில் தனிமையாய்
ஆதரிப்பில் தெய்வமாய்
இல்லத்தில் ஒளிவிளக்காய்
உறவினர்க்கு உயிராய்
எனக்கு நல்ல மனைவியாய்
திகழ்ந்தாய் எம் தெய்வமே!

இன்று இறைவன் அடிசேர்ந்து ஆண்டு இரண்டு சென்றாலும்
உங்கள் - நினைவுகள் எம் கண்ணை விட்டுக் கலையவில்லை.
உம் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இலந்தைக்காடு,
வல்வெட்டித்துறை. (20297)(21-15-18)

குடும்பத்தினர்
கணவர், பிள்ளைகள்.


## முச்சக்கர வண்டிகள் அன்பளிப்பு

சண்டிலிப்பாய்,ஜூலை17

திருநெல்வேலி லயன்ஸ் கழகம் யாழ். மாவட்டத்திலுள்ள வலுவிழந்தவர்களுக்கு (ஊனமுற்றவர்கள்) 14 முச்சக்கர வண்டிகளை அன்பளிப்புச் செய்வது என்று தீர்மானித்துள்ளது. யாழ். மாவட்டத்திலுள்ள பிரதேச செயலர் பிரிவுரீதியாகத் தெரிவு செய்யப்பட்ட வலுவிழந்தவர்களுக்கு இந்த முச்சக்கர வண்டிகள் அடுத்த மாத முற்பகுதியில் வழங்கப்படவுள்ளதாக கழகத் தலைவரான லயன் ந.ஜெயரட்ணம் தெரிவித்தார்.(ம-135)

## வாழைப்பழ விலை அதிகரிப்பு

சண்டிலிப்பாய்,ஜூலை17

வலி.மேற்கு மற்றும் வலி.தென் மேற்குப் பகுதிகளில் வாழைப் பழத்தின் விலை அதிகரித்துள்ளது. இப் பகுதிகளில் உள்ள சங்கானை, பண்டத்தரிப்பு சந்தைகளில் கதலி வாழைப்பழம் கிலோ 40 ரூபா முதல 45 ரூபா வரையும் - இதரை வாழைப் பழம் கிலோ 35 ரூபாவாகவும் - விற்கப்படுகிறது.

கடந்த மாதம் வீசிய கடும் புயல் காற்றினால் இப்பிரதேசத்திலுள்ள வாழை மரங்கள் பலவும் முறிந்து சேதமடைந்தன. அதன் காரணமாகவே வாழைப்பழத்தின் விலை மிகவும் அதிகரித்துள்ளதாகக் கூறப்படுகின்றது. (ஓ-135)

## கண்டித்த மகனை குத்தூசியால் குத்திய தந்தை!

யாழ்ப்பாணம்,ஜூலை17

மதுபோதையில் வந்து வீட்டில் ரகளை செய்த தந்தையைத் தட்டிக் கேட்ட மகன் குத்தூசியால் குத்தப்பட்டு படுகாயமடைந்தார்.

கொக்குவில் பிடாரி அம்மன் கோவிலடிப் பகுதியில் நடைபெற்ற இச்சம்பவத்தில் திவ்வியநாதன் திவ்வியதீசன் (வயது20) என்ற இளைஞரையே அவரது தந்தை, தான் வைத்திருந்த குத்தூசியால் குத்தியதாகக் கூறப்படுகிறது.

நெஞ்சுப் பகுதியில் காயமடைந்த திவ்வியதீசன் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டார். (ஓ-5)

## காணிப்பிரச்சினை தொடர்பான கலந்துரையாடல்

கிளிநொச்சி,ஜூலை17

மட்டக்களப்பு மாவட்டம் வவுணதீவுப் பிரதேசத்தில் முஸ்லிம் மக்களின் காணிப்பிரச்சினை தொடர்பான கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

வவுணதீவு உதவி அரச அதிபர் பணிமனையில் நடைபெற்ற இக் கலந்துரையாடலில் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் சார்பில் மட்டு.- அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளர் தலைமையிலான குழுவினரும் -

முஸ்லிம் பிரதிநிதிகள் சார்பில் பஷீர் ஷேக் தாவூத் தலைமையிலான குழுவினரும் - கலந்து கொண்டனர்.

யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இக கலந்துரையாடலில் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் ஆர். மோன குருசாமியும் கலந்துகொண்டார்.(ஓ-5)

## பாடசாலைகளுக்கு அன்பளிப்பு

பொது உடைமைச் சித்தாந்தவாதியும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் நீண்டகால ஆசிரியருமான மு.கார்த்திகேயனின் 25ஆவது நினைவுதின நூல் அறிமுகவிழா யாழ். இந்துக்கல்லூரியில் அண்மையில் இடம்பெற்றது.

இந்துக்கல்லூரி அதிபர் தலைமையில் நடந்த இந்த விழாவில் நினைவு நூல்களை பெற்றவர்களிடம் இருந்து கிடைக்கப்பெற்ற அன்பளிப்புகள் யாழ் இந்துக் கல்லூரி, கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி, வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி, பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி என்பவற்றிற்கு அன்பளிப்பாக பகிர்ந்து வழங்கப்பட்டது.(ஓ-88)


### விற்பனைக்கு உண்டு

தச்சுவேலை செய்யும் சைனா மெசின்கள் 10", 12", 14" 16" ஆகியனவும், பிளேர்களும், வெல்டிங் பிளாண்ட் (இரான்ஸ்போமர்), அலுமினிய கட்டிங் மெசின் ஏனைய இலத்திரனியல் உபகரணங்கள் விற்பனைக்குண்டு.

தொடர்பு: கி.சுதாகரன்,
No.20, 2ஆம் ஒழுங்கை,
அரசடி வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம். T.P: 0777-295998



## St.JOHN'S COLLEGE
JAFFNA

**ANNUAL PRIZE GIVING - 2003**

Saturday 19th July 2003
at 10.00 a.m.

CHIEF GUEST,
**Rt.Rev. Kumara Bandara Samuel Illangasinghe,**
Bishop of Kurunagala
&
**Dr.(Mrs.) Lakmini Priyakanthi Illangasinghe,**

CHAIRMAN
**Ven. S.P. Nesakumar**
Archdeacon of Jaffna.

*Parents, Old Boys & Well-Wishers are cordially invited.*

**Principal, Staff & Students.**

(21-15-18) (ஜி-28874)



## உளமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்



வடலியடைப்பு பாரத்தனை
ஐயப்பன் ஆலயத்தலைவரும்,
புதறாணை ஸ்ரீ சித்தி விநாயகர்
ஆலய பரிபாலன சபை
உறுப்பினரும், நலன்புரி
அமைப்பின் பொருளாளரும்,
கி.அ.சங்க நிர்வாக உறுப்பினரும்,
பண்டத்தரிப்பு
பரிஷ் ப.நோ. கூட்டுறவுச் சங்க
பணிப்பாளர் சபை உறுப்பினரும்,
பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி
பழைய மாணவர் சங்க
நிர்வாக உறுப்பினரும்,
அரசடி சனசமூக நிலையப்
போஷகரும், சிறந்த
சமூக சேவையாளனுமாகிய

### திரு.கணபதிப்பிள்ளை கந்தசாமி

அவர்கள் மல்லாகம் மாவட்ட நீதிபதி திருமதி S.இளங்கோவன் முன்னிலையில் 09.07.2003இல் சமாதான நீதிவானாகச் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

இவர் இப்பதவி பெற்றமைக்காக அவரைப் பாராட்டி வாழ்த்துவதோடு, அவரது சேவை நல்லமுறையில் மேலும் தொடர எல்லாம்வல்ல இறைவனின் கருணை வேண்டிப்பிரார்த்திக்கின்றோம்.

வடலியடைப்பு,
பண்டத்தரிப்பு. (20298) (21-15-18)

நண்பர்கள்,
வடலியடைப்பு.



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 16 - 03 - 1932



மறைவு 28 - 07 - 2002

### அமரர் பண்டாரி வேலன்

திதி:- அபரபக்க சதுர்த்தி

ஓராண்டும் ஆயிற்றோ அந்தோ நீர் எமைப்பிரிந்து
தீராத வேதனையால் துவண்டே துடிக்கின்றோம்
மாறாத உமது முகம் மனக் கண்ணில் தெரிகிறதே
ஆறாத கண்ணீரால் அஞ்சலி செலுத்துகின்றோம்.

இன்று (17.07.2003) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மற்றும் மதிய போசனத்திலும் கலந்து பங்கேற்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கைதடி மேற்கு,
கைதடி. (20311) (21-15-18)

- மனைவி, மக்கள்
பேரப்பிள்ளைகள்.

# எடுக்க எடுக்க என்றும் குறையாத அறிவுப் பொக்கிஷமான நூலகங்கள்

**கடந்த 14ஆம் திகதிமுதல் அனுஷ்டிக்கப்பட்டுவரும் உள்ளூராட்சி வாரத்தையொட்டி இந்தக் கட்டுரை பிரசுரமாகின்றது.**

**திருமதி பொற்செல்வி ஸ்ரீரஞ்சன்**

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் 72 உள்ளூராட்சி சபைகள் (மாநகர, நகர, பிரதேச சபைகள்) இயங்குகின்றன. அனைத்து உள்ளூராட்சி மன்றங்களும் தமது சேவையில் நூலக சேவையையும் இணைத்துள்ளன. 'தானங்களிலே சிறந்தது கல்வி தானம்' என்பதற்கமைய பொதுநூலகங்கள் 'எல்லோர்க்கும் கல்வி' என்ற குறிக்கோளில் செயற்படுகின்றன.

அறிவைப் பெறுவதற்கான நுழைவாயிலாக பொதுநூலகம் இருப்பதுடன் தன்நபருக்கும் சமுதாயக் குழுக்களுக்கும் வாழ்நாள் முழுவதற்குமான கல்வியை வழங்குகின்றது. இதனால் சுதந்திரமாகத் தீர்மானம் செய்வதற்கும் கலாசார அபிவிருத்திக்கும் தேவையான சந்தர்ப்பத்தையும் வழங்குகின்றது. கல்வி, கலாசாரம் மற்றும் தகவல்களை அபிவிருத்தி செய்யும் நிலையமாகவும் பொதுநூலகம் அமைந்துள்ளது.

பொதுநூலகமானது சகல வகையான அறிவுகளையும் தகவல்களையும் உடனடியாக வாசகர்களுக்கு வழங்கும் நிலையமாகவும் தொழிற்படுகின்றது. வயது, பால், சமயம், இனம், மொழி என்பனவற்றைக் கருத்திற்கொள்ளாது எல்லோருக்கும் சமமான சேவையாற்றும் நிலையமாகவும் தொழிற்படுகின்றது. தற்போது பொதுநூலகங்கள் வாசகர்களுக்கு எழுத்துருவில்லாத தகவல் சாதனங்களையும் வழங்குகின்றன.

**★ பொது நூலகமொன்றின் பிரதான பணிகள்:-**

காற்றும், மழையும், ஒளியும் எல்லா மக்களிடையேயும் வேற்றுமை காட்டாமல் எல்லோருக்கும் பயன் தருகின்றன. அவ்வாறே 'அறிவு' என்னும் பயனை மக்களுக்கு அளிக்கும் நிலையமாக நூலகங்கள் திகழ்கின்றன.

தகவல், பண்பாடு கல்வி, கலாசாரம் தொடர்பாக முக்கிய பணிகளையும் பொதுநூலகங்கள் வழங்குகின்றன. நூலகவியலின் தந்தை எனப் போற்றப்படும் எஸ்.ஆர்.ரங்கநாதன் நூலகத்துறையில் பஞ்சசீலக் கொள்கைகளை வகுத்துள்ளார்.

1. நூல்கள் பாவனைக்கே - Books are for use.
2. நூலுக்கேற்ற வாசகர் - Every Reader his Book.
3. வாசகருக்கேற்ற நூல் - Every Books his Reader.
4. வாசகர் நேரம் பேணுக - Save the time of the Reader.
5. நூலகம் வளரும் தன்மையுள்ளது - Library is a growing organisation.

எஸ்.ஆர்.ரங்கநாதன் இவ்வாறான கொள்கைகள் மூலம் ஒரு நூலகம் புரியும் கடமைகளைத் தெளிவுறுத்தியுள்ளார். இவ்வாறாக பொதுநூலகங்கள் சிறுவயதிலிருந்தே சிறுவரிடையே வாசிப்புப் பழக்கத்தை உருவாக்கும் நிலையமாகப் பணிபுரிகின்றன. இத்துடன் சகலருக்குமான தனிநபர் கல்வி, சுயகல்வி மற்றும் முறைசார் கல்வி என்பனவற்றிற்கு உதவி வழங்குகின்றன. சமூகம் பற்றிய சகலவிதமான தகவல்களையும் மக்களுக்கு வழங்குகின்றன.

பொதுநூலகங்கள் அப்பகுதிசார் சமுதாயத்தின் கலை, கலாசார, விழுமியங்கள் மற்றும் கல்வியின் வெளிப்பாட்டுச் சின்னமுமாகும். சிறந்ததொரு பொதுநூலகமென்பது அங்குள்ள நூல்களின் பாவனையிலேயே தங்கியுள்ளது. நூலின் சிறப்பை பாரதிதாசன் பின்வருமாறு கூறுகின்றார்.

*"மூலையில் ஒரு சிறு நூலாயினும் முடிதனில் சுமந்திடல் வேண்டும்"*

பொதுநூலகங்கள் தமது வாசகர்களுக்குப் பின்வரும் பிரிவுகளினூடாகச் சேவையாற்றுகின்றன.

1. இரவல் வழங்கும் பகுதி.
2. உசாத்துணைப் பகுதி.
3. சிறுவர் பகுதி.
4. பத்திரிகைகள், சஞ்சிகைகள் பகுதி.
5. நூலுருவில்லாத தகவல் சாதனப் பகுதி.

ஒவ்வொரு நாட்டிலும் அறிஞர்களின் அறிவுத் தேடுகைக்கு வழியமைத்துத் தருவது நூலகங்களாகும். எதிர்கால அறிஞன் ஒருவன் எங்கு முதலில் உருவாகின்றான் எனில் பொது நூலகங்களில் உள்ள சிறுவர் பகுதியிலேயாகும்.

'இளமையிற் கல்வி சிலையில் எழுத்து' என்பது ஆன்றோர் வாக்கு. சிறுவர்களை நல்வழிப்படுத்தி ஓர் ஆரோக்கியமான சமுதாயத்தை உருவாக்கும் நிலையமுமாகும்.

நூலகத்தின் சிறப்பை பின்வருமாறு கூறலாம்:-

*"செந்தமிழின்பஞ் செறிந்திட நூல்கள்*
*சேர்ப்பதும் நூலகமே! - தமிழ்*
*சந்தம் விளங்கிட சரித்திர நூல்கள்*
*தருவதும் நூலகமே! அதில்*
*சிந்தையின் உணர்வுகள்*
*அறிவியலாக*
*செழிப்பதும் நூலகமே - பழஞ்*
*சந்ததியினரின் சரித்திர நூல்கள்*
*நிறைந்ததும் நூலகமே"*

நூலகமொன்று வள்ளலாகவும் பணிபுரிகின்றது - எனில் மிகையாகாது. பாடலொன்றின் சில வரிகளை நோக்கின்,

*'அமைதி விளைந்திடும்; அறிவு*
*பெருக்கிடும்*
*அன்பாம் நூல்நிலையம்! - நல்*
*ஆர்வம் சேர்த்திடும் ஆனந்தம்*
*மூட்டிடும்*
*ஆலயம் நூல்நிலையம்!*
*இலக்கியம் காட்டிடும்,*
*இன்சுவை கூட்டிடும்*
*இனிதாம் நூல்நிலையம் - நம்....*

- இவ்வாறாக பொது நூலகங்கள் வாசகர்க்கு பணியாற்றிக்கொண்டிருக்கின்றன.

'அன்னசத்திரம் ஆயிரம் அமைத்தலிலும் சிறந்தது, ஆங்கு ஓர் ஏழைக்கு எழுத்தறிவிப்பது' என்பதற்கிணங்க உள்ளூராட்சி சபைகள் இவ்வாறு கல்வி அறிவை வழங்குகின்றன எனில் அது மிகையாகாது.

தற்போது பொது நூலகங்கள் தசாம்ச பகுப்பு (D.D.C.) மூலம் நூல்களைப் பகுப்பாக்கம் செய்து பத்துப் பெரும் பிரிவிற்குள் சகல விதநூல்களையும் அடக்குகின்றன.

அவை பின்வருமாறு:-

000 - பொது வகுப்பு
100 - தத்துவம்
200 - சமயம்
300 - சமூகவியல்
400 - மொழி
500 - தூயவிஞ்ஞானம்
600 - தொழில்நுட்பம்
700 - கலை
800 - இலக்கியம்
900 - புவியியல், சரித்திரம், வாழ்க்கைச் சரித்திரம்.

வாசகர் தமது தேவையை உடனடியாகப் பூர்த்திசெய்யும் நிலையமாகப் பொதுநூலகங்கள் திகழ்கின்றன. இவ்வாறாக நூலகங்களிலே காணப்படும் நூல்களையும் வாசகர்களையும் இணைக்கும் இணைப்பாளராகப் பணியாற்றுவது நூலகரேயாவார்.

உள்ளூராட்சி சபைகள் தொடர்ந்தும் நூலக சேவையை வளர்த்து மக்களிற்கு சிறந்த சேவையை வழங்குதல் வேண்டும். ★

---

**கண்டி மாவட்டத்தின் 37 தோட்டங்களில்**

## 30 ஆயிரம் தொழிலாளர் நடத்தும் வேலைநிறுத்தம் விஸ்தரிக்கப்படலாம்

கொழும்பு,ஜூலை17

கண்டி மாவட்ட தோட்டத் தொழிலாளர்களின் வேலைநிறுத்தப் போராட்டம் பிறமாவட்டங்களுக்கும் விஸ்தரிக்கப்படலாம். அந்தத் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய கடந்த ஜூன் மாத சம்பளம் உடனடியாக வழங்கப்படாவிட்டால் பெருந்தோட்ட அபிவிருத்தி அமைச்சுக்கு முன்மறியல் போராட்டம் ஒன்றை நடத்த பெருந்தோட்டத் தொழிற் சங்கங்கள் திட்டமிட்டிருக்கின்றன.

இப்பிரச்சினையில் பிரதமர் உடனடியாகத் தலையிட்டு சம்பளத்தை உடன் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அகில இலங்கை ஐக்கிய தொழிலாளர் காங்கிரஸ் பொதுச்செயலாளர் எஸ்.முருகையா தந்திச் செய்திமூலம் கோரியிருக்கிறார்.

கண்டி மாவட்டத்தில் உள்ள அரசுக்குச் சொந்தமான 27 தோட்டங்களிலும் எல்கடுவ பிளாண்டேசன் கம்பனிக்குச் சொந்தமான 10 தோட்டங்களிலும் உள்ள சுமார் 30 ஆயிரம் தோட்டத் தொழிலாளர்கள் கடந்த மூன்று தினங்களாக வேலைநிறுத்தம் செய்கின்றனர். அவர்களுக்கு கடந்த ஜூன் மாதச் சம்பளம் இன்னமும் வழங்கப்படவில்லை.

கடந்த 15 வருடங்களாக இத்தொழிலாளர்களிடம் அறவிடப்பட்ட ஊழியர் சேமலாப நிதியான 400 கோடி ரூபா மத்திய வங்கிக்கு அனுப்பி வைக்கப்படாமல் இருப்பதும் வேலை நிறுத்தத்துக்கு மற்றொரு காரணமாகும்.

இது தொடர்பாக அரச பெருந்தோட்டயாக்கத் தலைமையகத்துடன் தொடர்புகொண்டபோது, "தோட்டத் தொழிலாளர்களுக்குச் சம்பளம் கொடுக்க எம்மிடம் பணம் இல்லை. திறைசேரியிடம் நிவாரணம் கேட்டுள்ளோம். திறைசேரி பணம் வழங்கினால் மட்டுமே சம்பளம் கொடுக்கமுடியும்" எனத் தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையே, அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம், மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை என்பனவற்றிற்குச் சொந்தமான கட்டடங்களை விற்றாவது ஊழியர்களுக்கான சேமலாப நிதியைச் செலுத்தும்படி சம்பந்தப்பட்ட சபைகளுக்குஅமைச்சர் லக்ஷ்மன் கிரிஎல்ல உத்தரவிட்டிருக்கிறார்.

---

## வேளாண் மேம்பாட்டுக்காக தொழில்நுட்ப நிறுவனம்

**கிளிநொச்சியில் திறப்பு**

கிளிநொச்சி,ஜூலை17

வன்னியில் வேளாண் மேம்பாட்டுக்கான தொழில்நுட்ப உதவிகளையும் பயிற்சிகளையும் வழங்கும் வகையில் கிளிநொச்சியில் 'வன்னி வேளாண தொழில்நுட்ப நிறுவனம்' நேற்றுமுன்தினம் திறந்துவைக்கப்பட்டது.

கிளிநொச்சியில் கரடிப்போக்கு சந்திக்கு அருகில் அமைந்துள்ள இந்த நிறுவனத்தை கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் ரி.இராசநாயகம் நாடாவெட்டித் திறந்துவைத்தார்.

இதன்பின் நிறுவனத்தின் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன. கிளிநொச்சி மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் திருமதி செ.ஆனந்தராசா, கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் ரி.இராஜநாயகம், மன்னார் மாவட்ட விவசாயச் சம்மேளனத் தலைவர் சௌந்தரநாயகம் மற்றும் பலர் நிகழ்வில் உரைநிகழ்த்தினர்.

இந்த நிலையத்தின்மூலம் மண்வள ஆய்வுமேற்கொள்ளல், வேளாண் மேம்பாட்டிற்காக தேவையான தொழில்நுட்ப மதியுரைகளையும் பயிற்சியையும் வழங்குதல், விளைபொருள்களுக்குரிய சந்தை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தல், நல்லின விதைகள் விற்பனை செய்தல் மற்றும் வேளாண் பொறிகளையும், கருவிகளையும் விற்பனைசெய்தல், மண்ணிற்கேற்ற வளமாக்கிகளை மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனை செய்தல், கால்நடை மேம்பாட்டிற்கு உள்ளீடுகளை விற்பனை செய்தல் போன்ற திட்டங்கள் செயற்படுத்தப்படவுள்ளன.

(ம-5)

---

**பாடசாலைகளுக்கு ஜப்பானிய நிறுவனம் உதவி**

பண்டாரவளை,ஜூலை17

நாடெங்குமுள்ள இருபத்தைந்து பாடசாலைகளில் கணித, விஞ்ஞான கல்வியை அபிவிருத்தி செய்ய உதவுவதற்கு ஜப்பானைச் சேர்ந்த 'ஜெய்க்கா' நிறுவனம் முன்வந்துள்ளது. (இதற்கான முன்னோடித் திட்டம் ஒன்பது மாதங்களில் செயற்படுத்தப்படும்)

தேசிய கல்வி நிறுவனத்தின் அனுசரணையுடன் இத்திட்டம் செயற்படுத்தப்படுகிறது. தெரிவுசெய்யப்பட்டிருக்கும் பாடசாலைகளில் ஒன்று மட்டுமே தோட்டப்புற பாடசாலையாகும். முஸ்லிம் பாடசாலை எதுவும் தெரிவு செய்யப்படவில்லை.

வடக்கில் வேம்படி மகளிர் கல்லூரி, கனகரட்ணம் மத்திய மகா வித்தியாலயம், சென். மேரீஸ் வித்தியாலயம் ஆகியன இத்திட்டத்துக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளன. (ஐ)

---

**இளைஞர் கோஷ்டியை தட்டிக்கேட்டவருக்கு கத்திக்குத்து!**

யாழ்ப்பாணம்,ஜூலை17

யுவதிகளுடன் சேஷ்டை புரிந்த இளைஞர் குழுவைத் தட்டிக்கேட்ட குடும்பஸ்தர் அந்த இளைஞர்களின் கத்திக்குத்துக்கு இலக்காகி படுகாயமடைந்தார்.

அரியாலை கனகசிங்கம் வீதிப் பகுதியில் நேற்றுமுன்தினமிரவு இடம்பெற்ற இச்சம்பவத்தில் சின்னையா கிருஷ்ணபிள்ளை (வயது 47) என்பவரே படுகாயமடைந்தவராவார். இவர் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது:-

அரியாலை கனகசிங்கம் வீதியால் செல்லும் யுவதிகளிடம் அப்பகுதியில் நிற்கும் இளைஞர் குழுவொன்று தினமும் தகாத வார்த்தைகளால் பேசிவந்ததோடு சேஷ்டைகளிலும் ஈடுபட்டு வந்தது.

சம்பவதினமான நேற்றுமுன்தினமிரவும் குறிப்பிட்ட இளைஞர் குழுவினர் அவ்வீதி வழியாக வந்த சில யுவதிகளுடன் சேஷ்டைபுரிய முயன்றுள்ளனர். அதனை அவதானித்த குடும்பஸ்தர் - அக்குழுவினரை தட்டிக் கேட்டதோடு அறிவுரை கூற முற்பட்டார்.

இதனால், ஆத்திரம் அடைந்த இளைஞர் குழுவினர் அவரை கடுமையாகத் தாக்கியதோடு, முதுகுப் பகுதியில் கத்தியால் குத்திக்காயப் படுத்தியதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ந-5)

---




சுண்டிக்குளி மகளிர் கல்லூரி ஆசிரியை வாசுகி செ◌ாக்கலிங்கத்தின் 'மருதத்திணை' நூலின் வெளியீட்டுவிழா யாழ். பல்கலைக்கழக நூலகத்தில் அண்மையில் இடம்பெற்றபோது பேராசிரியர் அ. சண்முகதாஸ் வெளியீட்டுரை நிகழ்த்துவதைப் படத்தில் காணலாம். தமிழ்ச்சங்கத் தலைவர் சத்தியசீலன், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் கலாநிதி செ. திருநாவுக்கரசு ஆகியோரும் அருகில் உள்ளனர்.

---

## 26 இந்திய மீனவர்கள் கடற்படையிடம் ஒப்படைப்பு

கொழும்பு,ஜூலை17

தலைமன்னார் கடற்பரப்பில் வைத்து அண்மையில் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்ட 26 இந்திய மீனவர்களும் நேற்றுமுன்தினம் இந்தியக் கடற்படையினரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

கடந்த 2ஆம் திகதி இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்ததாகக் கூறி இவர்களை ஸ்ரீலங்கா கடற்படையினர் கைதுசெய்து மன்னார் மாவட்ட நீதிமன்றில் ஆஜர்செய்தனர்.

இனிமேல் இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழையக்கூடாது என்று எச்சரிக்கைசெய்து பின்னர் மன்னார் நீதிவான் அவர்களை விடுவித்திருந்தார்.

கடந்த சிலநாள்களாக மன்னார் மாவட்ட அரச அதிபரின் பாதுகாப்பில் இருந்த இந்த 26 மீனவர்களும் நேற்று முன்தினம் காலை இந்தியக் கடற்படையினரிடம் கையளிக்கப்பட்டனர்.

இதேவேளை -

கடந்த மேமாதம் இந்திய கடற்பரப்பில் வைத்து அந்த நாட்டு கடற்படையினரால் கைதுசெய்யப்பட்ட இலங்கை மீனவர்கள் இருவர் நேற்று இலங்கை கடற்படையினரிடம் கையளிக்கப்பட்டனர்.

டாக்குநீரிணை கடற்பகுதியில் இந்த மீனவர் பரிமாற்றம் இடம்பெற்றதாகக் கூறப்பட்டது. (ம-4)

---

## அஸ்கிரிய, மல்வத்தை மகாநாயக்கர்களை பிரதமர் ஞாயிறன்று சந்தித்துப் பேச்சு

கொழும்பு,ஜூலை17

கண்டிக்கு விஜயஞ்செய்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அஸ்கிரிய மகாநாயக்கர் சங்கைக்குரிய உடுகம ஸ்ரீ புத்தரகித தேரர், மல்வத்தை பீட மகாநாயக்கர் சங்கைக்குரிய ரம்புக்வெல்ல விபஸ்ஸி தேரர் ஆகியோரைச் சந்தித்துப் பேசியுள்ளார்.

சியமோபாலி மஹா நிக்காயவின் 250 ஆவது உபசம்பதா பட்டமளிக்கும் நிகழ்வில் கலந்துகொள்ள அங்கு சென்றபோதே பிரதமர் இவர்களைச் சந்தித்தார். இந்நிகழ்வு கடந்த ஞாயிறன்று மல்வத்தை மஹா விகாரையில் நடைபெற்றது.

இந்த வைபவத்தை முன்னிட்டு நினைவு முத்திரை ஒன்றையும் நாணயம் ஒன்றையும் பிரதமர் வெளியிட்டு வைத்தார். இதனைப் பிரதமர் மல்வத்தை மகாநாயக்கரிடம் வழங்கினார். இந்நிகழ்வில் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் மலிக் சமரவிக்கிரம, ஸ்ரீதலதா மாளிகையின் தியவதன நிலமே நிரஞ்சன் விஜேரத்ன ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வுக்கு ஜனாதிபதிக்கும் அழைப்பு விடுக்கப்பட்டபோதும் அவர் அதில் கலந்துகொள்ளவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

## செவிப்புலக்கருவி பயன்படுத்த வேண்டிய பாடசாலை மாணவருக்கு இலவசமாக கருவி வழங்கல்

கருவி தேவைப்படும் வறுமைக்குட்பட்ட மாணவர்கள் வைத்திய நிபுணரின் அத்தாட்சிக் கடிதத்துடன் 21-07-2003இற்கு முன் விண்ணப்பிக்கவும்.

விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:
கண் வைத்திய நிபுணர்,
Dr. ச. குகதாசன்,
யாழ். போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

ஆறு.திருமுருகன்,
சிவபூமி அறக்கொடை சார்பில (20356)(21-19-12-26)



## முக்கிய அறிவித்தல்

**யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)**
**கலாசாலை வீதி, திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய**

### கிளைப் பொதுச்சபைக் கூட்டம்

வரையுள்ள யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளைக் குழுத் தெரிவுக்கான கிளைப் பொதுச்சபைக் கூட்டம் எதிர்வரும் 27.07.2003 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை, முற்பகல் 10.00 மணிக்கு கீழ்வரும் அட்டவணையில் உள்ள விவரப்படி நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

| கிளையின் பெயர் | கூட்டம் நடைபெறும் இடம் |
|---|---|
| 1. நல்லூர் | யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், கலாசாலை வீதி, திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய். |
| 2. யாழ்ப்பாணம் | கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபம், இல. 12, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். |
| 3. வலி. கிழக்கு (கோப்பாய்) வடமராட்சி தென்மேற்கு (கரவெட்டி) வடமராட்சி வடக்கு (பருத்தித்துறை) | கந்தசாமி கோவிலடி சனசமூக நிலையம், மானிப்பாய் வீதி, கோப்பாய் வடக்கு, கோப்பாய். |
| 4. வலிகாமம் தெற்கு (உடுவில்) | யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனம், சாவகச்சேரி வீதி, மருதனார்மடம் சுன்னாகம். |
| 5. வலிகாமம் மேற்கு (சங்கானை) | யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க சித்தங்கேணி கிளைக் கட்டடம், சித்தங்கேணி. |
| 6. வலிகாமம் தென்மேற்கு (சண்டிலிப்பாய்) | பண்டத்தரிப்பு பரிஸ் ப.நோ.கூ. சங்கம், பண்டத்தரிப்பு. |
| 7. வலிகாமம் வடக்கு (தெல்லிப்பழை) | மகாஜன சபை மண்டபம், கூட்டுறவாளர் வீதி, அளவெட்டி. |
| 8. தென்மராட்சி (சாவகச்சேரி) | சாவகச்சேரி ப.நோ.கூ.சங்கம், கண்டிவீதி, சாவகச்சேரி. |

குறிப்பு:
வடமராட்சி தென்மேற்கு (கரவெட்டி), வடமராட்சி வடக்கு (பருத்தித்துறை) ஆகிய இரண்டு கிளைகளிலும் அங்கத்தவர்கள் குறைவாக இருப்பதால் உபவிதிக்கு அமைவாகவும் நெறியாளர்குழுத் தீர்மானத்திற்கு அமைவாகவும் வலி. கிழக்கு (கோப்பாய்) பிரதேசக் கிளையுடன் இணைக்கப்பட்டுள்ளது.

தங்களது சங்கத்தின் நிர்வாகத்தில் ஒவ்வொரு உறுப்பினர்களும் பங்குபற்றும்முகமாக இக்கிளைக்குழுத் தெரிவில் பங்குபற்றி தங்கள் கிளைக்குழுவைத் தெரிவுசெய்து தங்கள் சங்கத்தின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

செயலாளர்.
யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம். (சி-28993)(21-25-19-12)



## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்

மலர்வு 19 - 10 - 1948



உதிர்வு 17 - 06 - 2003

### திருமதி பரசுராமன் புஸ்பராணி

அன்பின் திருவுருவே ஆனந்தத்தின் புகலிடமே
சொந்தங்கள் நாம் இங்கே சேர்ந்து நிற்கையிலே
பந்தங்கள் நீயறுத்துப் பாதி வழி போனதேனோ?
எந்தெந்தப் பிறவியென் நீ யெடுத்தாலும்
மீண்டும் எம்முறவில் ~ நீ
வந்து பிறப்பாய் என எண்ணுகிறோம் ~ அம்மா!

எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதோடு, இன்று (17.07.2003) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

புதராயர் கோயிலடி,
அன்னங்கை, உரும்பிராய் மேற்கு. (20344)(21-12-19) - குடும்பத்தினர்.


## புத்தகக் கண்காட்சி

தென்மராட்சி, ஜூலை17

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு பளைப் பிரதேச பொதுநூல் நிலையங்கள் இணைந்து நடத்தும் நூலக வாரமும் புத்தகக் கண்காட்சியும் நாளை வெள்ளிக்கிழமை பளை பொதுநூலக மண்டபத்தில் இடம்பெறவுள்ளன.

கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரி.இராஜநாயகம் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு கண்காட்சியை ஆரம்பித்து வைக்கவுள்ளார். (ஒ-10-117)

## கோப்பாயில் குளங்கள் புனரமைப்பு

வலி.வடக்கு, ஜூலை17

கோப்பாய் மத்தி கிராம அலுவலர் பிரிவில் உள்ள இரண்டு குளங்கள் உலகஉணவு நிறுவனத்தின் உதவித் திட்டத்தின் கீழ் புனரமைப்பு செய்யப்பட்டு வருகின்றன.

கோப்பாய் மத்தி அம்மன் கோயில் குளம், கோப்பாய் வேளக்குளம் என்பனவே ஆழமாக்கப்பட்டும் அணைக் கட்டுகள் மற்றும் வாய்க்கால்கள் சீர் செய்யப்பட்டும் வருகின்றன. இப் பணிகள் அப்பகுதி மக்களினால் மேற்கொள்ளப்படுகின்றன.

கோப்பாய் பிரதேச உதவிப் பிரதேச செயலாளர் எஸ்.இராசதுரை இப் பணிகளை ஆரம்பித்து வைத்துள்ளார்.

நாளாந்தம் இப்பணியில் ஐம்பது க்கும் மேற்பட்டவர்கள் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.(ஒ-86)

## மேலதிக சிகிச்சைக்கு அனுப்பிவைப்போர் தொகை அதிகரிப்பு

தென்மராட்சி,ஜூலை17

கடந்த ஆறுமாத காலப்பகுதியில் சாவகச்சேரி வைத்தியசாலையில் இருந்து 900 நோயாளர்கள் மேலதிக சிகிச்சைக்கென யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

சாவகச்சேரி வைத்தியசாலையில் போதிய சிகிச்சை வசதிகள் இல்லாத காரணத்தினாலேயே இவ்வாறு அதிகளவிலான நோயாளர்கள் யாழ். ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர். சில நாள்களில் ஐந்து தடவைகளுக்கு மேலும் அம்புலன்ஸ் சாவகச்சேரியிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வந்து செல்கின்றமை குறிப்பிடத்தக்கது. (ஒ-10-117)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஜூலை17

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு வேலணைப் பிரதேச சபையும், மகளிர் அபிவிருத்தி நிலையமும் இணைந்து நடத்தும் "உள்ளூராட்சி நிர்வாக கட்டமைப்பில் சமூகமேம்பாடும், பெண்களும்" என்ற தொனிப் பொருளிலான கருத்தரங்கு நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு வங்களாவடி பலநோக்குக் கூட்டுறவுச்சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வேலணை பிரதேச சபைச் செயலாளர் செ.சண்முகராசா தலைமையில் நடைபெறும் இக்கருத்தரங்கில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி.வி.கிருஷ்ணசாமி கலந்துகொள்கிறார். (ஒ-5)

## புற்றுநோய்க்கு சிகிச்சை

யாழ்ப்பாணம்,ஜூலை17

தெல்லிப்பழையில் அமைந்துள்ள புற்றுநோய் சிகிச்சை நிலையத்தில் எதிர்வரும் 22ஆம், 23ஆம் திகதிகளில் கொழும்பில் இருந்து வருகை தருவுள்ள புற்றுநோய் வைத்திய நிபுணரால் நோயாளர்களுக்கு சிகிச்சைகள் வழங்கப்படவுள்ளதாக பதில் தாகாணப் பிரதிப் பணிப்பாளர் கே.ரி. சிவயோகம் அறிவித்துள்ளார். (ஒ-10)

## காற்றினால் சேதமான வாழைகளின் மதிப்பு

வலி.வடக்கு,ஜூலை17

4 கோடியே 70 லட்சம் ரூபா பெறுமதியான வாழை மரங்கள் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் வீசிய கடும் காற்றினால் சேதமடைந்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

புயல் காற்றினால் சேதமடைந்த வாழைகள் சம்பந்தமான புள்ளி விவரங்கள் யாழ். செயலகத்தினால் சேகரிக்கப்பட்டது. அப்போதே இத்தொகை நட்டம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நட்டம் அடைந்த விவசாயிகளில் மூன்று பேர் மட்டுமே வாழைகளுக்கான காப்புறுதியை மேற்கொண்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-86)


## யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி விஞ்ஞானமன்ற பொதுக்கூட்டம்

விஞ்ஞான தினம் தொடர்பான மிகமுக்கியமான கலந்துரையாடல் நாளை (18.07.2003) வெள்ளிக்கிழமை மு.ப. 11.30 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

2003இல் க.பொ.த.உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய விஞ்ஞான மாணவர்கள் அனைவரும் சீருடையுடன் தவறாது சமுகம் தரவும்.

அதிபர். (20345)(26) - பொறுப்பாசிரியர்கள்.



## துயர் பகிர்வு

எமது பாடசாலை சங்கீத ஆசிரியை திருவாட்டி
**சி.கனகாம்பரி** அவர்களின் அருமைத் தந்தையாரும்
எமது மண்ணின் ஈடிணையற்ற நாதஸ்வர மேதையுமாகிய
**கலாசூரி N.K. பத்மநாதன்**
அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தவரின் துயரில் நாமும் பங்குகொள்கிறோம்.

பாடசாலைச் சமூகம்,
(20347) (21-26-12-19) யா/பெரியபுலம் ம.வி.



## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை **திருமதி சி.கிரிதரன்**
அவர்களின் அன்பு மாமனார் நாதஸ்வர பூபதி
**என்.கே. பத்மநாதன்**
அவர்களின் மரணச் செய்தி அறிந்து அதிர்ச்சியும் வேதனையும் அடைகின்றோம். அவரின் பிரிவால் துயரடைந்திருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம்சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பாடசாலைச் சமூகம்,
(20353) (21-26-19-12) யா/கொட்டடி நமசிவாய வித்தியாலயம்.



## புகழ்மணியே போயினையோ!



அளவையூர்
**கலாசூரி N.K.பத்மநாதன்** அவர்களின்
மறைவையொட்டிய இரங்கற்பா

நல்லளவைப் பதியோனே நாதஸ்வர கலாநிதியே
சொல்லார் விருதுபெற்ற தாயவனே ~ பல்லோரும்
போற்றும் புகழ்மணியே போயினையோ ஈசனடி
ஆற்றுமோ எந்தன் அகம்.
அமரர் ஆத்மா சாந்திபெற பிரார்த்திக்கின்றோம்!

430, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம். (C/28994) பாரதி பதிப்பகம் (21-12-19)



## கண்ணீர் அஞ்சலி



அளவையூர் தந்த தவப்புதல்வர்
**கலாசூரி என்.கே.பத்மநாதன்**
அவர்களின் மறைவுக்கு இசை உலகுக்கும் பிரிவால் வருந்தும் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்கள்!

மூர்த்தி விளம்பர சேவை
பதிப்பு/ஊழியர் குடும்பத்தினர்.
தேவி அச்சக ஒழுங்கை,
114/19, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
(20348) (21-26-12-19)



## கலைஞருக்கு கண்ணீர் அஞ்சலி



நாதஸ்வர கான கலாநிதி
**N.K. பத்மநாதன்**
(J.P)
அவர்கள் 15-07-2003 அன்று காலமானார்.

அன்னாரின் மறைவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

479, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். சு.பாஸ்கரன் ஆச்சாரி
T.P. 222 3515 (20354)(21-12-19) குடும்பத்தினர்.



## எமது இதய அஞ்சலி



நாதஸ்வர கான கலாநிதி
**என்.கே.பத்மநாதன்**

ஏழிசையின் இசைப்பயனை எம்மனோர்க்குத்தந்திந்து
வாழுகின்ற உயிர்களையே வசமாக்கு வழிவித்தாய்
பாமும் விதியுன்னைப்பறி பரமனிடை சேர்த்ததுவே
ஆழுகின்றோம் துயர்தனிலே அண்ணலே நீ சாந்தியடை!

மரபு வழி தவறாது மாண்புடனே நாதஸ்வர
உருப்படிகள் வாசித்து உத்தமனே கலாசூரி
வருகின்ற சந்ததிகள் கலை வளர வாழ்வளித்தாய்
பெருமை மிக்க தமிழீழம் பேணுகின்ற துன்நாமம்!

15-07-2003 அன்று காலமான நாதஸ்வர கான கலாநிதி என்.கே.பத்மநாதன் அவர்களின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். அன்னாரின் குடும்பத்தார்க்கு எமது அனுதாபங்கள்.

சிவஸ்ரீ சோ.இ.பிரணதார்த்திஹர குருக்கள் குடும்பம்
(20346) வீரபத்திர சுவாமி கோயில், கோப்பாய். (21-12-19)

# ஆடிப்பிறப்பும் அர்த்தமுள்ள விரதங்களும்

*"ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை ஆனந்தம் ஆனந்தம் தோழர்களே, கூடிப்பனங்கட்டி கூழும் குடிக்கலாம் கொழுக்கட்டை தின்னலாம் தோழர்களே."*

இது நவாலியூர் சோமசுந்தரப்புலவரின் பாடல் வரிகள் ஆகும். சைவத் தமிழ் மக்கள் வாழ்வு நலன்கருதியும் உழவர் பெருமக்களது பலன்கருதியும் ஆடிப்பிறப்பை முறைதவறாது காலங்காலமாகக் கொண்டாடி வருகின்றனர். இத்தினம் தெட்சணாயன ஆரம்பகாலத்தில் வருவதால் ஆடிப் பிறப்பை நாடிக் கொண்டாடுகின்றார்கள்.

"உழுவார் உலகத்தார்க்(கு) ஆணி அஃ தாற்றா(து)
எழுவாரை எல்லாம் பொறுத்து" என்ற குறள் மொழியின்படி பயிர் வளர்த்து மக்களின் உயிர் வளர்க்கும் உழவர் பெருமக்கள் தங்கள் வேளாண்மைச் செயற்பாடுகளை ஆடிமாதத்தில் ஆரம்பிப்பார்கள். இதனால் தான் 'ஆடிவிதை தேடிவிதை' என்றும் 'ஆடிக்காற்றில் அம்மியும் பறக்கும்' என்றும் முதுமொழிகள் தோன்றின எனலாம்.

## இன்று ஆடிப்பிறப்பு

சிலர் இந்த நாளை விரதநாளாகக் கருதி ஆலய தரிசனம் செய்து சுபீட்ச வாழ்வுக்காகப் பிரார்த்திப்பர். இந்த நாளில் பலவித பலகாரங்கள் செய்து, ஆடிக்கூழ் உண்டு கூடிக்குலாவுவர். சிறுவர்களுக்கு கூழ் குடிப்பதென்றால் கொண்டாட்டம்தானே! கூழோடு கொழுக்கட்டையும் சேர்ந்தால் குதூகலம் மேலும் அதிகமாகுமன்றோ! அந்த ஆனந்தத்தின் எல்லையைத் தொடுவதுபோல் மேலே உள்ள பாடல் அமைந்துள்ளது.

ஆடி மாதத்தில் ஆடிப்பூரம், ஆடி அமாவாசை ஆடிச்செவ்வாய் என்பனவும் முக்கிய நாள்களாகும். ஆடிப்பூரம் அம்பாளின் ருது காலமெனக் கொள்ளப்படுகிறது. அம்பிகை ஆலயங்களில் அம்பிகையை அலங்கரித்து எழுந்தருளச் செய்து கன்னித்தாயென எண்ணி அம்பாள் துதி பாடுவர். அம்பாள் அடியார்கள் அம்பாளுக்கு பட்டாடைகளும் பலவித ஆபரணங்களும் வழங்கி அடியார்களுக்கும், அந்தண பெருமக்களுக்கும் தான தருமங்கள் செய்து மகிழ்வர். கன்னிப்பெண்களும் சுமங்கலிகளும் இவ்விரதத்தை அனுஷ்டித்து எண்ணிய எண்ணியாங்கு எய்துவர்.

ஆடி அமாவாசை, அமாவாசைகளில் சிறந்ததாகும். தந்தையரை இழந்தவர்கள் மிகுந்த பய பக்தியோடு அவர்களின் ஆத்மசாந்திக்காக விரதமிருந்து, ஆலயங்களுக்குச் சென்று, அந்தணர்களுக்குத் தான தர்மம் செய்து இல்லத்தில் இனபந்துகளோடு கூடியிருந்து அமாவாசை விருந்துண்டு பிதிர்களுக்குப் பிரீதி செய்வர். இந்த விரதம் காப்பதால் சந்தானவிருத்தி, தேக ஆரோக்கியம், நிலைபேறு, பிதிர்களின் ஆசிர்வாதம் என்பன கிடைக்கும் என்பர்.

அடுத்து ஆடிச்செவ்வாய் விரதமும் முக்கியமானதேயாகும். ஆடி மாதத்தில் வரும் அனைத்துச் செவ்வாய்க்கிழமைகளிலும் அம்பாளையும் முருகனையும் சிந்தித்தும் வந்தித்தும் அடியார்கள் விரதமிருப்பர். செவ்வாய் வழிபாடு முருகனுக்குப் பிரியமானதாகும். அம்பாளையும் முருகனையும் பய பக்தியோடு இத்தினங்களில் வழிபடுபவர்கள் செவ்வாய்த்தோஷ நிவர்த்தியும் திருமணப்பேறும் அடைவர் என்பது அனுபசாலறுகளாகும்.

எனவே, ஆடிமாத விரதங்கள் அனுகூலமானவை என்று கருதி அனுஷ்டிப்பது நல்ல பலன்களைத்தரும். ஆடிமாதத்தில் சுப காரியங்கள் செய்யப்படுவதில்லை என்ற எண்ணம் மக்கள் மத்தியில் பரவலாக இருந்து வருகின்றது. அப்படிச்செய்தால் எல்லாம் ஆடிப்போம் என்ற பயமோ தெரியவில்லை. "நாளும் கோளும் நல்லவருக்கில்லை" என்பதும் "அவை நல்ல நல்ல அடியவர்க்கு மிகவே" என்று சொல்லப்படுவதை உணர்ந்து தெளியலாம்.

இதைவிட ஆடி மாதத்தில் 'ஆடிப்பெருக்கு' என்ற ஒரு விழாவும் கொண்டாடப்படுவதும் வழக்கம். இதனைப் பண்டைய இலக்கியங்களில் 'புனலாட்டு' (புனிதநீர் வரவேற்பு) என்ற விழாவாகக் காண்கின்றோம். ஆடி மாதத்தில் வான்முகில் வழாது பெய்து ஆறுகளில் புதுப்புனல் குதித்துவரும். இந்த புதுப்புனலை ஆறுகளில் வரவேற்பதற்காக ஆண்கள், பெண்கள், குழந்தைகள் அனைவரும் சென்று நீராடி அதன்பின் விழாக்கோலம் பூண்டு, உண்டு கழித்து மகிழ்வர். இவ்விழா ஆடிபதினெட்டாம் நாளில் கொண்டாடப்படுவதனால் இதற்கு 18 ஆம் பெருக்கு என்றும் பெயருண்டு. எமது பாரம்பரியங்களை மறந்துவிடாது நினைவுகூர்ந்து கொண்டு கடைப்பிடிப்பது எம்மவர்க்கு நன்மை பயப்பதாகும்.

"நல்லாற்றான் நாடி அருளாள்க; பல்லாற்றான்
தேரினும் அஃது துணை"

- குறள்

**க.ச.பிள்ளை**

## மாணவர்களுக்கு பேச்சுப்போட்டி

வடமராட்சி,ஜூலை17

தொண்டமனாறு மயில்வாகனம் சுவாமிகளின் 18ஆவது குருபூசைத் தினத்தையொட்டி பாடசாலை மாணவர்களிடையே மூன்று பிரிவுகளாக பேச்சுப்போட்டி நடத்தப்படவுள்ளது.

பேச்சுப் போட்டிகளில் வெற்றியீட்டும் மாணவர்களுக்கு அடுத்த மாதம் 4ஆம் திகதி நடைபெறும் மயில்வாகனம் சுவாமிகளின் குரு பூசைத் தினத்தன்று பரிசில்கள் வழங்கப்படும்.

இப்போட்டிக்கான ஏற்பாடுகளை சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை மேற்கொண்டுள்ளது.

(ஓ-173)

## வாராந்த நிகழ்வு

வடமராட்சி,ஜூலை17

தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடத்திவரும் வாராந்த நிகழ்வில் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30மணிக்கு சித்தாந்த பண்டிதர் சி.வேலாயுதம் "வழிகாட்டிய வாதவூரர் வண்டு" என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றுவார்.

இந்த நிகழ்வுக்கான அறிமுகவுரையை கிராம உத்தியோகத்தர் சி. முருகவேள் நிகழ்த்துவார்.

(ஓ-173)

# அ.அட்டைக்கான நடமாடும் சேவையில் நாய்படாத பாடுபட்ட பொதுமக்கள்

தென்மராட்சிப் பிரதேசத்தில் வசிக்கும் மக்களின் நன்மைக்காக என்று கூறி ஆள்பதிவுத் திணைக்களம் தேசிய அடையாள அட்டைகளுக்கான நடமாடும் சேவை ஒன்றை




கடந்த செவ்வாய்க்கிழமை சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் நடத்தியது.

இந்த நடமாடும் சேவையில் மக்கள் நாய்படாத பாடுபட்டதை அங்கு நேர்டியாகக் காணக்கூடியதாக இருந்தது.

இச்சேவை காலம் தாழ்த்தியே இங்கே ஆரம்பமாகியது. அத்தோடு, இச்சேவை எங்கே நடைபெறும் என பொதுமக்களுக்கு முறையாக அறிவிக்கப்பட்டிருக்கவில்லை. இதனால், தூர இடங்களில் இருந்து வந்தவர்கள் அனுமானத்தின் பேரில் தென்மராட்சிப் பிரதேச செயலகத்திற்கே முதலில் சென்றனர். ஆனால், அங்கு சென்றவர்களுக்கு ஏமாற்றமே மிஞ்சியது. ஏனெனில், சேவை அங்கு நடைபெறவில்லை. இதனால், இம்மக்கள் ஆங்காங்கே கேட்டறிந்து நடமாடும் சேவை இடம்பெற்ற சாவகச்சேரி இந்துக்கல்லூரியை ஒருவாறு வந்தடைந்தனர். இதனால், பஸ்ஸில் வந்தவர்கள் மேலதிகமாக செலவு செய்ய நேரிட்டது. வறுமைக்கோட்டிற்கு கீழுள்ள குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் பிரதேச செயலகத்தில் இருந்து நடந்தே நடமாடும் சேவை இடம்பெற்ற இடத்திற்குச் சென்றனர்.

அத்துடன், இச்சேவை ஒழுங்கான கட்டுப்பாடான முறையில் திட்டமிட்டு நடத்தப்படவில்லை என்றே கூறவேண்டும். இதில் கலந்துகொண்ட மக்கள் முண்டியடித்து கட்டுப்பாடற்ற நிலையில் தம் தேவையை நிறைவேற்றுவதற்காக அங்கு சென்றனர். இவ்வேளை இச்சேவையை வழங்க வந்த கொழும்பு ஆள்பதிவுத் திணைக்கள அலுவலர்களும், யாழ்.செயலக அலுவலர்களும் செய்வதறியாது திணறிநின்றதைக் காணக்கூடியதாக இருந்தது.

நடமாடும் சேவையை சீராக மேற்கொள்ள பிரதேச செயலகம் முன் நடவடிக்கை மேற்கொள்ளாததே இதற்குக்காரணம் என்று கூறப்படுகிறது.

இச்சேவையில் பெரும்பாலும் பயன்பெறும் நோக்கோடு வந்தவர்கள் கல்வி அறிவு குறைந்த மக்களும், வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட மக்களுமே ஆவர். இவர்களில் பலர் படிவங்களை பூரணமாக நிரப்பவில்லை. இதனால், தம்பகுதி கிராம சேவையாளர்களைப் "பெற்றோரைத் தவற விட்ட பிள்ளை" போலத் தேடினார்கள். ஆனால், கிராம சேவையாளர்களில் பலர் இச்சேவைக்கு சமுகமளிக்கவில்லை. இது சம்பந்தமாக பொறுப்பான அதிகாரியிடம் பொதுமகன் ஒருவர் விசாரித்தபோது, அது பற்றித் தெரியாது என்று அலட்சியமாகப் பதிலளிக்கப்பட்டது.

இச்சேவையில் பயன்பெற வந்த மக்களில் ஒரு பகுதியினர் மண்டபத்தின் உள்ளே நுழைந்து கதவைப் பூட்டிக்கொள்ள ஏனையோர் மண்டபத்தின் வெளியே செய்வதறியாது நின்றனர்.

இச்சேவைக்கு வருகைதந்த கிராம சேவகர்களிடம் "ஏனைய கிராம சேவகர்கள் ஏன் வரவில்லை" என்று கேட்டபோது தம்மை இச்சேவைக்கு வருமாறு அழைப்பு விடப்படவில்லை என்றும் - தாம் மனிதாபிமான முறையில் தம்து பிரிவு மக்களின் நலன் கருதி வந்ததாகவும் அவர்கள் தெரிவித்தார்கள்.

### தீபன்

அடையாள அட்டை தொலைத்தவர்களும், அடையாள அட்டை பழுதடைந்தவர்களுமே இச்சேவையில் கலந்துகொள்ளலாம் எனப் பிரதேச செயலகத்தினால் முன்னர் மக்களுக்குப் பத்திரிகைகள்மூலம் தெரியப்படுத்தப்பட்டிருந்தன. கிராமசேவையாளர்களுக்கும் அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், தேசிய அடையாள அட்டைக்கான புதிய விண்ணப்பப் படிவங்களும் அங்குகடமை புரிந்தவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டன. ஆயினும், புதிதாக விண்ணப்பத்தை சமர்ப்பித்தவர்களில் பெரும்பாலானவர்களுக்கு விண்ணப்பித்ததற்கான பற்றுச் சீட்டோ அல்லது சான்று ஆதாரமோ கிடைக்கவில்லை.

நடைபெற்று முடிந்த இச்சேவையானது "காகம் அன்ன நடை நடக்கப் போய் தன்னடையும் இழந்த" கதையாக முடிந்ததுள்ளதாகவே பொதுமக்கள் கருதுகின்றனர்.

எனவே, இனிவரும் காலங்களிலாவது இப்படியான சேவைகளை வழங்க முன்னர் திட்டமிட்டு ஒழுங்கான முறையில் மக்களின் நலனையே கருத்திற்கொண்டு செயற்படுத்தவேண்டும். இதுவே, மக்களுக்கு செய்யும் உண்மையான சேவையாகும்.

# ஊனமுற்றோரின் வாழ்வை மேம்படுத்த நடவடிக்கை

## பிரதேச செயலக அதிகாரி தகவல்

யாழ்ப்பாணம்,ஜூலை17

உடல் ஊனமுற்றவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காக கிராம மட்டத்திலான குழுக்கள் அமைக்கப்படவுள்ளதாக நல்லூர் பிரதேச செயலர் பிரிவின் சமூக சேவ உத்தியோகத்தர் க.சண்முகலிங்கம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கைச் சமூகசேவைத் திணைக்களத்தின் ஏற்பாட்டிலேயே இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இதற்கான முதற்கட்ட நடவடிக்கையாகத் தெரிவுசெய்யப்பட்ட கிராம சேவையாளர் பிரிவுகளில் தலா ஒரு தொண்டர் நியமிக்கப்படவுள்ளார்.

இந்தத் தொண்டர்கள் குழுக்களாகப் பிரிக்கப்பட்டு அக்குழுக்கள் மூலம் கிராமசேவையாளர் பிரிவுகளில் உள்ள ஊனமுற்றோர் பற்றிய விவரங்கள் சேகரிக்கப்படும். இக்குழுவினரால் சேகரிக்கப்படும் விவரங்களை அடிப்படையாகக் கொண்டு தகுதிக்கேற்ப ஊனமுற்றவர்களுக்கு தொழிற் பயிற்சிகள் அளிக்கப்படவுள்ளன.

இத்திட்டத்தின் கீழ் ஊனமுற்றோர்க்கு உதவியளித்தல் மற்றும் வீடுகளுக்குச் சென்று பயிற்சியளித்தல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

உடல் ஊனமுற்றோரின் உள நலத்தைப் பேணல், தொழில் முயற்சியை ஏற்படுத்திக் கொடுத்தல், கல்வி சார் நடவடிக்கைகளில் அர்வம் கொள்ளச்செய்தல் போன்ற நோக்கங்களை அடைவதே இத்திட்டத்தின் நோக்கமாகும் என்றார் அவர். (ஓ-12)

# 20சதவீதமான பொலீஸாருக்கு இரத்த அழுத்த நோய்த்தாக்கம்

கொழும்பு,ஜூலை17

போக்குவரத்துப் பிரிவில் பணியாற்றும் பொலீஸாரில் சுமார் 20சதவீதமானவர்கள் இரத்த அழுத்த நோயால் பீடிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. கொழும்பு நகரசபை சுகாதார அதிகாரிகளினால் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஒரு கணிப்பீட்டிலேயே இது தெரியவந்தது. போக்குவரத்துப் பிரிவுப் பொலீஸார் வீதிகளில் பணியில் ஈடுபடும்போது, வாகனங்கள் வெளியேற்றும் புகையைச் சுவாசிப்பதே இதற்கு முக்கிய காரணம் என்று நம்பப்படுகிறது.

பெரும்பாலான இடங்களில் பொலீஸ் நிலையங்கள் வீதிகள், பிரதான வீதிகள் மற்றும் பெருந்தெருக்கள் ஓரமாக அமைந்திருப்பது நோய்த்தாக்கத்துக்கு மற்றொரு காரணமாகும்.

வாகனங்கள் அதிகளவில் புகையை வெளியேற்றுவது ஒரு தொடர் பிரச்சினையாக உள்ளதாகவும் -

இனிமேல் வாகனங்களுக்கான அனுமதிப்பத்திரம் வழங்கப்படும் போதும், அவைகள் புதுப்பிக்கப்படும் போதும் அந்த வாகனங்கள் வெளிவிடும் புகையின் அளவு குறித்து கூடியகவனம் செலுத்தப்படும் என்றும் -

மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்கள அதிகாரி எஸ்.எம். விக்கிரமசிங்க தெரிவித்தார்.

வாகனங்கள் வெளியேற்றும் புகையின் அளவைப் பரிசோதிக்க சோதனை நிலையங்கள் நாடு முழுவதும் விரைவில் அமைக்கப்படவுள்ளன. அடுத்த வருடம் தொடக்கம் பாவனைக்குத் தகுதியற்ற வாகனங்களைக் கண்டறிந்து அவற்றைப் பாவனையிலிருந்து விலக்குவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஓ-ரி)

# தமிழர்களின் உரிமையை மறுப்பதில் சிங்களக் கட்சிகளிடையே ஒற்றுமை

## அரசியல்துறைத் துணைப்பொறுப்பாளர் உரை

வலி.வடக்கு,ஜூலை17

தமிழ்மக்களுக்கு எந்த உரிமைகளையும் வழங்கக்கூடாது என்பதில் சிங்களக் கட்சிகளின் தலைவர்களிடையே ஒத்தகருத்தே நிலவுகின்றது.

- இவ்வாறு தெரிவித்தார் விடுதலைப் புலிகளின் யாழ் மாவட்ட அரசியல்துறைத் துணைப் பொறுப்பாளர் செம்மணன்.

வலி.வடக்கு தேசிய எழுச்சிப் பேரவையின் பிரதேச மட்டத்திலான கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். வலிகாமம் கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் வே. தமிழ்மறவன் தலைமையில் இடம்பெற்ற இக்கூட்டத்தில் உரையாற்றிய செம்மணன் மேலும் தெரிவித்ததாவது:-

இங்கு நாம் மேற்கொண்டுவருகின்ற சகல செயற்பாடுகளும் எமது மண்ணின் விடுதலைக்கும் மக்களின் நல்வாழ்வுக்குமே ஆகும். அது யுத்த காலத்தில் என்றாலும் சரி; சமாதான காலத்தில் என்றாலும் சரி விடுதலையை இலக்காகக் கொண்டே இருக்கும்.

தேசிய எழுச்சிப் பேரவையும் எமது தலைவரின் சிந்தனையில் உருவாகிய ஓர் அமைப்புத்தான். இது தேசியம், தன்னாட்சி உரிமை மற்றும் பொருளாதார விழுமியங்கள் என்பவற்றை வளர்த்தெடுப்பதற்கே உருவாக்கப்பட்டுள்ளது.

சமாதானத்தை ஏற்படுத்துவதற்குப் பல்லாயிரக்கணக்கான உயிர்களையும் பலகோடி ரூபா பெறுமதியான சொத்துக்களையும் இழந்துள்ளோம். மக்களும் யுத்தத்தினால் பெரிதும் பாதிக்கப்பட்டுவிட்டனர். இந்நிலை தொடரக்கூடாது என்பதற்காகவே நாம் யுத்தநிறுத்தத்தில் ஈடுபட்டோம் - என்றார். (ஓ-10-86)

# புதிய சர்வதேச விமானநிலையம் வெள்ளவாயவில் அமையும்!

இலங்கையின் இரண்டாவது சர்வதேச விமானநிலையத்தை மொனறாகல மாவட்டத்தைச் சேர்ந்த வெள்ளவாய பிரதேச செயலாளர் பிரிவில் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

பத்தாயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் இந்த சர்வதேச விமானநிலையம் அமையும்.

குடாஓயா, மாரிஅராவ, நெலுல்ல, கேத்ஹேன, தெபிலியாய, மாணிக்க கங்கைக்கரை ஆகிய பகுதிகளில் உள்ள நிலப்பகுதி இதற்காகப் பயன்படுத்தப்படும்.

இந்நிலப்பரப்பில் அமைந்துள்ள நிரந்தர வீடுகள், நெல்வயல்கள், குளங்கள், மலைப்பகுதிகள், உறுதியில்லாத நிலங்கள், வெற்று நிலங்கள், காடுவளர்ப்புப் பகுதி, மேய்ச்சல் நிலம் போன்றன பற்றிய விவரங்களை அதிகாரிகள் சேகரித்து வருகின்றனர்.

விவரங்கள் சேகரிக்கும் அதிகாரிகளின் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதும் விமான சேவை அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் ஹேமசிறி பெர்ணாந்து தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# பணி தொடர்ந்து வாழி!



வல்வெட்டித்துறை அஞ்சல் அலுவலகத்தின்
சமரபாகு உப அஞ்சலக அதிபர்

## திரு.தம்பு கணேஸ் அவர்கள்

யாழ்.மாவட்ட சமாதான நீதிவானாகப் பதவிப்பிரமாணம் செய்து நியமனம் பெற்றதையிட்டு நாம் பெருமகிழ்ச்சி அடைவதோடு,

தீண்டுந் துயரம் களைந்திங்கு
தினமும் இன்பம் காண்பதற்கும்
நீண்ட ஆயுள் பெற்றிங்கு - இந்த
நாட்டுக்குச் சேவை செய்திடவும்,

எமது மனமார்ந்த வாழ்த்துக்களையும் தெரிவித்துப் பணி தொடர வேண்டுகின்றோம்.

நலன்புரிச் சங்கத்தினர்,
அஞ்சலகம்,
வல்வெட்டித்துறை.

(20368) (30-14-16)

# கண்ணீர்க் காணிக்கை

**அமரர் கலாபூஷணம் என்.கே.பத்மநாதன்**
அவர்களுக்கு எமது கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்

கான மழைபொழிந்த
காந்தருவக் கரு முகிலே
கைவிரல்கள் மீட்க
கனி இதழ்கள் தாமசைய
மெய் வியர்வை சிந்த
இந்த
மேதினியை ஆண்டவனே!
நல்லூரின் வீதியிலே
உன்
நாயனத்தின் ஓசையிலே
கல்லும் கனிந்த
காலம் இனி வருமோ?
யவன புரச் சிற்பி
கருங்காலியிற் கடைந்த
யவ்வனத்துச் சிற்பம் ஒன்று
கைகளிலே குழலேந்தி
விருந்தளித்த வித்தகத்தைக்
கோயில்,
வீதிகளில் காண்பதெப்போ?
நாதஸ்வர இசையை
ஞாலமெலாம் கொண்டு சென்ற
மேதையினை நாங்கள்
இந்த
மேதினியிற் காண்பதெப்போ?

பழங்கிணற்றடி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயம்,
திருநெல்வேலி.

(C28999) (32-14-16)

# ஆத்மசாந்திப் பிரார்த்தனை

கைதடி வீரகத்திப் பிள்ளையார் கோயில் முதலாய கோயில்களின் பரம்பரைத் தலைவர்களில் ஒருவரான

## இராமலிங்கம் சிதம்பரநாதர்

அவர்கள் 16.07.2003 புதனன்று கொழும்பில் காலமாகிவிட்டார். கைதடி கிழக்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொழும்பைத் தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட இவரது ஆத்மா சாந்தியடைய வேண்டுமென எல்லாம்வல்ல கைதடி வீரகத்திப் பிள்ளையாரை இறைஞ்சுகின்றோம்.

இவரது பிரிவால் வருந்தும் குடும்பத்தினருக்கும் உற்றார், உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*– நம்பிக்கைப் பொறுப்பாளர் பரிபாலன சபையினர்,*
(20359) (25-14-16) *கைதடி வீரகத்திப் பிள்ளையார் கோயில் முதலாய கோயில்கள்*

# சமய சந்நிதிகளில்

கொழும்புத்துறை,ஜூலை17

பாண்டியன் தாழ்வு புனித அன்னம்மாள் ஆலய வருடாந்த திருவிழா நாளை வெள்ளிக்கிழமை மாலை 5மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

நவநாள் ஆராதனைகள் தினமும் மாலை 5.30 மணிக்கு இடம்பெறும். 26 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5.30 மணிக்கு நற்கருணை ஆராதனையும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 7மணிக்கு திருவிழாத் திருப்பலியும், திருச்சொரூப பவனியும் இடம்பெறும். (எ-30)

★ ★ ★

கொழும்புத்துறை,ஜூலை17

குருநகர் புனித யாகப்பர் ஆலய வருடாந்த திருவிழா நேற்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

எதிர்வரும் 24ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 5மணிக்கு நற்கருணை ஆராதனையும்,25ஆம் திகதி காலை 7மணிக்கு திருவிழாத் திருப்பலியும் மாலை திருச்சொரூப பவனியும் இடம்பெறும். (எ-30)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜூலை17

உடுப்பிட்டி உலக இரட்சகர் தேவாலய வருடாந்தத் திருவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

எதிர்வரும் 20 ஆம் திகதி காலை 7மணிக்கு திருநாள் திருப்பலியும் திருச்சொரூப பவனியும் இடம்பெறவுள்ளன. (ஒ-10)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜூலை17

பொலிகண்டி குழந்தை யேசு தேவாலயத்தின் வருடாந்தத் திருவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

இதில் எதிர்வரும் 22ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 7மணிக்கு திருவிழாத் திருப்பலி, சொரூப பவனி என்பன இடம்பெறவுள்ளன. (ஒ-10)

★ ★ ★

இளவாலை புனித யாகப்பர் ஆலய வருடாந்த திருவிழா, நவநாள்கள் நேற்று புதன்கிழமை முதல் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன.

தினமும் மாலை 5.30 மணிக்கு திருச்செப மாலையுடன் நவநாள் வழிபாடுகள் இடம்பெற்று எதிர்வரும் 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்குத் திருவிழாத் திருப்பலி இடம்பெறும். (ஒ-8)

## மக்கள் பணிமனையுடன் தொடர்புகொள்ள வேண்டுகோள்

யாழ்ப்பாணம்,ஜூலை17

யாழ்.குடாநாட்டில் இடம்பெயர்ந்த முஸ்லிம்களுக்கு சொந்தமான காணிகளின் உறுதிகளில் பிற நபர்கள் மோசடி செய்து விற்றும், குத்தகைக்குக் கொடுத்தும் வருவதாகவும் - ஆகவே, இது தொடர்பாகப் பொதுமக்கள் விழிப்புடன் இருக்குமாறும்- மக்கள் பணிமனை இணைப்பாளர் மௌலவி பி.ஏ.எஸ்.சுபியான் கேட்டுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் கூறியதாவது:-

இடம்பெயர்ந்து சென்ற முஸ்லிம மக்களின் வீடுகள் காணிகள், சட்டவிரோதமாக விற்கப்பட்டு வருகின்றன. ஆகவே, இனிவரும் நாள்களில் முஸ்லிம் பகுதிகளில் காணிகளை வாங்கவோ, வீடுகளில் வாடகைக்கு அல்லது குத்தகைக்குக் குடியமரவோ விரும்புபவர்கள் மக்கள் பணிமனையுடன் தொடர்புகொள்ளவும்.

- என்றார் அவர். (ஒ-ரி)


ஆச்சரியம்தான்! ஆனால் இது முற்றிலும் உண்மையே!

நம்பமுடியாத விலைக் கழிவுடன் நவ நாகரிக புடைவை வகைகள்

ஆடிமாத சிறப்புத் தள்ளுபடி

15.07.2003 முதல்
31.07.2003 வரை

மாபெரும் மலிவு விற்பனை

★ இறக்குமதி செய்யப்பட்ட நவீன டிசைன் சாறி வகைகள்
★ பிளவுஸ் தினுசுகள் ★ சல்வார் கமிஸ் ★ புறொக் (Frock)
★ நங்கையர் விரும்பும் ஸ்கேட் அன் பிளவுஸ் ★ நவநாகரீக நவீன ஆடை வகைகள்
★ ஆடவர்களுக்கான சேட், ரீ சேட், ஜீன்ஸ், சேட்டிங் சூட்டிங் வகைகள்
★ சிறுவர், சிறுமியர்களுக்கான விசேட தயாரிப்புக்கள்

நவீன ஆடைத்தெரிவுக்கு நீங்கள் நாடவேண்டிய இடம்:

மெக்ஸ் புடைவை மாளிகை இல. 34 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

ஏமாற்றத்தைத் தவிர்க்க இன்றே விஜயஞ்செய்யுங்கள்

(20358) (22-14-16)


# யாழ்ப்பாண மாநகரசபை அறிவித்தல்

கீழ்க்காணும் இறைச்சிக்கடைகளுக்கு மீள் கேள்விகள் கோரப்பட்டுள்ளன.

01. குருநகர் மாட்டிறைச்சிக்கடை இல. 2,5.
02. நரிக்குன்று மாட்டிறைச்சிக்கடை இல. 1.
03. நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை இல. 2.

மேலதிக விவரங்களை அலுவலகத்தில் அறிந்துகொள்ளலாம்.

*மாநகரசபை,*
*யாழ்ப்பாணம்.*
*2003.07.16*

இ.இராமலிங்கம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

(சி-29000)(30-14-16)

# சீட்டிழுப்பு பிற்போடப்பட்டுள்ளது

மல்வம், உடுவில் ஸ்ரீ ராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலய கட்டட வளர்ச்சி நிதிக்காக ஆடிப்பிறப்பாகிய இன்று (17.07.2003) வியாழக்கிழமை நடத்தப்படவிருந்த சீட்டிழுப்பு பிற்போடப்பட்டு எதிர்வரும் தீபாவளித் தினத்தன்று ஆலய மண்டபத்தில் அதிர்ஷ்டம் பார்க்கப்படும் என அறியத்தருகின்றோம்.

*மல்வம்,*
*உடுவில்.*

(20370) (30-14-16)

அம்பாள் ஆலய
இந்து மகாசபை.



# நாதஸ்வர கலாநிதி, கலாசூரி நா.க.பத்மநாதனுக்கு அஞ்சலி

இன்னிசையால் உலகெலாம் அளந்தான்
ஈழம்வாழ் கலைஞருக்கெல்லாம்
மன்னவன் நம்மை வையகம் வணங்க
மதித்திடவைத்தவன் அலைக்கன்
முன்னவன் நல்லூர் முருகனை
வாழ்நாள் முழுவதும்
உபாசனை புரிந்த என்னவன் நா.க. பத்மநாதனையோ
இழந்தனம்! யாவுமே இழந்தோம்!

*சட்டநாதர் வீதி,*
*நல்லூர்.*

(20374)(30-14-16)

இளங்கலைஞர் மன்றம்.

# நாதனே! உங்கள் நாதம் ஓய்ந்ததேன்?



*ஈழத்தின் இசைச் செம்மலே!*
*அளவையம்பதி ஈன்ற அகல்விளக்கே!*
*உங்கள் குழலோசையும்*
*கந்தன் மணியோசையும்*
*கேட்டெல்லோ கண் அயர்வோம் நாம்!*
*இனி............... ?*

அன்னாரின் ஆத்மாசாந்தியடையப் பிரார்த்திப்பதோடு, பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்கள்.

நாதஸ்வர தவில்
வித்துவான்கள் நல்லை ரவி.ரஜி
சகோதரர்கள்.

(20367) (30-14-16)

# ஆழ்ந்த அனுதாபங்கள்

மறைந்த நாதசுர மேதை

## கலாசூரி என்.கே.பத்மநாதன் அவர்கள்

எமது குழுவின் இறைபணிக்கு வழங்கிய சேவைகளை நன்றியுடன் நினைவுகூர்ந்து பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது அனுதாப அலைகளை வெளிப்படுத்துகின்றோம்.

சைவசமய விவகாரக்குழு,
யாழ்ப்பாண மாநகராட்சி
மன்றம்.

(29001) (30-14-16)

# நாதசுரகான கலாநிதியை இழந்து கண்ணீர் வடிக்கின்றோம்

இசையின் மண்ணில்
19 - 09 - 1931



இசையின் விண்ணில்
15 - 07 - 2003

நாதஸ்வர கலாநிதி கலாசூரி

## N.K. பத்மநாதன் (J.P.) அவர்கள்

15-07-2003 அன்று காலமாகிவிட்டார். அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரின் ஆத்மசாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

*சிறிமாதவன்,*
*No.97,கஸ்தூரியார் வீதி,*
*யாழ்ப்பாணம்.*
*021-2226365*

*வெங்கடேஸ்வரா,*
*No.79,கஸ்தூரியார் வீதி,*
*யாழ்ப்பாணம்.*
*021-2222905*

(30-14-16)(சி-29006)

## அமரர் நாதஸ்வரகான கலாநிதி என்.கே.பத்மநாதன் அவர்களுக்கு இதய அஞ்சலி

நல்லை வீதியில் இசைமாரி பொழிந்த நாதஸ்வர வித்துவான் பத்மநாதனின் மறைவினால் துயருறும் குடும்பத்தினருக்கும், ரசிகர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்ம சாந்திக்காக நல்லூரானைப் பிரார்த்திக்கின்றோம்.

திருமதி றோஸ் நவநீதம் ஜெகதீசன்
(தலைவர், யாழ்.சமூக அபிவிருத்தி மன்றம்)
S.S.நாகலிங்கம் குடும்பம் (நல்லூர்).

(20360) (32-14-16-31)

## கோப்பாய்க் கோட்ட அதிபர்களுக்கு!

கோப்பாய்,ஜுலை17

கோப்பாய்க் கோட்டப் பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெறுமென கோப்பாய்க் கோட்டக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஓ-72)

## இசையலை ஓய்ந்ததுவோ!



ஈழத்திருநாட்டில் தனக்கென தனி நடையைக் கையாண்டு பல கலைஞர்களை உருவாக்கி அமரரான கலாசூரி என்.கே.பத்மநாதனுக்கு எமது கண்ணீர் அஞ்சலிகள். அவரது குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்கள்.

நல்லூர்.

'நாதகீர்த்தனம்' நாதசுரவித்துவான்
வீ.குமாரசாமி (ராஜா).

(சி-28996) (32-14-16-31)

## நல்லதோர் குருநாதர்



எனக்கு நல்லதோர் ஆசானாகவும் வழிகாட்டியாகவும் விளங்கி நாதஸ்வரத்தில் என்னை மேன்மை பெற வைத்த என் குருநாதர் நாதஸ்வர மேதை கலா சூரி என்.கே.பத்மநாதன் அவர்களின் மறைவை யொட்டி என் நெஞ்சம் நெகிழ்ந்த கண்ணீர்ப் பூக்களை அவரது பாதக்கமலங்களில் சமர்ப்பிக்கின்றேன். பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்கள்.

அன்னாரின் பிரதம சிஷ்யன் அளவெட்டி
நாதஸ்வர வித்வான்
இ.கேதீஸ்வரன்.

(20366) (32-14-16-31)

## கண்ணீர் அஞ்சலி



எமது வேலணை வடகிழக்கு விவசாய சம்மேளனத் தலைவரும், வேலணை கமநல சேவை நிலையக் குழுத் தலைவருமான

### ஆறுமுகம் தம்பு

அவர்கள் 14.07.2003 திங்கட்கிழமை இயற்கை எய்தியதை இட்டு துயருற்றிருக்கும் குடும்பத்தாரின் துன்ப துயரங்களில் நாமும் பங்கேற்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனை இறைஞ்சுகின்றோம்.

உதவி ஆணையாளரும் உத்தியோகத்தர்களும்,
கமநல அபிவிருத்தி திணைக்களம், யாழ்ப்பாணம்.
பெரும்பாக உத்தியோகத்தரும், ஊழியர்களும்,
கமநல சேவைக்குழு உறுப்பினர்களும்,
கமநல சேவை நிலையம், வேலணை.

(20365) (31-14-16)

## யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்
## பட்டப்பின் படிப்புகள் பீடம்

**பட்டப்பின் கல்வித்தகைமை (யாழ்ப்பாணம், வவுனியா வளாகம்)**

**பகுதி நேரம் I, பகுதி நேரம் II, முழுநேரம் - இரண்டாம் பருவத்தேர்வு**

மேற்படி தேர்வுகள் 2003.08.18 அன்று யாழ். பல்கலைக்கழகத்திலும் (பகுதி நேரம் I, பகுதிநேரம் II, முழுநேரம்) வவுனியா வளாகத்திலும் (பகுதி நேரம் I) நடைபெறவுள்ளன.

மேற்படி தேர்வுக்கு விண்ணப்பிப்பதற்குத் தகுதிவாய்ந்த விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பப்படிவங்களைப் பீடாதிபதி அலுவலகம், பட்டப்பின் படிப்புகள் பீடத்திலும் வவுனியா வளாகத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பதாரிகள் பாட அலகு ஒவ்வொன்றிற்கும் ரூபா 100/- வீதமும் பகுதிநேரம் II, முழுநேர விண்ணப்பதாரிகள், ஆய்வுக்கட்டுரைக்கான கட்டணமாக 500/- ரூபாவும் கற்பித்தல் பயிற்சிக் கட்டணமாக 500/- ரூபாவும் யாழ். பல்கலைக்கழக மக்கள் வங்கிக்கிளை அல்லது யாழ். பல்கலைக்கழக நிதிக்கிளையில் பணம் செலுத்திப் பெறப்பட்ட பற்றுச் சீட்டுடன் விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பிக்கவேண்டும்.

பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் 2003.08.05 அன்று அல்லது அதற்கு முன்பாகப் *பீடாதிபதி அலுவலகம், பட்டப்பின் படிப்புகள் பீடத்தில்* சமர்ப்பிக்கப்படல்வேண்டும்.

**பதிவாளர்.**
*யாழ். பல்கலைக்கழகம்*
*16. 07. 2003.*

(சி-28997) (25-14-16-31)

## வெளிக்கள ஆய்வாளர் பதவி வெற்றிடம்

கொழும்பை மையமாகக் கொண்டு இயங்கும் ஆய்வு நிறுவனம் ஒன்றின் யாழ். மாவட்டக் கிளைக்கான பகுதி நேர வெளிக்கள ஆய்வாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

### விண்ணப்பதாரி

- ★ *குறைந்தது க.பொ.த. உயர்தரம் சித்தியடைந்தவராகவும்*
- ★ *யாழ். மாவட்டத்தில் எல்லாப் பகுதிக்கும் பிரயாணஞ்செய்யக்கூடியவராகவும்*
- ★ *வெளிக்கள உத்தியோகத்தர்களைக் கையாளும் திறமையுள்ளவராகவும்*
- ★ *யாழ்ப்பாணத்தை வதிவிடமாகக் கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்.*

ஆங்கிலம் அல்லது சிங்களம் தெரிந்திருத்தல் மேலதிக தகைமையாகக் கொள்ளப்படுவதுடன், பாடசாலை ஆசிரியர்களின் விண்ணப்பங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

விண்ணப்பப் படிவங்கள் 10 நாள்களுக்குள் கீழ் குறிப்பிட்டு முகவரிக்குக் கிடைக்குமாறு அனுப்பிவைக்கவும்.

**Field Manager**
No 6, Moor Road,
Colombo-6.

(C/28990) (31-14-16)

## கமநல சேவைத் திணைக்களத்தின் மூலமாக இலகு கடன் அடிப்படைத் திட்டத்தின் கீழ் கிராமிய பொருளாதார அமைச்சின் அனுசரணையுடன் இந்திய தயாரிப்பு நான்கு சில்லு உழவு இயந்திரம் சலுகை விலையில் விற்பனை

| சலுகை விலையில் தெரிவுசெய்யும் 4 சில்லு உழவு இயந்திர வகை | அமைப்பும் வலுவும் | விற்பனை விலை ரூபா | சலுகை விலை ரூபா |
|---|---|---|---|
| ரேவ் TAFE | 45 DI HP 47 3 சிலிண்டர் | 795500/- | 485000/- |
| மகேந்திரா MAHINDRA | 575 DI HP 45 4 சிலிண்டர் | 750000/- | 620000/- |
| ஜோன்டிறி JOHN DEERE | L&T JD 5203 HP 47 4 சிலிண்டர் | 830000/- | 650000/- |

நீங்கள் தெரிவுசெய்யும் உழவு இயந்திரத்தைக் கொள்வனவு செய்ய விரும்புவோர் சலுகை விலைத்தொகையை 48 மாதங்களில் கீழ்க்காட்டப்பட்ட தவணை அடிப்படையில் வட்டியின்றி தவணைப்பணத்தைச் செலுத்தி உங்கள் சொத்தாக்கிக்கொள்ளலாம்.

| தெரிவுசெய்யும் இயந்திர வகை | சலுகை விலையை மாதாந்த அடிப்படையில் செலுத்துதல் ரூபா |
|---|---|
| ரேவ் TAFE | 12530 /- |
| மகேந்திரா MAHINDRA | 16015 /- |
| ஜோன்டிறி JOHN DEERE | 16625 /- |

விவரங்களுக்கும் வேண்டிய தகவல்களுக்கும் யாழ். மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களத்தை 20.07.2003இற்கு முன் நாடுங்கள். இதற்கான விண்ணப்ப முடிவு திகதி 21.07.2003 என்பதனைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**க.சுந்தரேசன்,**
**உதவி ஆணையாளர்,**
**கமநல அபிவிருத்தித் திணைக்களம், யாழ். மாவட்டம்.**

(சி-28998) (31-14-16)

## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

| | |
|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 491 |
| திகதி | 15.07.2003 |

டிக்கட்டின் நிறம் - நீலம்
செல்லுபடியாகும் தொடர் இல.
**4054891-4069045**

வெற்றி இலக்கங்கள் **13 14 28 45**

லக்கினம் கன்னி




ஜக்பொட் பரிசு
ரூபா. 1,000,000/-
வெல்லப்படவில்லை

**இந்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட் ரூபா 1,702,700/-**

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரு.) | மொத்தப் பரிசுத் தொகை(ரு.) |
|---|---|---|---|
| 1 இல | 314,558 | 10 | 3,145,580 |
| 2 இலக்கங்கள் | 28,901 | 20 | 578,020 |
| 1 இல + லக்கினம் | 28,723 | 30 | 861,690 |
| 2 இல + லக்கினம் | 2,636 | 100 | 263,600 |
| 3 இலக்கங்கள் | 748 | 500 | 374,000 |
| 3 இல + லக்கினம் | 87 | 5,000 | 435,000 |
| 4 இலக்கங்கள் | 04 | 100,000 | 400,000 |
| 4 இல + லக்கினம் | - | 1,000,000 | - |
| மொத்தம் | 375,657 | - | 6,057,890 |

மொத்தப் பரிசுத் தொகை ரூபா. 6,057,890/-

தொடர் இல. 5054397க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கட்டுகள் 2003 ஜுலை 18ம் திகதி வெள்ளிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

[illegible]
4062530-1-36
4055926-9-28
4062075-7-41
4065121-1-80
4060944-6-11

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கல் வீதி,
கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

யாழ்ப்பாணத்தில் : விநியோகஸ்தர்,
34, கந்தப்பசேகரம் வீதி,
(பஸ் நிலையம் முன்பாக), யாழ்ப்பாணம்.

PHOENIX O&M




யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஜிம்னாஸ்ரிக் அணியினர் நேற்று கைலாசபதி கலையரங்கில் நடத்திய ஜிம்னாஸ்ரிக் காட்சி நிகழ்வின்போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

# ஐ.சி.சி.தரவரிசையில் இலங்கை வீழ்ச்சி! ஆஸ்திரேலியா தொடர்ந்தும் முன்னணியில்!

சர்வதேச கிரிக்கெட் கவுன்ஸிலின் (ஐ.சி.சி.) ஒருநாள் போட்டிகளுக்கான அணிகளின் புதிய தரப்படுத்தலில் இலங்கை அணி, கடந்த ஒரு வருட காலத்தில் 4ஆம் இடத்திலிருந்து 6ஆவது இடத்திற்குப் பின்தள்ளப்பட்டுள்ளது.

கடந்த வருடம் இத்தரப்படுத்தல் பட்டியல் அறிமுகப்படுத்தப்பட்டது. 3 வருட காலத்தில் நடைபெற்ற ஒரு நாள் போட்டிகளின் அடிப்படையில் அணிகள் தரப்படுத்தப்படுகின்றன.

ஒவ்வொரு வருடமும் ஜூலை மாத முடிவில், இரு வருடங்களுக்கு முந்தைய போட்டிகளின் பெறுபேறுகள் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டு புதிய பட்டியல் வெளியிடப்படும்.

இதன்படி, 2000 ஆம் ஆண்டு ஓகஸ்டிலிருந்து 2001 ஆம் ஆண்டு ஜூலை மாதம் வரையான காலப் பகுதியில் நடைபெற்ற போட்டிகளின் பெறுபேறுகள் நீக்கப்பட்டு புதியபட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் பட்டியல் அறிமுகப்படுத்தப்பட்டபோது, மூன்றாவது இடத்திலிருந்த இலங்கை, தற்போது 6 ஆவது இடத்திற்குத் தள்ளப்பட்டுள்ளது.

ஆஸ்திரேலியா, தென்னாபிரிக்கா ஆகியன தொடர்ந்தும் முதலிரு இடங்களையும் வகிக்கின்றன. எனினும், ஆஸ்திரேலியாவின் சராசரிப் புள்ளிகள் 2 இனால் அதிகரித்துள்ளன. தென்னாபிரிக்காவின் சராசரி 2 இனால் குறைவடைந்துள்ளன.

புதிய பட்டியலில் வேகமாக முன்னேறிய அணிகளாக இங்கிலாந்து, மேற்கிந்தியத்தீவுகள், நியூஸிலாந்து ஆகியன உள்ளன.

இங்கிலாந்து அணி 2000 ஓகஸ்டிலிருந்து 2001 ஜூலை வரை 14 போட்டிகளில் பங்குபற்றி 2 போட்டிகளில் மாத்திரமே வெற்றி பெற்றிருந்தது. இந்த 'கசப்பான காலம்' புறக்கணிக்கப்படுவதனாலும் அந்த அணியின் அண்மைக்கால வெற்றிகளினாலும் 7ஆவது இடத்திலிருந்து 3ஆவது இடத்திற்கு முன்னேறியுள்ளது.

மேற்படி ஒருவருட காலத்தில், மேற்கிந்திய அணி 23 போட்டிகளில் பங்குபற்றி 8 போட்டிகளில் மாத்திரமே வெற்றியீட்டியிருந்தது. தற்போது அவ்வணி 6ஆவது இடத்திலிருந்து 4ஆவது இடத்திற்கு முன்னேறியுள்ளது.

நியூஸிலாந்து அணி 35 போட்டிகளில் 14 வெற்றிகளை மட்டுமே பெற்றிருந்த வருடத்திலிருந்து விடுதலையாகியுள்ளது.

இதேவேளை, பாகிஸ்தான் அணி 3ஆவது இடத்திலிருந்து 7ஆவது இடத்திற்கு தள்ளப்பட்டுள்ளது. இந்தியாவின் சராசரிப் புள்ளிகளில் மாற்றம் ஏற்படவில்லை. எனினும், அந்த அணி 5ஆவது இடத்திலிருந்து 8 ஆவது இடத்திற்குத் தள்ளப்பட்டுள்ளது.

புதிய பட்டியல் ஜூலை 31ஆம் திகதியே தயாரிக்கப்படவேண்டும். எனினும், இங்கிலாந்தில் நடைபெற்ற நட்வெஸ்ட் கிண்ண இறுதிப் போட்டியின்பின் இம்மாதம் வேறு ஒருநாள் சர்வதேச போட்டிகள் நடைபெறுவதற்கில்லை. அதனால், புதிய தரவரிசை விவரம் உரிய காலத்திற்கு கணிக்கப்பட்டுள்ளது. (ஒ-5)

# உலகக் கிண்ண வலைப்பந்தாட்டம் இலங்கை அணிக்கு 3ஆவது தோல்வி

ஜமைக்காவில் நடைபெறும் உலகக் கிண்ண வலைப்பந்தாட்டத் தொடரில் செவ்வாயன்று இலங்கை அணி சென்.வின்சென்ட் அணியிடம் தோல்வியுற்றது.

திங்களன்று வேல்ஸ் அணியிடமும் இலங்கை தோல்வியுற்றமை குறிப்பிடத்தக்கது.

இதுவரை இலங்கை அணி இத் தொடரில் 6 போட்டிகளில் பங்குபற்றி 3 வெற்றிகளையும் 3 தோல்விகளையும் பெற்றுள்ளது.

செவ்வாயன்று நடைபெற்ற போட்டியில் இங்கிலாந்து அணியை நியூஸிலாந்து அணி 60:41 என்ற விகிதத்தில் வென்றது.

இத்தொடரில் இங்கிலாந்து அணி தழுவிய முதலாவது தோல்வி இதுவாகும்.

இதேவேளை -

முந்தைய போட்டிகளை விட இப் போட்டியில் குறைந்த எண்ணிக்கையான கோல்களையே நியூஸிலாந்து பெற்றமையும் குறிப்பிடத்தக்கது.(ஒ-5)

# விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஜூலை17

இலங்கைக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் அனுசரணையுடன் வடமத்திய மாகாண கிரிக்கெட் சங்கம் நடத்தும் 19வயதுக்குட்பட்டவர்களுக்கான கிரிக்கெட் சுற்றுப்போட்டிகள் எதிர்வரும் 21ஆம் திகதி முதல் "ரங்கிரி தம்புள்ள" சர்வதேச விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளன.

அநுராதபுரம், பொலன்னறுவை, மாத்தளை, குருநாகல், திருகோணமலை, மட்டக்களப்பு, வவுனியா, மன்னார் மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய 9 மாவட்டங்களின் அணிகள் இப்போட்டியில் பங்குபற்றவுள்ளன. (ஒ-5)

★ ★ ★

வலி.வடக்கு,ஜூலை17

உள்ளூராட்சி வாரத்தையொட்டி வலி.மேற்குப் பிரதேச சபையும் சன சமூக நிலையங்களின் சமாசமும் இணைந்து நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் அரையிறுதி ஆட்டங்கள் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு வட்டுக்கோட்டையிலுள்ள பிரதேச சபை மைதானத்தில் இடம்பெறவுள்ளன. (ஒ-86)

யாழ்ப்பாணம்,ஜூலை17

இலங்கை வங்கி மற்றும் வர்த்தக வங்கி ஆகியவற்றின் அனுசரணையுடன் யாழ்.மாவட்ட தாச்சிச் சங்கம் நடத்தும் தாச்சிச் சுற்றுப்போட்டியில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு கட்டுடை விநாயகர் மைதானத்தில் நடைபெறும் ஆட்டத்தில் அரியாலை காந்தி வி.கழகமும், உடுவில் சிந்து விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன. (ஒ-5-86)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜூலை17

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு இருபாலை கிழக்கு பாரதி கலாமன்றம் நடத்தும் பாரதி முன்பள்ளி மாணவர்களுக்கிடையேயான விளையாட்டுப் போட்டி நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு நிலையத் தலைவர் க.சேனாதிராசா தலைமையில் நிலைய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரீ.வி. கிருஷ்ணசாமி பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (ஒ-5)

## விளையாட்டு


# பணிநிலை வேண்டுகை

ஆயப்பகுதியில் கீழ்க் குறிப்பிடப்படும் பணிநிலைக்கு வேண்டுகைகள் கோரப்படுகின்றன. தகைமையுடையவர்கள் பிறப்புச்சான்றிதழ், கல்விச்சான்றிதழ்கள், பிற தகைமைச் சான்றிதழ்கள் என்பவற்றுடன் 2003-07-25ஆம் நாள் நேரில் வருகைதரவும்.

பணிநிலை : எழுதுநர்

கல்வித் தகைமை : க.பொ.த. (உ/த) வணிகப் பிரிவில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

நடுவப்பணியகம்,
ஆயப்பகுதி,
கிளிநொச்சி.

(C/29002) (22-24-16)

## பிரார்த்திக்கின்றோம்

நாதஸ்வர சக்கரவர்த்தி, கலாசூரி
அமரர் **என்.கே. பத்மநாதன் அவர்களுக்கு**
எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குவதுடன், அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**ஆறுமுகம் சிற்பாலயம், திருநெல்வேலி.** **கலாபூஷணம் ஆ. ஜீவரட்ணம் ஆச்சாரியார், குடும்பத்தினர்.**

(20377) (31-14-16)

## இதய அஞ்சலி



எமது சக ஆசிரியை **கனகாம்பரி** அவர்களின் அருமைத் தந்தையார் நாதஸ்வர மேதை, கலாசூரி **என்.கே. பத்மநாதன்** அவர்களின் மறைவு கலையுலகுக்குத் தாங்கமுடியாத பேரிழப்பாகும்.

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்பனவற்றுக்கு முன்மாதிரியாக விளங்கிய, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**- இசையாசிரியர் கழகம், யாழ். வலயம்.**

(20384) (31-14-16)

## கண்ணீர் அஞ்சலி



நாதஸ்வர கலாநிதி
**கலாசூரி**
**என்.கே. பத்மநாதன்**
அவர்களின் மறைவு இசை உலகுக்கு பேரிழப்பாகும். அவருக்கு கண்ணீர் காணிக்கைகளைச் செலுத்துவது டன், குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

**பரிபாலன சபை, திருநெல்வேலி அரசடி ஸ்ரீசிவகாமசுந்தரி அம்பாள் ஆலயம்.**

(சி-29007) (31-14-16)

## இதய அஞ்சலி



நாதஸ்வர சக்கரவர்த்தி
**கலாசூரி**
**என்.கே. பத்மநாதன்**
அவர்களின் மறைவு ஈடுசெய்ய முடியாத ஒரு பேரிழப்பாகும். அன்னாருக்கு எமது கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குவதுடன், துயரில் தவிக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆறுதலைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**- நிர்வாக சபையினர், தலையாழி ஞானவைரவர் ஆலயம்.**

(20382) (31-14-16)

## நாதஸ்வர மாமலை சரிந்தது இசை உலகில் இருள் சூழ்ந்தது



கல்லில் எழுந்தது கலை அருவி - உயர்
கம்பன் பொழிந்தது தமிழ் அருவி
வானம் கொடுப்பது மழையருவி - முழு
மதியில் மிளிர்வது ஒளியருவி
பத்மநாதன் பொழிந்தது இசையருவி - இது
நல்லூரானுக்கும் இதமாய் இனித்ததே!
புகாரோடும் வானத்தில் புகழ்பூத்த முழுநிலவே
திராடும் ஆழ் கடலில் ஒளி தந்த உயர் முத்தே
நீ வே ரோடும் சாய்ந்ததேன்ன?
எமை எல்லாம் வெதும்ப விட்டுச் சென்றதென்ன?
அன்னாரின் ஆத்மசாந்திக்குப் பிரார்த்திக்கும்:

**P.நேசதுரை குடும்பத்தினர், P.நேசலிங்கம் குடும்பத்தினர்கள்.**

சங்கானை.

(20383) (31-14-16)

## இதய அஞ்சலி



நாதஸ்வர சக்கரவர்த்தி - அளவையூர்
**கலாசூரி கலாபூஷணம்**
**என்.கே. பத்மநாதன் J.P.**
அவர்களின் திடீர் மறைவு இசையுலகுக்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.
அவரை இழந்து தவிக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.
அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல லோக மாதாவான அம்பிகையைப் பிரார்த்தித்து திருவடி பணிகின்றோம்.

**- கிரியா கலாப முக்தாமணி சிவஸ்ரீ ச.மகேஸ்வரக் குருக்கள், -சர்வதேச இந்துமத குருபீடாதிபதி.**

சுதுமலை, மானிப்பாய்.
(29005) (31-14-16)

## நெஞ்சம் நெகிழ்ந்த அஞ்சலிகள்



ஈழத்தமிழர் வரலாற்றிலே, இசைத்துறையிலே வரலாற்று முத்திரைதனைப் பதித்து நாதஸ்வரக் கலையினாலே அகில உலகத்திலேயே தமிழர் தம் புகழ் ஒலிக்கச் செய்த நாதஸ்வர மேதை
**கலாசூரி அளவையூர்**
**என்.கே. பத்மநாதன்**
அவர்கள் மறைந்த செய்திகேட்டு பேரதிர்ச்சியும் ஆழ்ந்த கவலையும் அடைகிறேன். அவருக்கு எனது நெஞ்சம் நெகிழ்ந்த அஞ்சலிகள்.
அவர் தம் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தவர்க்கும் மற்றும் அனைவருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரது ஆத்மா இறைவன் திருப்பாதங்களை அடைந்து பேரின்பப் பெருவாழ்வு வாழ என்சார்பிலும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சி சார்பிலும் பிரார்த்திக்கிறேன்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மாத்தனை ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு.
**அப்பாத்துரை விநாயகமூர்த்தி. (நாடாளுமன்ற உறுப்பினர் தலைவர், அ.இ.தமிழ்க்காங்கிரஸ்).**

(20379) (31-14-16)

### கோப்பாயில் சந்திப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை17

கோப்பாய் பிரதேசத்துக்குட்பட்ட தனியார் கல்விநிறுவனங்களின் நிர்வாகிகளுக்கான சந்திப்பு, நாளை வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு கோப்பாய் அரசியல் துறை அலுவலகத்தில் இடம்பெறும் என்று அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர். (எ)

NORTH LANKA
Institute of information Technology
(NLIIT)
சலுகைக் கட்டணத்தில் புதிய கணனிக் கற்கை நெறிகள் ஆரம்பம்.
IIS உடன் இணைந்து Irish international university இன் அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.
NLIIT
*பிரதான வீதி, சங்கானை.
*பிரதான வீதி, மானிப்பாய்.
*பிரதான வீதி, பண்டத்தரிப்பு.
(20386) (31-14-16)

## இதய அஞ்சலி



அளவையூர் தந்த தவப்புதல்வன்
**கலாசூரி**
**என்.கே. பத்மநாதனின்**
மறைவு இசை உலகுக்கு பேரிழப்பாகும். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன், அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**விஸ்வப்பிரம்மஸ்ரீ செ.பாலச்சந்திரன் ஆச்சாரியார்.**

காளிகா சிற்பாலயம், திருநெல்வேலி.
(சி-29001) (31-14-16)

லஷ்சுமி சினிமா
இணுவில்
அஜித், ஜோதிகா, சிம்ரன் நடித்த
வாலி (நீலம்)
காட்சி நேரம்: 11.00,3.00,7.00 (பி.நே.)
(C28976) (31-14-16)

நிறைஞ்சனாஸ்
சரத்குமார், மீனா, ரம்யாகிருஷ்ணன் நடித்த
பாறை (நீலம்)
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பி.நே.)
THE LORD OF THE RINGS
தினசரி 8.45 இரவு.
(C28977) (31-14-16)

லிபேட்டி அச்சுவேலி



சத்தியராஜ், ரம்பா, செந்தில், மணிவண்ணன் நடித்த
மிலிட்டரி (நீலம்)
தினசரி காட்சி நேரம் 3.00, 7.00 (பி.நே.)
THE MUMMY
(ஆங்கிலப்படம்)
தினசரி காலை 11.00 மணிக்கு
(C/28688) (31-12-18)

நாகம்ஸ் சுன்னாகம்
விக்ரம், பிரியங்கா, பிரகாஷ்ராஜ் நடித்த
காதல் சடுகுடு (நீலம்)
தினசரி காட்சிகள் : 11.00, 3.00 (பி.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு விசேட காட்சி 7.00 (பி.நே.)
(C28767) (31-14-16)

ராஜா யாழ்ப்பாணம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தினவெளியீடு
மாதவன், ஜோதிகா நடிக்க
பிரியமான தோழி (நீலம்)
தினசரி: 10.30, 2.30, 6.30, 9.30.
(31-13-18)

## கண்ணீர் அஞ்சலி

பெருமதிப்புக்கும் அன்புக்கும் பாத்திரமாக விளங்கிய நாதசுர மேதை கலாசூரி **என்.கே. பத்மநாதன் அவர்களின்** திடீர் மறைவு குறித்து துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

அவரது பிரிவால் துயருறும் அன்னாரது குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்குகொண்டு அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**வே.பொ. பாலசிங்கம் குடும்பத்தினர் (முன்னாள் மாநகர ஆணையாளர்) யாழ்ப்பாணம்.**

உவர்மலை, திருகோணமலை. (20369) (31-14-16)

## கண்ணீர் அஞ்சலி



அளவையூரில் அன்னை முத்துமாரியம்மன் ஆலய சுற்றாடலில் பிறந்து வளர்ந்த தவப்புதல்வன்
கலாசூரி **என்.கே. பத்மநாதனின்**
மறைவு இசை உலகுக்கு பேரிழப்பாகும். எமது கண்ணீர்க் காணிக்கைகளைத் தெரிவிப்பதுடன், குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

**பரிபாலன சபையினர், தவளக்கிரி முத்துமாரியம்மன் கோவில், அளவெட்டி வடக்கு.**

(20385) (31-14-16)

## கண்ணீர் அஞ்சலி



**கலாசூரி N.K. பத்மநாதன் (J.P.)**
ஈழமண் ஈன்றெடுத்த எங்கள் இசை அரசே! இனி எங்கு சென்று கேட்போம் உங்கள் நாத கானத்தை?
என் நாத தெய்வமே! உங்கள் ஆத்மா சாந்தியடைய வழக்கம்பரை முத்துமாரி அம்மனைப் பிரார்த்திக்கின்றோம்.

**P. இராமமூர்த்தி இ.சிவகுமார் (குடும்பத்தினர்).**

வழக்கம்பரை.
(20381) (31-14-16)

## கண்ணீர் அஞ்சலி



ஓய்வுபெற்ற அரச பண்ணை முகாமையாளரும், வேலணை கமநல சேவை குழுத்தலைவரும், வேலணை வடகிழக்கு விவசாய சம்மேளனத் தலைவருமாகிய
**ஆறுமுகம் தம்பு அவர்கள்**
14.07.2003 திங்கட்கிழமை காலமாகிவிட்டார். அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மசாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

**வேலணை தெற்கு, விவசாய சம்மேளனம்.**

(20378) (31-14-16)

## மரண அறிவித்தல்கள்

### கந்தையா சுப்பிரமணியம்

மீசாலை மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சுப்பிரமணியம் அவர்கள் 15.07.2003 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் தில்லையம்மாவின் அன்புக் கணவரும் நடராசா, சுந்தரம்பிள்ளை, இராசம்மா, காலஞ்சென்ற காசிப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரனும் பராசக்தி, பரராசசிங்கம், சகுந்தலாதேவி, இராசேஸ்வரி, பாலேந்திரம் (சுவிஸ்), இராசரத்தினம் (பிரான்ஸ்), ஏரம்பமூர்த்தி (கண்ணன் - கணேசா ஹாட்வெயர், சாவகச்சேரி) ஆகியோரின் அன்புத் தந்தையும் தங்கராசா, கலாநிதி, குணநேசராசா, யோகராசரமணி, ஜெயவாணி, சறோஜினி ஆகியோரின் அன்பு மாமனாரும் தர்சனா (யாழ். பல்கலைக்கழகம், 3ஆம் ஆண்டு கலைப்பிரிவு), பர்சனா (யாழ். பல்கலைக்கழகம், முதலாம் ஆண்டு கலைப்பிரிவு), பரமினா, சங்கீதா, சங்கவி, இளங்கோ, இளங்கீதன், துளசிகா, பிரதாப் (சுவிஸ்), பிரதீப் (சுவிஸ்), துவாரகி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.07.2003) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பிற்பகல் 2.30 மணியளவில் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சு.ஏரம்பமூர்த்தி (கண்ணன் - மகன்) கணேசா ஹாட்வெயர், சாவகச்சேரி.

*மீசாலை மேற்கு, மீசாலை.* (20380) (31-14-16)

### திருமதி கணபதிப்பிள்ளை மீனாம்பிகை (நாரந்தனை வடக்கு)

நாரந்தனை வடக்கு, ஊர்காவற்றுறையைச் சேர்ந்த திருமதி கணபதிப்பிள்ளை மீனாம்பிகை 15.07.2003 செவ்வாய்க்கிழமை சுவிஸில் காலமாகிவிட்டார்.

அன்னார் அ.கணபதிப்பிள்ளையின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கந்தையா - சிவபாக்கியம் தம்பதிகளின் மூத்தமகளும் காலஞ்சென்ற அம்பலவாணர் மற்றும் பொன்னம்மா தம்பதிகளின் மருமகளும் காலஞ்சென்ற சதிரேசு மற்றும் குமரேஸ், மனோன்மணி, தேவராஜா, தியாகராஜா காலஞ்சென்ற கருணாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் மரணச்சடங்குகள் சுவிஸில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி கதிரேசு - சாரதாதேவி.

*நாரந்தனை வடக்கு, ஊர்காவற்றுறை.*

(20389) (31-14-16)

# பாடுமீன் கலைக்கல்லூரி பன்குடாவெளியில் திறப்பு

மட்டக்களப்பு,ஜுலை17

விடுதலைப் புலிகள் கலைபண்பாட்டுக் கழகத்தினால் மட்டக்களப்பு கரடியனாறு பன்குடா வெளியில் பாடுமீன் கலைக்கல்லூரி நேற்று திறந்து வைக்கப்பட்டது.

நேற்றுக்காலை 10மணியளவில் நடைபெற்ற திறப்புவிழாவில் ஈகச் சுடரினை மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி ரமேஷ் ஏற்றிவைத்தார்.

தமிழீழத் தேசியக் கொடியினை மூத்ததளபதி கேணல் கருணா அம்மான் ஏற்றிவைத்தார். மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டக் கலைப்பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் ஈஸ்வரன் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது. கேணல் கருணா, கலைக் கல்லூரியைத் திறந்துவைத்தார்.

தளபதிகளான நிலாவினி, ராபர்ட் ஆகியோர் உட்பட போராளிகள், பொதுமக்கள், மாணவர்கள், கலைஞர்கள் எனப் பெரும் எண்ணிக்கையானோர் கலந்துகொண்டனர்.

மட்டு - அம்பாறை மாவட்டங்களைச் சேர்ந்த மூத்த கலைஞர்கள் பலர் இந்த நிகழ்வில் கௌரவிக்கப்பட்டனர். (ஐ-4)

## தெற்கில் பல்கலை ஊழியர்கள் இன்று வேலை நிறுத்தம்

கொழும்பு,ஜுலை17

பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த கலவித்துறை சாராத ஊழியர்கள் சம்பள உயர்வு, சம்பள முரண்பாடுகளை நீக்குதல் ஆகியவை உட்பட பல கோரிக்கைகளை முன்வைத்து இன்று அடையாள வேலைநிறுத்தத்தில் ஈடுபடுவர். (ஐ)

# இடைக்கால...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரணில் விக்கிரமசிங்கவின் சமாதான முன்னெடுப்புகளுக்கு உலக நாடுகள் கைகொடுத்துதவ முன்வந்திருக்கின்றன எனவும் குறிப்பிட்ட அவர் மேலும் கூறியதாவது:-

இலங்கைக்கு இம்முறை ஆயிரம் கோடி டொலர்கள் உதவு தொகையாக வழங்கப்பட்டுள்ளன. நான்காண்டு திட்டமாக நாலு வருடங்களில் வழங்கப்படும் இந்த நிதி உதவிகளில் மூன்றில் ஒரு பங்கு வடக்கு - கிழக்கு மாகாண அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காகச் செலவிடப்படும்.

'இலங்கையை மீளக்கட்டி எழுப்புதல்' என்ற தலைப்பில் மேற்கொள்ளப்படும் துரித அபிவிருத்தித்திட்டம், மூன்று பகுதிகளாகப் பிரித்து நடைமுறைப்படுத்தப்படும். சமாதானம் - வளர்ச்சி - சமத்துவம் என்ற அடிப்படையில் அபிவிருத்திகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

கடந்த 20 வருட யுத்தத்தால் நேரடியாகப் பாதிக்கப்பட்டவர்கள் வடக்கு - கிழக்கு மாகாண மக்கள். யுனிசெவ் நிறுவனமும் உலக வங்கிப் பிரதிநிதிகளும் இப்பிரதேசங்களுக்கு நேரடியாகச் சென்று பார்வையிட்டு அறிக்கை சமர்ப்பித்துள்ளனர். அந்த அறிக்கையின் அடிப்படையிலேயே வடக்கு - கிழக்கு மாகாண அபிவிருத்திக்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது.

அதேவேளை, மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ள பெருந்தோட்டத்துறையுடன் ஊவா, தென்மாகாணங்களின் அபிவிருத்தியும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

ஜப்பானில் நடைபெற்ற உதவி வழங்கும் நாடுகள் மாநாட்டில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, இடைக்கால நிர்வாகசபை தொடர்பாகப் பகிரங்கமாகவே இணக்கம் தெரிவித்தார்.

- இவ்வாறு அவர் தெரிவித்தார். (ஐ)

## காரைதீவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடத்திச்சென்றுள்ளனர்.

இந்த வான் 12 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியானது என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இதுகுறித்து சம்மாந்துறை பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருக்கிறது. பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ஐ-4)

## பயணியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குச் செல்வதற்கு முகமாலை இராணுவச் சோதனைச்சாவடி ஊடாக யாழ். வரவிருந்தேன் முகமாலைச் சோதனைச் சாவடியில் இராணுவச் சோதனை அனைத்தும் முடிந்த பின்னர் நானும் எனது நண்பரும் யாழ். செல்வதற்காக பஸ்ஸில் ஏறி அமர்ந்தோம். அப்போது அங்கு வந்த இராணுவச் சிப்பாய் ஒருவர் என்னை பஸ்ஸில் இருந்து இறக்கி விட்டு பஸ்ஸை செல்லுமாறு பணித்தார். பின்னர் அவர் என்னை அறை ஒன்றிற்குள் அழைத்துச்சென்று விசாரணை செய்து விட்டு மறுபக்கம் பார்க்குமாறு பணித்தார். நான் மறுபக்கம் பார்க்கவே அவர் எனது பிரயாணப்பையைச் சோதனை செய்யும் பாவனையில் அதற்குள் இருந்த 6 ஆயிரம் ரூபா ரொக்கப்பணத்தையும், கிராம அலுவலரினால் உறுதிப்படுத்தப்பட்ட அடையாள அட்டையையும் திருடிவிட்டார் நான் வெளியே வந்து பார்த்த போது எனது பிரயாணப்பையில் இருந்த மேற்படி பொருள்கள் திருடப்பட்டிருந்தன. நான் இதுபற்றி அங்குள்ள இராணுவத்தினரிடம் கேட்ட போது அவர்கள் என்னை மிரட்டினார்கள். இவ்வாறு அந்த இளைஞர் தெரிவித்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக மனித உரிமை ஆணைக்குழு விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளது.(ஐ-8-5)

## புளொட்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதனையடுத்து, பெருமளவிலான இராணுவத்தினரும் பொலீஸாரும் அப்பகுதியைச் சுற்றிவளைத்துத் தேடுதல் நடத்தினர்.

இதேவேளை - மேற்படி புளொட் அலுவலகம் மீது கடந்த சில நாள்களுக்கு முன்னரும் இத்தகையதொரு கிரனேட் வீச்சுச் சம்பவமும் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.(எ-4)

## இணுவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவரை மோதியதாகக் கூறப்படும் ஹைஏஸ் வானின் சாரதி வானை விட்டுவிட்டு அவ்விடத்திலிருந்து தலைமறைவாகிவிட்டார் என்று தெரிவிக்கப்பட்டது. தலையிழந்து இரத்தம் வெளியேறிய நிலையில் அவ்விடத்தில் துடித்துக்கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் ஓட்டியை அப்பகுதியில் நின்ற சிலர் யாழ்.ஆஸ்பத்திரிக்கு எடுத்துவந்தனர். அப்போது இடைவழியில் அவர் மரணமானார்

இவரது சடலம் யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்த நபர் கண்காணிப்புக் குழு அலுவலகத்தில் கடமையாற்றுபவர் என்றும் தெரியவருகின்றது. (ஐ-4)


**விற்பனைக்கு**

60 மாணவர்களை ஏற்றி இறக்கும் வருமானத்துடன் கூடிய பாடசாலைச் சேவை ஹை ஏஸ் வான் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 17,கோயில் வீதி, யாழ்ப்பாணம்.

**தவறிவிட்டது**

பிரதான வீதி, 7 ஆம் கட்டையடி,சங்கானை என்ற முகவரியைச் சேர்ந்த நவரட்ணம் சுரேஸ்குமார் என்பவரது பேர்ஸ் ஒன்று நேற்றிரவு சங்கானை தபாற்கந்தோருக்கும் கூடத்து அம்மன் கோயிலுக்கும் இடையில் தவறிவிட்டது. இதற்குள் முக்கியமான வெளிநாட்டு ஆவணங்கள் மற்றும் ஒரு தொகைப்பணமும் உள்ளது. கண்டெடுத்தவர்கள் துரைச்சாமி, 7 ஆம் கட்டையடி ,சங்கானை என்ற முகவரியில் ஒப்படைத்துதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

T.P. 0776137962

**கணிதம் O/L**

துரித மீட்டல் வகுப்புகள்

தனியாகவும் குழுவாகவும் கற்பிக்கப்படும்.

(Personal Classes)

By: J. கோகுலவாசன்

99.அரசடி வீதி.

(யாழ். இந்துமகளிர் கல்லூரிக்கு அண்மையில்)

யாழ்ப்பாணம்.

T.P. 222 2525

(20333) (26)

**கணக்கீடு**

2004 A/L

வருமான செலவுக் கணக்கு

ஆரம்பம்:18.07.2003

வெள்ளி 5 p.m.

ஆசிரியர்: இ. வின்சன் B.B.A. HRM.Spl

லக்கி கல்வி நிறுவனம்

(c/28988)

**NEW SCIENCE COLLEGE JAFFNA**

காந்தப்புலம்

SAT,SUN - 6.00-7.00(a.m.)

மின்னியல் (பிரிவு-II)

SAT,SUN - 9.00-10.00(a.m.)

ஆரம்பம்:19.07.2003

PAPER CLASS

(பரீட்சையில் தோற்றிய மாணவர்களுக்கானது)

MON TO FRI

6.00-7.00(a.m.)

ஆரம்பம்:21.07.2003

By. M.கருணாநிதி

**இந்திய சாஸ்திரியார் வருகை**



முதன்முறையாக யாழ்ப்பாணப் புண்ணியபூமிக்கு வருகைதந்துள்ளார்

பரம்பரை ஜோதிடர் புகழ்பெற்ற

S.N.குமாரசாமி

கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத் தடை, தொழில் முன்னேற்றம் இன்மை, கல்வித் தடையா? குழந்தைப் பாக்கியம், தீராத வியாதியா? மற்றும் எந்தப் பிரச்சினைகளுக்கும் நேரில் சந்திக்கவும்.

(காலை 8மணிமுதல் மாலை 8மணிவரை)

ஸ்ரான்லி லொட்ஜ்

இல.711, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

T.P. : 077-6080660, 021-2226188

(யாழ்.இந்துக் கல்லூரிக்கு அண்மையில்)

(28-14-16) (20157)

324 Palaly Rd., Jaffna.

**BIT 1st Semester**

Commence on 19th July at 10 a.m



Special offer for the first 10 Joiners

*50% free in Course Module

*Free ACS Module

*Free to follow Two Diploma Courses

→Printed Notes

→Library Facilities

→Qualified Lecturer Panel

Supported by United Nation Development Project/Jaffna Rehabilitation & Resettlement Project


# மரண அறிவித்தல்கள்

### நாதஸ்வரகான கலாநிதி, கலாசூரி

## கந்தசாமி பத்மநாதன்

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் வண்ணார்பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி பத்மநாதன் 15.07.2003செவ்வாய்க்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தசாமி - பரிமளம் தம்பதிகளின் அருமை மகனும் நாகேஸ்வரியின் அன்புக் கணவரும் ரவீந்திரன், கலைவாணி, கிரிதரன்(கிரிஷன் வீடியோ சென்ரர்), ரஞ்சினி,கனகாம்பரி (ஆசிரியை, யாழ்.பெரியபுலம் மகாவித்தியாலயம்), காலஞ்சென்ற முரளிதரன் மற்றும் பாலேந்திரன்(யாழ்.ஜெயப்பூர் நிறுவனம்) ஆகியோரின் அருமைத் தந்தையாரும் கலைச்செல்வி, சிவகுருநாதன், சிவபுரத்தரசி(ஆசிரியை, கொட்டடி நமசிவாய வித்தியாலயம்), முருகபூபதி, சிவனேஸ்வரநாதன் (ராஜ் இன்டஸ்றீஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் அர்ஜீன், வைஷ்ணவி, அபிராம், விஜித்தா, ஆர்த்திகா, ரஜித்தா, சண்முகேசன், சகானா, கீர்த்தனா, கௌதமன், ராகப்பிரியா ஆகியோரின் பேரனும் காலஞ்சென்ற வரதலட்சுமி, இரத்தினசபாபதி மற்றும் கமலாம்பிகை, பாலசுப்பிரமணியம், விநாயகமூர்த்தி, சிவப்பிரகாசம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.07.2003) வியாழக்கிழமை முற்பகல் 9 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*199/4, கிஸ்னர் ஒழுங்கை,*
*வண்ணார்பண்ணை,*
*யாழ்ப்பாணம்.*
*T.P., 222 3323*

(20376)(14-16-30)

தகவல்: குடும்பத்தினர்

## இராமலிங்கம் கேசவன்

(போர்நிறுத்த கண்காணிப்புக் குழு, யாழ்.அலுவலகம்)

மல்லாகத்தைச் சேர்ந்த இராமலிங்கம் கேசவன் நேற்று (16.07.2003) அகாலமரணமானார்.

அன்னார் இராமலிங்கம் - நாகபூசணி தம்பதிகளின் அன்பு மகனும் ரேணுகாதேவி (ஆசிரியர்,மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை) அவர்களின் அன்புக் கணவரும் அட்ஷயனின் அன்புத் தந்தையும் சுகுமார், சுபாஸ்கரன், செந்தில்குமார், புஸ்பாகரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*புதிய நீதிமன்ற வீதி,*
*மல்லாகம்.*

தகவல்: திருமதி ரேணுகாதேவி கேசவன் (மனைவி)

(C/29010) (29-14-16-30)

## முருகேசு (மாம்பழம்) செல்லத்துரை

சுன்னாகம் செட்டியார் வளவைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு (மாம்பழம்) செல்லத்துரை 12.07.2003 சனிக்கிழமை காலமானார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் தவிர்க்கமுடியாத காரணத்தால் நேற்று (16.07.2003) நடைபெறவில்லை. அந்த இறுதிக்கிரியையானது நாளை(18.07.2003)வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சுன்னாகம் கொத்தியாலடி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*செட்டியார் வளவு,*
*சுன்னாகம்.*

(20390)(30-14-16)

தகவல்: திருமதி செ.சற்குணம் *(மனைவி)*

## ஆறுமுகம் தம்பு

(ஓய்வுபெற்ற அரச பண்ணை முகாமையாளர்,
தலைவர் -கமநலசேவைக்குழு - வேலணை,
தலைவர் - விவசாய சம்மேளனங்களின் சமாசம் - வேலணை)

வேலணை முதலாம் வட்டாரத்தைச் சேர்ந்த ஆறுமுகம் தம்பு 14.07.2003 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.07.2003) வியாழக்கிழமை பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சாட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்லை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நீர்விநியோகத் திட்டவீதி,*
*வேலணை கிழக்கு,*
*வேலணை - 01.*

(20373)(30-14-16)

தகவல்: பாக்கியம் *(மனைவி)*, உமா *(மகள்)*.

## பரமநாதன் சோதிநாதன்

(ஓய்வுபெற்ற X-Ray Technician யாழ்.போதனாவைத்தியசாலை)

யாழ்ப்பாணம், கொட்டடியைப் பிறப்பிடமாகவும் நல்லூரடியை வசிப்பிடமாகவும் கொண்ட பரமநாதன் சோதிநாதன் அவர்கள் 16-07-2003 புதன்கிழமையன்று அதிகாலை இறைவனடி எய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பரமநாதன்-பொன்னம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும் வண்ணார்பண்ணை ,யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த "எவர்சில்வர்" நடராஜா -நாகரத்தினம் தம்பதிகளின் மருமகனும் பாலாம்பிகையின் அன்புக் கணவரும் இரவிச்சந்தர்(நோர்வே), குமுதினி (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் இரகுநாதன் (கனடா), கமலலோஜினி, கதிர்காமநாதன் (ப.நோ.கூ.சங்கம்-யாழ்.), சிவநாதன் (ஹொலண்ட்), தி.மகேஸ்வரி(லண்டன்) ஆகியோரின் சகோதரரும் Dr.சி. நவரட்ணராஜா அவர்களின் சகலனும் தர்மராணி, துரைராஜா(ஓய்வு பெற்ற உதவி மதுவரி ஆணையாளர்), ரூபதேவி, திருச்செல்வம், நீலாம்பிகை ஆகியோரின் மைத்துனரும் சுரேந்திரன்(சுவிஸ்), சாந்தி(நோர்வே), விஜிதா, பிருந்தா, ராஜீவ், யசோ(லண்டன்), பத்மராஜன்(கனடா) ஆகியோரின் மாமனாரும், வித்யா(கனடா), யுகேந்திரா(கனடா), வினோஜா, நிமலேசன் (லண்டன்), நிமலினி(கனடா), நவகோபன்(லண்டன்), ஆகியோரின் பெரிய தந்தையாரும் றொசிற்றா, நிசங்கா, பிரவீண், நீலக்ஷா, விபிர்ஷா, ஆர்த்திகா, ஜோதிக்கா, ரிஷிகா, அஜீவன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.07.2003) வெள்ளியன்று காலை 10 மணியளவில் 125, பருத்தித்துறை வீதி, நல்லூர் என்னும் முகவரியிலுள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக "வில்லூன்றி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு தயவாகக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

*125,பருத்தித்துறை வீதி,*
*நல்லூர்.*

(20392)(14-16-30)

தகவல்: சோ.பாலாம்பிகை *(மனைவி)*

... வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 17.07.2003இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.